Vol.2, Issue 8 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

ஜனவரி 2020

# ரோட்டரி நியூஸ்

INDIA

www.rotarynewsonline.org



## இந்தூர் இன்ஸ்டிட்யூட்

Rotary




இன்ஸ்டிட்யூட் ஒருங்கிணைப்பாளர் RID பரத் பாண்ட்யா மற்றும் தலைவர் T N சுப்ரமணியன்.

புகைப்படம்: ரஷீதா பகத்

# உள்ளே


**12** **சவால்களையும் மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டு முன்னேறுவோம்: மலோனி**
இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில், RI தலைவர் மார்க் மலோனி ரோட்டரி சமாளிக்க வேண்டிய சவால்களைப் பற்றி பேசினார்.

**16** **உலகளாவிய உதவித்தொகைகள் குறித்த TRF கருத்தரங்கு**
ரோட்டரி தலைவர்கள் உலகளாவிய மானிய ஒப்புதல் செயல்முறை குறித்து இந்தூரில் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

**30** **இதயத்திலிருந்து சிந்தியுங்கள் — RIPN மேத்தா**
ரோட்டரி கவர்னர்ஷிப் என்பது DGEக்களுக்கு மனிதகுலத்திற்கு சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பாகும்.

**32** **துணிந்து கனவு காணுங்கள் இந்தூரில் ரொட்டேரியன்களுக்கு RID பாண்ட்யா ஊக்கம்**
அன்பு, இரக்கம் மற்றும் கனவுகளால், ரோட்டரியர்கள் ஒரு வித்தியாசத்தை உருவாக்க முடியும்.

**46** **பெண்கள் சலுகைகளை அல்ல; வாய்ப்புகளைதான் எதிர்பார்க்கிறார்கள்: ஸ்மிரிதி இரானி**
மகளிர் உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்திற்காக மத்திய அமைச்சர் பாடுபடுகிறார்.

**63** **பால் ஹாரிஸின் வீட்டைக் காப்பாற்ற ஒரு வேண்டுகோள்**
ரோட்டரி நிறுவனர் வீடு நிலைத்திருக்க ரோட்டரியர்களின் தாராள மனப்பான்மையை நாடுகிறது.

**64** **தென்னிந்திய ரோட்டரியை நான் மிகவும் வியக்கிறேன்: RIPN சேகர் மேத்தா**
RIPN அதன் சிறந்த சேவை திட்டங்களுக்கு RI மாவட்டம் 3211ஐ பாராட்டுகிறார்.

**68** **இந்தூரில் ரோட்டோர உணவு விருந்து**
இந்தூருக்கு முதல் முறையாக வருகை தருபவர் நகரத்தின் சுவையான தெரு உணவுக்காக சரஃபா பஜாருக்கு செல்ல வேண்டும்.




















**அட்டைப்படத்தில்:** இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் தூர்கா வந்தனம் என்னும் கதக் நடனம்.

**படங்கள்:** V முத்துக்குமரன்

## அழகு பற்றிய பொய்யான நம்பிக்கை

அழகுபற்றிய பொய்யான நம்பிக்கையை உடைத்தல் என்ற ஆசிரியர் குறிப்பு, கருப்பான/பழுப்பான ஒரு தோலும் வியக்கவைக்கும் அளவு அழகாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இந்தியாவில் ஒரு பெண்ணின் அழகு சிவப்பான தோல் நிறத்துக்குச் சமமாகக் கருதப்படுவது உண்மைதான். ஒரு பெண்ணின் ஆளுமையை உருவாக்குவது அவருடைய தோற்றம்மட்டுமில்லை, அவருடைய அறிவு, நகைச்சுவை, அவருடைய கண்களில் தோன்றும் மின்னல், அவருடைய இதயத்திலிருக்கும் கருணை இப்படி ஒரு பெண்ணை மிகச் சிறப்பானவராக்கும் குணங்கள் இன்னும் நூற்றுக்கணக்கில் உள்ளன என்கிறார் ரஷீதா. சமீபத்தில், தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஜோஜிபினி டுன்ஜி என்ற கருப்பழகி, "2019ன் பிரபஞ்ச அழகி"யாக தேர்ந்தெடுக்கப் பட்டபோது, அழகுபற்றிய இந்தக் கருத்து நன்கு நிரூபிக்கப்பட்டது.

அசோக் ஜிந்தால், RC நபா கிரேட்டர் —RID 3090




அழகுபற்றிய தவறான நம்பிக்கையை விளக்கிய ஆசிரியர் குறிப்பைத் தொடர்ந்து, டிசம்பர் மாதத்தில் ஒரு கருப்பினப் பெண் பிரபஞ்ச அழகியாக முடிசூடினார் என்ற செய்தி இந்த கட்டுரைக்கு மேலும் மெருகூட்டியது.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — RID 3150

ஆசிரியர் ரஷீதா பகத் சிறப்பாக எழுதியுள்ள தன்னுடைய ஆசிரியர் குறிப்பில், அழகுபற்றிய ஒரு புதிய பரிமாணத்தைப்பற்றிச் சிந்தித்துள்ளார்.

அழகு என்பது வெறுமனே புறத்தோற்றத்தைமட்டும் சார்ந்திருப் பதில்லை, ஒருவருக்கு உள்ளே இருக்கும் குணங்களையும் சார்ந்து அமைகிறது என்கிற உண்மையை அனைவருக்கும் புரியக்கூடியவகையில் அழகாக எழுதியுள்ளார் ஆசிரியர்.

Dr G சேவியர் ராஜப்பா, RC ராமேஸ்வரம் — RID 3212

ஆசிரியர் குறிப்பில் அழகுபற்றிய விளக்கங்கள் சிந்தனையைத் தூண்டின. எதார்த்தம் என்னவென்றால், நம்முடைய சமூகத்தில் அழகுக்குத் தேவையற்ற முக்கியத்துவம் தரப்படுகிறது. திறன்கள், ஒழுக்கத்தைத் தாண்டி நாம் அதை மதிக்கிறோம். இந்த மனநிலையை மாற்றவேண்டிய நேரம் இது.

அசோக் கட்டாரியா, RC ஸ்ரீ கங்கா நகர் மார்வார் — RID 3090

எனக்குப் பிடித்த புதின எழுத்தாளர்கள் சிலரைப் பட்டியலிட்டுள்ள ஆசிரியர் ரஷீதா, என்னை என்னுடைய கல்லூரி நாட்களுக்கே அழைத்துச் சென்று விட்டார். இப்போது என் வயது 86. அந்தப் புத்தகங்களை மீண்டும் ஒருமுறை படிக்கவேண்டும் என்ற ஊக்கம் எனக்கு உண்டாகியுள்ளது. செவ்வியல் நூல்களை மீண்டும் படிக்கும்போது, ஒவ்வொருமுறையும் அவை நமக்கு ஒரு புதிய மகிழ்ச்சியைத் தருகின்றன என்கிற அவருடைய சொற்றொடரை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்தியாவில் சராசரி ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்கான நலப் பராமரிப்பை வழங்குவதில் உள்ள பிரச்னையைப்பற்றி RI இயக்குநர்கள் பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை நாம் பின்பற்றவேண்டும்.

ஜெய்ஸ்ரீ தற்கொலையைப்பற்றி எழுதியுள்ளார்; உடனடி மன நிறைவை விரும்புகிற, தங்களுடைய முத்தோருடைய அறிவுரையைக் கேட்கப் பொறுமையில்லாத இளைஞர்களிடையே இது ஒரு முக்கியப் பிரச்னையாக உள்ளது.

S முனியாண்டி
RC திண்டுக்கல் கோட்டை — RID 3000

தன்னுடைய ஆசிரியர் பக்கத்தில் ஒரு முக்கியமான சமூகப் பிரச்னையைக்

## அட்டைப்படக் கதை

தற்கொலை என்பது, உதவியைக் கோரும் ஓர் அழைப்பு என்ற ஜெய்ஸ்ரீயின் அட்டைப்படக் கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது.

S நடராஜன், RC கூத்தப்பாக்கம் — RID 2981

தற்கொலையைத் தடுப்பதற்கான உறுதியான தீர்வுகளை ஆலோசகர்கள் டாக்டர் லட்சுமி மற்றும் டாக்டர் தாரா வழங்கியுள்ளனர். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை மிகச்சிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்க்கவேண்டும் என்பதற்காகச் சிறந்த முயற்சி களை எடுக்கிறார்கள். அப்படியிருந்தும், சில பதின்பருவத்தினர் தற்கொலைக்குத் துணிகிறார்கள் என்பது வருந்தத்தக்கது.




இப்பின்னணியில் பார்க்கும் போது, கூட்டுக் குடும்ப அமைப்பு படிப்படியாக மறைந்து கொண்டிருப்பது, இளைஞர்கள் தீவிர நடவடிக்கைகளை எடுப்பதில் ஒரு பங்கை ஆற்றியுள்ளது. குழந்தைகள் வெளியில் விளையாடுவதும் நூல்களை வாசிப்பதும் குறைந்துள்ளது. இளைஞர்கள் செல் ஃபோன்களில், TV திரைகளில் மூழ்கியுள்ளார்கள்.

இளைஞர்களுக்கு ஒரு சமநிலையான மனத்தை வழங்கவேண்டும், இல்லாவிட்டால், மனச்சோர்வும் தற்கொலையும் பெரிய பிரச்னையாகவே இருக்கும். நன்கு சிந்திக்கப்பட்ட, விரிவான, சரியான நேரத்தில் எழுதப்பட்ட கட்டுரைக்காக உங்களுக்கு நன்றி.

S பத்மநாபன், RC மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா — RID 3232

கையாண்டுள்ள ஆசிரியரை நான் பாராட்டுகிறேன். "அழகுபற்றிய தவறான நம்பிக்கை"யை உடைத்தல் என்கிற தலைப்பில், ஒரு பெண்ணின் அழகு அவருடைய தோற்றத்தில் இல்லை, அவருடைய அழகான மனத்திலும் அவர் எப்படி நடந்துகொள்கிறார் என்பதிலும்தான் உள்ளது என்று அவர் வழங்கியுள்ள கருத்துகளை அனைத்து ரோட்டரியன்களும் ஆதரிப்பார்கள்.

உண்மையில், எளிமையும் பணிவும் இயல்பான மனநிலையும்தான் ஒரு பெண்ணின் மிக முக்கியமான அணிகலன்கள், தோலின் வண்ணம் முக்கியமே இல்லை. அனைத்துக்கும் மேலாக, ஒரு பெண் உழைக்கத் தயாராக இருக்கிறார் என்னும் மனோநிலைதான் இன்னும் முக்கியமாகிறது.

மாதவிலக்குபற்றிய ஓர் உரையாடலைத் தொடங்குதல் என்ற தலைப்பில் ஜெய்ஸ்ரீ எழுதியிருக்கும் கட்டுரை, பெண்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுவான சமூகத்தினரிடையே MHM பிரச்னைகளைப்பற்றிய அறிவை உண்டாக்குவதற்காக ரோட்டரியன்கள் சிறந்தமுறையில் பணியாற்றிவருவதைச் சுட்டிக்காட்டுகிறது.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — RID 3080

டிசம்பர் இதழின் முன் உள் அட்டையில், RIPN சேகர் மேத்தா, ராஷி மற்றும் திருவிதாங்கூர் அரண்மனையில் திருவிதாங்கூர் அரச குடும்பச் சகோதரர்களுடைய இரண்டு அழகிய புகைப்படங்களைக் கண்டு மகிழ்ந்தேன். அடுத்த RI சந்திப்பின் போது, ஐநாவுடனான ரோட்டரியின் வரலாற்றுப் பிணைப்புகள் கொண்டாடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஆசிரியர் பக்கத்தில்) ஒரு பெண்ணின் ஆளுமையைப்பற்றிய ஆசிரியருடைய வரையறை மிக உயர்வானது. உடல்நலன் விழிப்புணர்வுபற்றிய RI இயக்குநர்களுடைய செய்திகள் பயனுள்ளவை.

"அடடா இந்தப் பின்னிரவு விமானங்கள்" கட்டுரை மிகச்சிறப்பாக அமைந்திருந்தது! என்னைப்போன்ற இந்தியர்கள் இந்தக் கட்டுரையைப் படிக்கும்போது, நாங்கள் முன்றாந்தரக் குடிமக்களைப்போல் இரவு நேரத்தில் பறக்கவேண்டியுள்ளதை எண்ணி வருந்துகிறோம்.

தற்கொலை என்பது, உதவியைக் கோரும் ஓர் அழைப்பு என்கிற கட்டுரை சுவையாக அமைந்திருந்தது.

மும்பை நிகழ்வொன்றில் RIPN சேகர் மேத்தாவின் பேச்சு, அவர் தொலைநோக்குச் சிந்தனையாளர் என்பதைக் காட்டுகிறது. தன்னுடைய பணிக்காலத்தில் அவரால் தன்னுடைய யோசனைகளை முழுமையாக்க இயலும் என்று நான் நம்புகிறேன்.

ஃபிலிப் முலப்போனெ MT, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — RID 3211

## RIPN பாராட்டு விழா தகவல்கள் சற்று அதிகம்

நவம்பர் இதழில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட RIPN சேகர் மேத்தாவைப்பற்றி அட்டைப்படத்தில் தொடங்கி ஒரு மிகத் தகுதியுள்ள, விரிவான தகவல் தொகுப்பு வழங்கப்பட்டது. அதன்பிறகு, டிசம்பர் இதழிலும் பல இடங்களில் நடத்தப்பட்ட பாராட்டு விழாக்களுக்காக மேலும் பல பக்கங்கள் வழங்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். நம்மில் பலர் அவரை நன்கு அறிந்திருப்பதால், இந்தத் தகவல் அளவு அதிகம் என்று நான் கருதுகிறேன்.

சம்பத்குமார்,
RC கோயம்பத்தூர் எலைட் —RID 3201

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

To revert to **English or Hindi** version please mail to us at *rotarynews@rosaonline.org.*

ரோட்டரி செய்திகளைத் தமிழில் வாசிப்பது எனக்கு மிகவும் ஆர்வ மூட்டுகிறது; பல மாவட்டங்களில் ரோட்டரியன்கள் செய்துவரும் மிகச் சிறந்த பணியைப் பாராட்டச் செய்கிறது.

RC கல்கத்தா செய்த வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் போக்கை அமைக்கும் செயல்பாடுகளைப்பற்றிப் படித்தது எனக்கு மகிழ்ச்சி தந்தது. மகாத்மா காந்தி, தலாய் லாமா போன்ற தலைவர்களை விருந்தினர்களாக வரவேற்றதும், 1927ல் ஹௌரா பாலத்தைக் கட்டுவதற்கான யோசனை யைத் தொடங்கி வைத்ததும் இந்தச் சங்கத்துக்கு மிகவும் பெருமை தரும் விஷயங்களாகும்.

பொன் முத்தையன்,
RC ஆடுதுறை, RID 2981

இளம்பிள்ளைவாதத்தை ஒழித்தல், முழு எழுத்தறிவு பெற்ற இந்தியாவை உருவாக்குதல், ஆப்பிரிக்காவில் தூய நீர் மற்றும் நலப்பராமரிப்பை வழங்குதல் ஆகியவற்றில் ரோட்டரியின் நீண்ட நாள் பங்களிப்புக்காக ரோட்டரிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படவேண்டும் என்ற RIPN சேகர் மேத்தாவின் கனவை நான் ஆதரிக்கிறேன்.

ரோட்டரியின் நட்பு மரங்கள் கட்டுரை, பழ மரங்களை நட்டுள்ள ரோட்டரியன்களை நினைவு கூர்கிறது, அதன் மூலம், ரோட்டரி நட்பையும், இப்படிப்பட்ட செயல்பாடுகள் திரும்பத்திரும்ப கொண்டுவருகிற மதிப்புமிக்க மனிதத்தன்மை மாற்றங்களையும் விளக்குகிறது.

நவீன் ரமேஷ் கார்க்,
RC சுனாம் — RID 3090



# உறவுகளை மேம்படுத்தும் பணிசார்ந்த சேவை

*பாசமிகு ரோட்டரி குடும்பத்தினர்களே...*

உலகெங்கிலுமுள்ள மக்களுக்கு ரோட்டரியில் இணையப் பலவிதமான காரணங்கள் உள்ளன. ஆனால், நான் எந்தக் காரணத்துக்காக ரோட்டரியில் சேர்ந்தேனோ அதே காரணத்துக்காக ஒவ்வோராண்டும் பல புதிய ரோட்டரியன்கள் ரோட்டரியில் சேர்கிறார்கள்: ஏனெனில், ரோட்டரி உங்களுடைய பணிவாழ்க்கைக்கு உதவக்கூடிய ஒரு மிகச்சிறந்த வழி.

பணிசார்ந்த சேவைக்கு ரோட்டரி தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருப்பது, தொழிலில் மற்றும் தொழில்சார்ந்த சேவைகளில் மிக உயர்ந்த நல்லொழுக்கத் தரங்கள், அனைத்துப் பயனுள்ள பணிகளின் மதிப்பை அங்கீகரித்தல், ஒவ்வொரு ரோட்டரியனுடைய பணியையும் சமூகத்துக்கு உதவக்கூடிய ஒரு வாய்ப்பாகக் கண்ணியப்படுத்துதல் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய பணி எதுவாக இருந்தாலும் சரி, அதை நாம் நேர்மையுடன் செய்யும்போது, நான்கு-வழிப் பரிசோதனைக்கு எப்போதும் இணங்கும்போது, நாம் அனைவரும் உலகுக்கு வலுவாகப் பங்களிக்கிறோம்.


ரோட்டரியின் தேவைகளைத் தொழில் சார்ந்த மற்றும் குடும்பப் பணிகளுடன் சமநிலைப் படுத்துவதை, ஒரு தலைவர் என்றமுறையில் என்னுடைய முக்கியத்துவங்களில் ஒன்றாக நான் ஆக்கிக்கொண்டுள்ளேன். ஒரு தன்னார்வலர் பணிக்கு எவ்வளவு நேரம் தேவைப்படுமோ, அதை விட அதிக நேரத்தை வழங்கவேண்டும் என்று எந்த ரொட்டேரியனும் எப்போதும் அழுத்தத்தை உணரக்கூடாது.

நாம் ஒவ்வொரு நாள் அலுவலகத்துக்குச் செல்லும் போதும், நம்முடைய தொழில்சார்ந்த வெற்றியானது ரோட்டரியைப்பற்றிய ஒரு வலுவான செய்தியை உண்டாக்க உதவுகிறது.

இளைய, புதிய உறுப்பினர்களை எட்டும் நம்முடைய முயற்சிகளில் இது குறிப்பிடத்தக்க அளவு முக்கியமாகிறது. பரபரப்பாக வேலைசெய்து கொண்டிருக்கிற இளைஞர்களிடம் சென்று, நம்முடைய அமைப்பில் சேரும்படி நாம் கேட்டால், அவர்கள் தங்களுடைய நேரத்தை, சுதந்தரத்தை விட்டுக்கொடுக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிற அனைத்தையும் இன்னும் சிறப்பாகச் செய்யத் தூண்டுகிற ஓர் அனுபவம் அவர்களுக்கு ஏற்படவேண்டும்.

ரோட்டரியுடன் மிகச்சிறந்த சமநிலையை வழங்குவதில் இன்னொரு நன்மையும் இருக்கும்: பிற ரொட்டேரியன்கள் திட்டங்கள் மற்றும் குழுக்களில் ஒரு தலைமைப் பொறுப்பை ஏற்க முன்வருவதற்கான வாய்ப்புகளை இது உருவாக்கும். அவர்கள் நம்முடைய சங்கங்களில் ஆர்வத்துடன் தொடர்ந்து ஈடுபடுவதையும், வாழ்நாள்முழுக்க ரொட்டேரியன்களாக இருக்கவேண்டும் என்று தூண்டப்படுவதையும் இது உறுதிசெய்யும்.

உலகம்முழுக்க, ரோட்டரி தன்னுடைய பணிசார்ந்த சேவைக்காகவும், அனைத்துத் தொழில் உறவுகளிலும் நாம் இணைக்கிற, காலத்தால் மதிக்கப்படும் மதிப்பீடுகளுக்காகவும் பாராட்டப்படுகிறது. ரோட்டரி உலகை இணைக்கிறது; ரோட்டரியின் பணிசார்ந்த சேவைப் பணியை இன்னும் அதிகத் தொழில்துறைகளில் உள்ள மக்களுக்கு, தங்களுடைய பணிவாழ்க்கையில் வெவ்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்குத் தெரியச்செய்வதன்மூலம், நாம் நம்முடைய நிறுவனத்தை வளர்க்க உதவுவோம், அதை இன்னும் வலுவாக, இன்னும் பன்முகத்தன்மை கொண்டதாக ஆக்குவோம்.



**மார்க் டேனியல் மலோனி**
RI தலைவர்



# என்றும் நினைவில் இருக்கும் ஒரு இன்ஸ்டிட்யூட்

RI இயக்குநர் பரத் பாண்ட்யாவை நிகழ்ச்சி நடத்தாளராகவும், ராஜு (T N) சுப்பிரமணியனை தலைவராகவும் கொண்ட இந்தூர் இன்ஸ்டிட்யூட், பல காரணங்களால் நீண்ட காலமாக நினைவில் நிற்கும் ஒன்றாக இருக்கும். ஒன்று, இந்தூர் அதிகமான மக்களின் பிரயாணப் பட்டியலில் இல்லாத ஒரு ஊர். ஆனால் நீங்கள் விமான நிலையத்திலிருந்து உங்கள் ஹோட்டலுக்கு செல்லும்போது சரி, மெதுவாக நகரத்தைச் சுற்றி பார்க்கும்போது சரி உங்களை வரவேற்கும் அந்த நகரின் சுத்தமும் பசுமையும் உங்களை வியப்பில் ஆழ்த்தும். பரந்த பிரில்லியண்ட் கன்வென்ஷன் சென்டர் பல்வேறு செஷன்களை வெவ்வெறு நேரங்களில் நடத்துவதற்கு மிகவும் சௌகரியமானதாக இருந்தது. அந்த இடத்தின் மிகப் பெரிய வசதி என்னவென்றால் சாப்பாட்டுக்கு போதுமான இடம் இருந்ததால், நிகழ்ச்சியில் பிரதிநிதிகள் குறுகிய இடத்தினுள் தங்களுக்கான உணவை எடுத்துக் கொள்ள மோதிக் கொள்ளும் தேவை ஏற்படவில்லை. 1,000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இருக்கும்போது இது எவ்வளவு முக்கியமானது அல்லது சவாலானது என்பது தெளிவாகிறது. அனைத்து இரவு உணவுகளிலும் பானி-பூரி சேர்க்க நினைத்த மனிதரை ஆசீர்வதியுங்கள்! அது சுவையாக இருந்தது.

பேச்சாளர்களின் தேர்வும் நன்றாக இருந்தது. இந்தூர் தூய்மையான நகர முன்னணியில் முதலிடத்தில் இருப்பதற்குப் பின்னால் நகரும் சக்தியாக இருந்த இந்தூரின் பெண் மேயர் மாலினி கவுர் ஆக இருந்தாலும், அல்லது லாபகரமான விவசாயத்தில் புகழ் பெற்றவர்களை ஒழுங்கமைத்த தியானேஷ்வர் போட்கேவானாலும், விபச்சாரத்தின் பிடியிலிருந்து 5,000 சிறுமிகள்/பெண்களை விடுவித்த திரிவேணி ஆச்சார்யாவாக இருந்தாலும் அல்லது 8 ஆண்டுகளுக்கு முன்பு சாலை விபத்தில் ஒரு காலை இழந்த பின்னும் சர்வதேச பாரா-பூப்பந்து சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற மானசி ஜோஷியாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் உங்கள் இதயத்தில் ஒரு மென்மையான இடத்தைத் தொட்டு உங்கள் மனதில் ஓராயிரம் எண்ணங்களைத் தூண்டினர்.

இந்தூரில் நடந்த உயிரோட்டமான அமர்வுகளில் ஒன்று, மானியங்கள் மற்றும் தலைமைப் பற்றிய குழு கலந்துரையாடலாகும். அதில் பல பங்கேற்பாளர்கள் உலகளாவிய மானியங்களை மறுக்கப்படுவது குறித்து கேள்விகளை எழுப்பி இது "பெரிய, சிறந்த மற்றும் துணிச்சலான திட்டங்களை'' செய்வதற்கான இந்திய ரோட்டேரியர்களின் ஆர்வத்தை குறைக்காதா? என்றும் கவலை தெரிவித்தனர். ரோட்டரி கிளப் ஆஃப் கல்கத்தா 2020 ஜனவரி 1 ஆம் தேதி 100 வயதை எட்டி இந்தியாவில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் குறிப்பாக இந்த நேரத்தில் இந்த விஷயம் குறித்து அவர்கள் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்தனர். வர இருக்கும் TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் மற்றும் குழுவில் இருந்த RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ ஆகியோரிடமிருந்து, அவர்கள் எழுப்பிய கேள்விகளைக் கவனித்து மூன்று மாதங்களுக்குள் விரிவான பதில்களுடன் திரும்பி வருவோம் என்று வந்த விரைவான பதில் பார்வையாளர்களுக்கு திருப்தி அளித்தது.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, பாண்ட்யா, நம் பேச்சாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை சரியாக பின்பற்றாதது பற்றி அறிந்து கொண்டு, ஒரு கழுகு போன்ற கடிகாரத்தைப் பார்த்து கொண்டே எந்த பேச்சாளரும் தனக்கு கொடுக்கப்பட்ட நேரத்தை தாண்டி பேசாதவண்ணம் திடமாக அதே நேரம் மென்மையாக கவனித்துக் கொண்டது நிகழ்வுகளை பெரும்பாலும் குறிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க உதவியாக இருந்தது. அவரும் சுப்பிரமணியனும் அந்த ,இன்ஸ்டிட்யூட் முடியும் தருணங்களில் கண்கள் பனிக்க கட்டித்தழுவிக் கொண்டது, ஒரு மண்டல நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலுக்குச் செல்லும் முயற்சிகள், கடின உழைப்பு பற்றிய ஒரு நுண்ணறிவைக் கொடுத்தது. இதன் வெற்றிக்காக மாதவி அளித்த ஒத்துழைப்பு, எதிர்காலத்தில் வரப் போகும் கவரனர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு மிக முக்கியமான பாடமாக இருக்கும்.

ரஷீதா பகத்

## Governors Council

| | |
|---|---|
| RI Dist 2981 | DG N Manimaran |
| RI Dist 2982 | DG Natesan A K |
| RI Dist 3000 | DG Dr A Zameer Pasha |
| RI Dist 3011 | DG Suresh Bhasin |
| RI Dist 3012 | DG Deepak Gupta |
| RI Dist 3020 | DG M Veerabhadra Reddy |
| RI Dist 3030 | DG Rajendra Madhukar Bhamre |
| RI Dist 3040 | DG Dhiran Datta |
| RI Dist 3053 | DG Harish Kumar Gaur |
| RI Dist 3054 | DG Bina Ashish Desai |
| RI Dist 3060 | DG Anish Shah |
| RI Dist 3070 | DG Sunil Nagpal |
| RI Dist 3080 | DG Jitendra Dhingra |
| RI Dist 3090 | DG Rajeev Garg |
| RI Dist 3100 | DG Hari Gupta |
| RI Dist 3110 | DG Kishor Katru |
| RI Dist 3120 | DG Sanjay Agrawal |
| RI Dist 3131 | DG Ravee Dhotre |
| RI Dist 3132 | DG Suhas Laxmanrao Vaidya |
| RI Dist 3141 | DG Harjit Singh Talwar |
| RI Dist 3142 | DG Dr Mohan Chandavarkar |
| RI Dist 3150 | DG Pandi Sivannarayana Rao |
| RI Dist 3160 | DG Nayan S Patil |
| RI Dist 3170 | DG Dr Girish R Masurkar |
| RI Dist 3181 | DG Joseph Mathew |
| RI Dist 3182 | DG Ramesh B N |
| RI Dist 3190 | DG Dr Sameer Hariani |
| RI Dist 3201 | DG R Madhav Chandran |
| RI Dist 3202 | DG A Karthikeyan |
| RI Dist 3211 | DG Shirish Kesavan |
| RI Dist 3212 | DG S Sheik Saleem |
| RI Dist 3231 | DG Sridar Balaraman |
| RI Dist 3232 | DG G Chandramohan |
| RI Dist 3240 | DG Dr Debasish Das |
| RI Dist 3250 | DG Gopal Khemka |
| RI Dist 3261 | DG Ranjeet S Saini |
| RI Dist 3262 | DG Debasish Mishra |
| RI Dist 3291 | DG Ajay Agarwal |

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

# RI இயக்குனர்

## நேருக்கு நேர்



சமீபத்தில் முடிவடைந்த ரோட்டரி மண்டல மாநாடு, துணிந்து கனவு காணுங்கள்,

இந்தியாவின் தூய்மையான நகரமான இந்தூரில் டிசம்பர் 6–8 நடந்தபோது, அதில் 4,5,6, மற்றும் 7 ஆவது மண்டலங்களின் RI அதிகாரிகள் பெரும் அளவில் கலந்து கொண்டனர். RI தலைவர் மார்க் மலோனி தன் துணைவியார் கேவுடன் பல்வேறு அனுபவம் வாய்ந்த ரோட்டரி தலைவர்களின் நட்சத்திரக் கூட்டமே வந்திருந்தது என்பதோடு அந்தக் கூட்டம் மிகப் பெரிய சாதனைகளை செய்த சாதாரண மனிதர்களையும் அங்கீகரிக்கும் கூட்டமாக இருந்தது. நிறுவனத்தின் அழைப்பாளராக, கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் அதை வளமான மற்றும் திருப்திகரமான அனுபவமாக மாற்ற உழைத்த அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

ஜனவரி ரோட்டரியின் தொழில் மாதம் ஆகும். பல ஆண்டுகளாக ரோட்டரியினர் பெரும்பாலும் தொழில் சேவையை சுருக்கமாக வரையறுக்க போராடி வருகின்றனர். சர்வதேச சேவை உலக அமைதியை ஊக்குவிக்கிறது. ஆனால், தொழில் சார்ந்த சேவை என்பதை வரையறுப்பது பொதுவாக கடினமாக உள்ளது. உண்மையில், தொழில் சார்ந்த சேவையை விட எளிமையானது வேறு எதுவுமே இல்லை. இதுதான் ரோட்டரியை மற்ற சேவை நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. ரோட்டரி மூலம் நம் தொழில்களைப் பயன்படுத்தும் வாய்ப்பின் வழியாக எல்லா இடங்களிலும் உள்ள மக்களுக்கு நம்பிக்கை, கௌரவம் மற்றும் மேம்பட்ட வாழ்க்கை தரத்தை கொண்டுவர முயற்சி க்கிறோம். ஒரு தொழில் திட்டத்தை தொடங்குவதற்கான நேரம்,தொழில் பயிற்சி க்கு இளைஞர்களை ஸ்பான்சர் செய்வதற்கான நேரம், ஒரு தொழில்முறை சுற்றுப்பயணத்தை திட்டமிடுதல் அல்லது பணியில் முன்னேறுவதற்கான திட்டமிடுதல் ஆகியவற்றிர்க்கான நேரம் இது.

தொழிற்துறை சேவையின் ஒரு சிறந்த பகுதி ஒன்று உள்ளது, அது நமது சொந்த அன்றாட வாழ்க்கையை கையாளும் பகுதி, நம்முடைய சொந்த நடத்தை தரங்கள், நாம் நமக்கு மட்டுமே பதிலளிக்க வேண்டிய பகுதி ஆகும். எளிமையாக சொல்வதானால், அந்த பகுதி 4-வழி சோதனையின் கட்டளையை நம் வாழ்வில் பயன்படுவதைக் கையாளும் பகுதியாகும். வார்த்தைகள் மற்றும் செயல்களில் நேர்மை என்பது காலமற்றது மற்றும் முதலில் நாம் இவைகளை நமக்கே செய்து கொள்ள தொடங்க வேண்டும்.

நேர்மை மற்றும் தலைமைத்துவம் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. தலைமை என்பது நம்பிக்கையை உள்ளடக்கியது, மற்றும் நேர்மை நம்பிக்கையைத் தூண்டுகிறது. நல்ல தலைவர்கள் தங்களை பிரபலமாக்கும் செயல்களை விட சரியானதையே செய்கிறார்கள். மகாத்மா காந்தியிடம் துப்பாக்கிகளோ பணமோ இல்லை ஆனால் அவரிடம் கோடிக்கணக்கான மக்களை செயல்பட வைக்கும் திறன் இருந்தது. ரோட்டரி உலகத்தை இணைக்கும் நிலையில் நல்ல குணம் மற்றும் நேர்மையுடன் வழிநடத்துங்கள்.

ரோட்டரியை அனுபவியுங்கள், மகிழ்ச்சி அடையுங்கள்.



**Dr பரத் பாண்ட்யா**
RI **இயக்குனர்,** 2019–21

# களின் செய்திகள்

## பணி சார்ந்த சேவையை ஊக்குவிப்போம்




ஜனவரி மாதத்தில், பணிசார்ந்த சேவை நம்மை அழைக்கிறது. நம்முடைய நான்கு-வழிப்பரிசோதனை உணர்வை உள்ளீர்த்துக்கொண்ட உங்கள் சங்கத்துடைய திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளில் பணிசார்ந்த சேவையைப் பயன்படுத்திக்கொள்வதற்கு மிகச்சிறந்த நேரம் இது.

உங்கள் சங்கச் செயல்பாடுகளில் பணிசார்ந்த சேவையைக் கொண்டுவருவதற்கான ஐந்து வழிகள், இதோ:

- சேவையின் இரண்டாவது அணுகுமுறையைப் பரிசோதிப்பதற்கான ஒரு கூட்டத்தை ஜனவரியில் ஏற்பாடு செய்யுங்கள். இதில் நான்கு-வழிப் பரிசோதனை, தொழில்துறை மற்றும் பணிகளில் ரோட்டரியன்களுடைய அறிவிப்பும் இதில் இடம்பெறலாம்.
- சிறிய வகைப்படுத்தல் உரை நிகழ்ச்சி ஒன்றை அறிமுகப்படுத்துங்கள்; இதில் ஒவ்வோர் உறுப்பினரும் தன்னுடைய பணியைப்பற்றி ஐந்து நிமிடங்கள் பேசலாம்.
- உங்கள் சமூகத்தில், மிக உயர்ந்த நல்லொழுக்கத் தரங்களைத் தக்கவைத்துக் கொண்டபடி மிகச்சிறந்த தொழில்துறைச் சாதனையை நிகழ்த்தியுள்ள ஒருவருக்குப் பணிசார்ந்த விருதொன்றை வழங்குங்கள்.
- சமூகத்தின் பணிசார்ந்த தேவைகளைப்பற்றிய தகவல்களை வழங்கிப் பேசுவதற்காக வல்லுனர்களை அழையுங்கள், அந்தத் தேவைகளை நிறைவுசெய்யக் கூடிய ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். ஆளுமையை வளர்த்தல், இளைஞர்களுக்குப் பணிவாழ்க்கை சார்ந்த தகவல்களை வழங்குதல், சிறிய தொழில்நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல், அல்லது, ஊழியர்களுக்குப் புதிய திறன்களை வழங்கக்கூடிய பயிலகங்களுக்கு ஏற்பாடுசெய்தல்.
- சங்க உறுப்பினர்கள் தங்களுடைய பணிசார்ந்த திறன்களைப் பயன்படுத்தி ரோட்டரியின் தன்னார்வலர்களாகச் சேவை புரியலாம் என்று ஊக்குவியுங்கள்.

**தனிப்பட்டமுறையில் நீங்கள் பணிசார்ந்த சேவையை அமல்படுத்தக்கூடிய ஐந்து வழிகள், இதோ:** ரோட்டரி செயல் குழுவொன்றில் இணைந்து, உலகளாவிய சேவைத் திட்டமொன்றை ஆதரியுங்கள்; உங்களுடைய சொற்கள் மற்றும் செயல்பாடுகளின்மூலம் பிறரை நல்லொழுக்கத்துடன் நடந்துகொள்ள ஊக்கப்படுத்துங்கள்; உள்ளூர்த் தொழில்நிறுவனங்களுடன் சேர்ந்து, இளைஞர்கள் தங்களுடைய பணிவாழ்க்கை இலக்குகளைச் சாதிப்பதற்கான வழிகாட்டுதல் வாய்ப்புகள், பயிற்சி ஊழியர் வாய்ப்புகள் அல்லது எதார்த்தமான மற்ற வாய்ப்புகளை உருவாக்குங்கள்; பிறருடைய தொழில்சார்ந்த முன்னேற்றத்தில் வழிகாட்டுங்கள், அவர்களை ஊக்குவியுங்கள்; பணி தொடர்பான ரோட்டரி நட்புப் பரிமாற்றம் ஒன்றில் பங்கேற்றிடுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் வெற்றிபெற்ற மனிதர்களாக ஆவதுடன் நின்றுவிடாமல், மதிப்புமிக்க மனிதர்களாகவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



**கமல் சங்வி**
RI **இயக்குனர்,** 2019–21


### Board of Permanent Trustees & Executive Committee

| | |
|---|---|
| PRIP Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID Panduranga Setty | RI Dist 3190 |
| PRID Sushil Gupta | RI Dist 3011 |
| PRID Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID Yash Pal Das | RI Dist 3080 |
| PRID P T Prabhakar | RI Dist 3232 |
| PRID Dr Manoj D Desai | RI Dist 3060 |
| PRID C Basker | RI Dist 3000 |
| TRF Trustee Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RID Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RID Kamal Sanghvi | RI Dist 3250 |

**Executive Committee Members (2019–20)**

| | |
|---|---|
| DG Deepak Gupta<br>Chair – Governors Council | RI Dist 3012 |
| DG Nayan Patil<br>Secretary – Governors Council | RI Dist 3160 |
| DG Dhiran Datta<br>Secretary – Executive Committee | RI Dist 3040 |
| DG Ajay Agarwal<br>Treasurer – Executive Committee | RI Dist 3291 |
| DG Rajendra Madhukar Bhamre<br>Member – Advisory Committee | RI Dist 3030 |



### ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

### ROTARY NEWS / ROTARY SAMACHAR

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website: www.rotarynewsonline.org

Now share articles from *rotarynewsonline.org* on WhatsApp.

# District Wise TRF Contributions as on November 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | India | | | | |
| 2981 | 22,176 | 3,411 | 0 | 8,480 | 34,067 | 98 | 2.16 |
| 2982 | 21,013 | 11,205 | 161,362 | 0 | 193,581 | 91 | 3.02 |
| 3000 | 54,571 | 1,014 | 3,703 | 296 | 59,584 | 62 | 1.20 |
| 3011 | 11,234 | 985 | 21,784 | 0 | 34,002 | 50 | 1.41 |
| 3012 | 163,710 | 5,615 | 32,452 | 0 | 201,777 | 141 | 3.80 |
| 3020 | 19,571 | 22,653 | 0 | 12,029 | 54,253 | 72 | 1.91 |
| 3030 | 3,439 | 7 | 1,423 | 0 | 4,869 | 5 | 0.10 |
| 3040 | 7,600 | 45 | 6,997 | 0 | 14,642 | 6 | 0.30 |
| 3053 | 24,748 | 32 | 32,331 | 0 | 57,111 | 59 | 2.04 |
| 3054 | 6,143 | 167 | 35,809 | 0 | 42,119 | 19 | 0.34 |
| 3060 | 32,737 | 56,114 | 66,316 | 11,678 | 166,845 | 256 | 6.33 |
| 3070 | 21,390 | 695 | 9,643 | 0 | 31,727 | 80 | 2.60 |
| 3080 | 40,808 | 4,110 | 12,875 | 1,013 | 58,806 | 79 | 2.30 |
| 3090 | 8,881 | 0 | 0 | 0 | 8,881 | 25 | 1.26 |
| 3100 | 23,210 | 0 | 0 | 0 | 23,210 | 67 | 3.53 |
| 3110 | 15,530 | 1,609 | 0 | 0 | 17,138 | 25 | 0.65 |
| 3120 | 59,357 | 141 | 0 | 0 | 59,498 | 140 | 4.17 |
| 3131 | 156,813 | 868 | 179,769 | 43,000 | 380,451 | 437 | 8.33 |
| 3132 | 3,800 | 292 | 9,538 | 15,000 | 28,629 | 11 | 0.30 |
| 3141 | 230,633 | 7,978 | 262,934 | 66,392 | 567,936 | 527 | 9.61 |
| 3142 | 87,960 | 527 | 80,282 | 0 | 168,769 | 235 | 7.26 |
| 3150 | 50,232 | 6,316 | 23,137 | 170,368 | 250,054 | 360 | 10.10 |
| 3160 | 2,080 | 29 | 0 | 0 | 2,109 | 12 | 0.45 |
| 3170 | 41,324 | 3,974 | 5,388 | 0 | 50,687 | 134 | 2.39 |
| 3181 | 118,150 | 6,509 | 0 | 0 | 124,659 | 231 | 6.47 |
| 3182 | 26,515 | 7,324 | 3,637 | 0 | 37,476 | 123 | 3.94 |
| 3190 | 78,763 | 7,140 | 37,025 | 0 | 122,928 | 474 | 9.94 |
| 3201 | 28,451 | 16,660 | 86,428 | 0 | 131,539 | 57 | 1.06 |
| 3202 | 33,151 | 34,160 | 35,838 | 1,000 | 104,148 | 30 | 0.61 |
| 3211 | 1,588 | 57 | 46,879 | 290 | 48,814 | 9 | 0.20 |
| 3212 | 24,371 | 17,065 | 1,050 | 0 | 42,487 | 41 | 1.02 |
| 3231 | 1,561 | 56 | 3,083 | 0 | 4,700 | 25 | 0.68 |
| 3232 | 24,897 | 30,926 | 150,549 | 7,500 | 213,873 | 88 | 1.68 |
| 3240 | 37,012 | 31,982 | 33,004 | 0 | 101,997 | 132 | 4.35 |
| 3250 | 24,088 | 0 | (85) | 10,000 | 34,003 | 40 | 1.04 |
| 3261 | 4,818 | 0 | 30,770 | 0 | 35,587 | 3 | 0.12 |
| 3262 | 26,524 | 2,164 | 5,507 | 0 | 34,196 | 53 | 1.59 |
| 3291 | 53,196 | 1,532 | 33,250 | 0 | 87,979 | 51 | 1.44 |
| **India Total** | **1,592,044** | **283,363** | **1,412,677** | **347,045** | **3,635,130** | **4,348** | **2.98** |
| 3220 Sri Lanka | 35,937 | 3,900 | 7,371 | 0 | 47,207 | 41 | 2.10 |
| 3271 Pakistan | 3,201 | 2,969 | 20 | 0 | 6,189 | 8 | 0.59 |
| 3272 Pakistan | 9,695 | 992 | 300 | 0 | 10,987 | 39 | 2.36 |
| 3281 Bangladesh | 53,602 | 2,075 | 67,496 | 4,000 | 127,173 | 122 | 2.15 |
| 3282 Bangladesh | 19,813 | 8,807 | 0 | 1,000 | 29,620 | 22 | 0.47 |
| 3292 Nepal | 118,945 | 12,537 | 334,228 | 0 | 465,711 | 215 | 4.62 |
| **South Asia Total** | **1,833,236** | **314,643** | **1,822,093** | **352,045** | **4,322,017** | **4,795** | **2.89** |
| **World Total** | **43,162,709** | **11,420,258** | **10,357,532** | **13,509,897** | **78,450,396** | | |

Source: RI South Asia Office

Please contact us
at the earliest for your

# Classroom Furniture

Requirement for the
upcoming academic year.



**Model ST101C**
Height Adjustable
Single Desk and
Chair set



**Model SPL-DD**
Height Adjustable
Double Desk and 2
Chairs Set



**Model PT-106E**
Kids Double Desk
and 2 Chairs Set



**Model PT106IBIG**
Non Adjustable
Single Desk and
Chair Set



**Model ASCB-MDS**
Medium Joint Desk

Please email us at **sales@panofficesystems.com** to know more about our product range

Webite: **www.panfurniture.com**

Visit or call us at :

pan Office Systems Pvt. Ltd.

**Pan Office Systems Pvt Ltd**
No.3/4, Langford Road, Setlur Street, Bengaluru - 560 025
Phone : **080-26684821, 080-26687695**
Mobile : **9341221125**

# சவால்களையும் மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டு முன்னேறுவோம்: மலோனி

ரஷீதா பகத்

இந்தூர் சந்திப்பின் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய RI தலைவர் மார்க் மலோனி, 'ரோட்டரி உலகை இணைக்கிறது', அல்லது ரோட்டரியை வளர்த்தல் ஆகிய அவருடைய கருத்துகளை அவர் தொடர்ந்து வலியுறுத்திவந்தபோதும், அவரைப் பொறுத்தவரை இவை வெறும் வாசகங்கள் இல்லை என்று தெளிவுபடுத்தினார். ரோட்டரியை வளர்த்தல் என்பது வெறுமனே ஓராண்டில் நிறைவடைந்துவிடுகிற விஷயம் இல்லை. ஆனால், நாம் இப்போதே பணிசெய்யத் தொடங்கினால் நிறைய விஷயங்களைச் சாதிக்கலாம். ரோட்டரி உலகை இணைக்கிறது என்று நான் சொன்னால் உறவுகளில் முதலீடு செய்வது, நீடித்து நிலைக்கும் தீர்வுகளை உருவாக்குவதற்காகத் தன்னுடைய வலைப்பின்னல்களை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்று அறிந்திருப்பது ஆகியவற்றின் மூலம் ரோட்டரி அதைச் சாதிக்கிறது. நம்முடைய திட்டங்கள் மற்றும் நம்முடைய சங்கங்களிலிருந்து கிடைக்கும் அனுபவங்களின்மூலம் நாம் எப்போதும் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கிறோம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக, சேவைத் தலைமைக்கான ஒரு புதிய, மனிதர்களுக்குள் இடையிலான இணைப்புகளில் வேரூன்றிய மாதிரியை ரோட்டரி முன்வைத்தது, அதை வழிநடத்திச்சென்றது. இன்று, அந்த இணைப்புகள் ஒரு பெரிய வலைப்பின்னலாகி உலகெங்கும் பரவியுள்ளன, பண்பாட்டு, மொழி, தலைமுறை மற்றும் புவியியல் எல்லைகளுக்கிடையே பாலம் அமைக்கின்றன. இவை அனைத்தும் சேர்ந்து, இன்னும் மேம்பட்ட ஓர் உலகுக்கான தொலைநோக்கொன்றை உருவாக்கியுள்ளன.

நம்முடைய வேறுபாடுகளை மறந்து, ஆழமான, பொருளுள்ள வழிகளில் உரையாடவேண்டும் என்று ரோட்டரியினரை வரவேற்ற RI தலைவர், ரோட்டரி என்னும் அதிசயம், உலகையும், அதன் மக்களையும் இணைக்கிறது என்றார். இந்த மக்களை நாம் வேறுவிதத்தில் சந்தித்திருக்கவே மாட்டோம், நாம் கற்பனை செய்ததை யெல்லாம் விட அதிகமாக அவர்கள்

*வித்யா, இன்ஸ்டிட்யூட் தலைவர் T N சுப்ரமணியன், நொபுகோ கிட்டா, TRF அறங்காவலர் செய்ஜி கிட்டா, RID பரத் பாண்ட்யா, RI தலைவர் மார்க் மலோனி, கேய், மாதவி, ராஷி, RIPN சேகர் மேத்தா, சோனல், RID கமல் சங்வி, TRF அறங்காவலர்கள் ஜெனிபர் ஜோன்ஸ் மற்றும் குலாம் வஹன்வதி.*



# ரோட்டரி எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்போம்

தொடக்க விழாவில் ஒரு தீவிரமான, சிந்தனையைத் தூண்டும் சொற்பொழிவை நிகழ்த்திய RI தலைவர் மார்க் மலோனி, ரோட்டரி சந்திக்கும் சவால்களை எப்படிச் சமாளிப்பது என்பதுபற்றிப் பேசினார். ஒவ்வோராண்டும் அதே பிரச்னைகளைப்பற்றி வெவ்வேறு வழிகளில் நாம் பேசிக் கொண்டிருக் கிறோம் என்றார். உலகின் சில பகுதி களில், எடுத்துக்காட்டாக, இந்தியாவிலும் ஆசியாவிலும் ரோட்டரி மிக விரைவாக வளர்கிறது. ஆனால், மற்ற பகுதிகளில் அவ்வாறு வளர்வதில்லை. நம்மைவிட்டு விலகும் உறுப்பினர்களுக்குப் பதிலாக இன்னும் அதிக உறுப்பினர்களைக் கொண்டுவருவது இந்தப் பிரச்னைக்குத் தீர்வாகாது. ஓட்டை உள்ள வாளியில் இன்னும் அதிக நீரை ஊற்றினால் என்ன பயன்? நாம் பிரச்னைக்கான மூல காரணத்தைச் சரிசெய்யவேண்டும்: உறுப்பினர்களுடைய ஊடாடல், சமநிலையில் இல்லாத உறுப்பினர் விகிதம் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். நாம் சில அடிப்படை மாற்றங்களை நிகழ்த்தவேண்டும். பன்முகத்தன்மை கொண்ட உறுப்பினர் களைச் சேர்த்து ஊடாடச் செய்வதற்கு என்னென்ன தடைகள் உள்ளன என்பது நமக்குத் தெரியும். அந்தத் தடைகளைச் சரிசெய்வதற்காகச் செயலில் இறங்க வேண்டிய நேரம் இது.''

இதன் மூலம், அதிக உறுப்பினர் மாதிரிகள் உண்டாகும், ஏற்கெனவே உள்ள சங்கங்கள் இப்போதைய தேவைகளை நிறைவுசெய்யாத இடங்களில் அதிக ரோட்டரி மற்றும் ரோடராக்ட் சங்கங்களை உருவாக்குவதற்கான புதிய வழிகள் உண்டாகும்.''

ரோட்டரியின் வீச்சை விரிவாக்குவது என்பது, புதிய செயல் திட்டத்திலுள்ள நான்கு இலக்குகளில் ஒன்றுமட்டுமே. மற்ற மூன்று: நம்முடைய தாக்கத்தைப் பெருக்குவது, பங்கேற்பை மேம்படுத்து வது மற்றும், தங்களுடைய குரல் கேட்கப்படவேண்டும், தங்களுக்குச் சேவை வழங்கப்படவேண்டும் என்று எண்ணும் அந்தப் பங்கேற்பாளர் களுடைய தேவைகளை நிறைவு செய்வது. அவர்கள் பொருத்தமான, நிறைவை வழங்குகின்ற அனுபவங் களை நாடுகிறார்கள். அவை அவர் களுக்குக் கிடைப்பதை நாம் உறுதி செய்யவேண்டும். அதே நேரத்தில், ரோட்டரியைக் குடும்பங்களுக்கு அதிகம் ஏற்ற அமைப்பாக மாற்றவேண்டும்.''

நிறைவாக, நம்முடைய மாறக் கூடிய திறனையும் நாம் பெருக்குவது முக்கியம். ரோட்டரியன்கள் தங்களுடைய பணிவாழ்க்கையில் வெற்றியடைவதன்மூலம் இதை ஏற்கெனவே நிரூபித்துள்ளார்கள். நம்முடைய அமைப்புக் கொள்கைகளில் புதிய அணுகுமுறைகளைக் கொண்டு வருவதன் மூலம், நாம் யார் என்கிற நம்முடைய உணர்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. நாம் தொழில்சார்ந்த பணிகளை மதிக்கவேண்டும்; ரோட்டரித் தலைமை என்பது ஒரு முழு நேரப் பணியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தங்களுடைய பணிவாழ்க்கைகளைக் கட்டமைத்துக் கொண்டிருக்கும் இளம் மக்களுடைய நேரம், பொறுப்புகளை மதிப்போம். பலவிதமான குரல்களில் நம்முடைய உரையாடல்களைத் திறந்துவைப்போம். நாம் எவ்வாறு இயங்குகிறோம் என்பதைத் தன்னம்பிக்கையுடன் எளிமைப்படுத்துவோம். நம்முடைய அடுத்த 114 ஆண்டுகளில், மாற்றத்துக்கு முன்பாக நாம் நிற்போம், அதன்மூலம் நமக்கு நாமே உண்மையாக இருப்போம்.''



நம்மைப்போன்றவர்கள் என்பதை உணர்ந்திருக்கவேமாட்டோம் என்று விளக்கினார். ரோட்டரி நம்மை நம்முடைய சமூகங்களுடன், தொழில் வாய்ப்புகளுடன், நம்முடைய உதவி தேவைப்படும் மக்களுடன் இணைக்கிறது. இந்த வலைப்பின்னலை ரோட்டரியினரின் ஆற்றல், அர்ப்பணிப்புணர்வுடன் இணைக்கும் போது, கிட்டத்தட்ட மாயாஜாலத்தைப் போன்ற சிறந்த முடிவுகள் கிடைக்கின்றன. நாம் செயல் வீரர்கள், உலகை மாற்றும் திறன் நம்மிடம் உள்ளது. அதற்குக் காரணங்கள், நம்முடைய அடிப்படைப் பண்புகள், ரோட்டரி நமக்குத் தரும் அனுமதி.

ஆனால் எந்தவொரு தொலை நோக்குப் பார்வையையும் நிறை வேற்ற வேண்டுமென்றால், ரோட்டரி இணைப்புகள் என்கிற அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்ட ஒரு திட்டம் தேவை. இந்த ஆண்டு, நாம் ஒரு புதிய செயல் திட்டத்தைத் தொடங்கவுள்ளோம். அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தத் திட்டம் நம்முடைய வீச்சை விரிவாக்கும், நம்முடைய தாக்கத்தை மேம்படுத்தும், நம்முடைய பங்களிப்பை, ஊடாடலைப் பெருக்கும், நம்முடைய மாறிக்கொள்ளும் திறனைப் பெருக்கும். இத்திட்டத்தால், ரோட்டரி எப்படி உலகை இணைக்கிறது என்பது உயிரோட்டமாகத் தெரியும். அத்துடன், ரோட்டரி சந்திக்கும் சவால்களைப்பற்றிய தெளிவான பார்வையையும் இந்தத் திட்டம் கொண்டிருக்கிறது. தோழமை, நேர்மை, பன்முகத்தன்மை, சேவை மற்றும் தலைமை ஆகிய நம்முடைய வரலாற்று மதிப்பீடுகளில் இது வேரூன்றியுள்ளது என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

இப்புதிய செயல் திட்டம், மனித இணைப்புகளின் மதிப்பையும் அங்கீகரிக்கிறது. 'தொழில்நுட்பமானது இணைவதை உண்மையில் கடினமாக் கக்கூடிய' இன்றைய சூழலில், இது மிக முக்கியமாகிறது. ரோட்டரியினருடைய மிகச்சிறந்த தொழில்வல்லமைத் திறனை இந்தத் திட்டம் பயன்படுத்திக் கொள்கிறது, தங்களுடைய நேரத்தை எப்படிச் செலவிடுவது, யாருடன் செலவிடுவது, தங்களை ஊக்குவிப்பது என்ன என்பனவற்றில் இளம் தலைமுறையினர் மாறுபட்ட எண்ணங்களைக் கொண்டுள்ளார்கள் என்பதை மதிக்கிறது.

இன்னும் பெரிய தாக்கத்தை உருவாக்குவதற்கான ரோட்டரியினரின் திறன், அவர்களுடன் இன்னும் அதிக மக்கள் கை கோப்பதைச் சார்ந்திருக்கிறது. ரோட்டரியை இன்னும் பெரிதாக, அதிகப் பன்முகத் தன்மை கொண்டதாக ஆக்குவதன் மூலம், இன்னும் பரந்த, இன்னும் வலுவான கதையை நாம் சொல் கிறோம், உலகம் இன்னும் சிறப்பாக மாறலாம் என்கிற நம்பிக்கையை மக்களுக்கு அளிக்கிறோம். இது ஒரு தொடர் சுழலை உருவாக்கும், அதன்மூலம் இன்னும் அதிக மக்கள் நம்முடைய மிகச்சிறந்த வெற்றியில் பங்கேற்க விரும்புவார்கள், நம்முடைய தொலைநோக்கைப் பகிர்ந்துகொள் வார்கள் என்றார் மலோனி.

அதிக உறுப்பினர்கள் சேர்ந்தால், சேவைத் திட்டங்களைச் செய்வதற்கு அதிகக் கைகள் கிடைக்கின்றன என்றுமட்டும் பொருள் இல்லை, பிரச்னைகளைத் தீர்க்க இன்னும் அதிக மூளைகள் கிடைக்கின்றன.

மாற்றத்துக்கேற்ப ரோட்டரி தன்னைத் தயார்செய்துகொண்டாலும் (காண்க: பெட்டிச்செய்தி) தன்னுடைய வரலாற்று உறவுகளை அது பாதுகாக்க



ஜெய்ஸ்ரீ



இன்ஸ்டிட்யூட் துவக்க விழாவில் RI தலைவர் மலோனி, கேய் TRF அறங்காவலர் கிட்டா, RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி.

வேண்டும். எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகள் அமைப்புடன் ரோட்டரிக்குள்ள உறவு. நம்முடைய கவனப் பகுதிகளின் வழியாக நாம் செய்கிற பணிக்கும், மிகச்சிறந்த நோக்கங்களுடன் ஐநா செயல்படுத்தி வருகிற நீடித்திருக்கும் வளர்ச்சி இலக்குகளுக்கும் நடுவில் பல ஒற்றுமைகள் உள்ளன.

ஐநா தொடங்கியபோதும் ரோட்டரி இருந்தது; அழிவின் விளிம்பிலிருந்து உலகம் தன்னைத்தானே காத்துக் கொண்ட போதும், அது மீண்டும் கட்டமைக்கப்பட்டபோதும் ரோட்டரி அங்கிருந்தது.

விரைவில், ஐநா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. இந்த நேரத்தில், ஐநாவுடனான தன்னுடைய உறவைக் கொண்டாடும் வகையில் ரோட்டரி நான்கு சிறப்பு நிகழ்வுகளை நடத்தும். பாரிஸ் மற்றும் ரோமில் நடைபெறும் தலைமைக் கருத்தரங்கங்கள், ஹோனலூலு மாநாட்டுக்கு முன்பாக நடைபெறவிருக்கும் நிறைவுக் கொண்டாட்டம் இதில் உண்டு.

இந்த உறவு, நாம் ஒன்றாகச் சேர்ந்து உலகுக்குச் சேவை புரிவது எப்படி என்பதற்கான ஓர் எடுத்துக் காட்டாகும். நாம் தனித்தனியாகப் பணியாற்றினால், அனைவருக்கும் தண்ணீர் வழங்குவது, பசிக் கொடுமையைத் தீர்ப்பது அல்லது போலியோவை அகற்றுவது ஆகியவை நம்மால் இயலாது. ஆனால், நாம் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றினால், இவற்றையெல்லாம் சாதிக்கலாம்.

நம்முடைய பெருமைமிக்க பண்பாட்டை நாம் பயன்படுத்திக் கொள்வோம்; இன்னும் 114 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வெற்றிபெறுவோம். ஏனெனில், நாம் மாற்றத்தை எண்ணி அஞ்சுவதில்லை என்று தன்னுடைய பேச்சை நிறைவுசெய்தார் மலோனி.■

ராஷி மேத்தா கேய் மலோனியிற்கு வாழ்த்து தெரிவிக்கிறார். வித்யா மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் T N சுப்ரமணியன், RIPN சேகர் மேத்தா, மாதவி மற்றும் RID பரத் பாண்ட்யா உடன் உள்ளனர்.

படங்கள்: ரஞ்ஜித் பத்ரா



# உலகளாவிய உதவித்தொகைகள் குறித்த TRF கருத்தரங்கு

ரஷீதா பகத்

பார்வையாளர்களின் பங்கேற்பு, ஈடுபாடு மற்றும் அநேக உயிரோட்டமான பரிமாற்றங்களை நீங்கள் தெளிவாக பார்க்கக்கூடிய இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் நடக்கும் மிகவும் கலகலப்பான மற்றும் உற்சாகமான அமர்வுகளில் ஒன்றான இந்த அமர்வானது TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி தலைமையில் நடக்கும் TRF கருத்தரங்கில் 'உதவித்தொகைகள் மற்றும் பொறுப்பு' பற்றிய குழு விவாதமாகும்.

குழுவில் இருந்த வருமாண்டின் அறங்காவலர் தலைவர் PRIP KR ரவீந்திரன் அவர்கள் TRF உதவித் தொகைகளுடன் சேவை திட்டங்களைச் செய்வதில் நிலைத்தன்மை மற்றும் பொறுப்பு ஆகிய இரண்டு குறித்தும் வலியுறுத்தினார். ஒரு முதலாளியானவர் பணத்தையும் பிற மதிப்பு மிக்க பொருட்களையும் எளிதில் அடையும் விதத்தில் விட்டுச் சென்றால் அல்லது சரியான கணக்குகள் பராமரிக்கப்படாமல் ஒரு வீட்டிற்கு ஷாப்பிங் செய்யுமாறு ஒரு ஓட்டுநரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால், வீட்டு வேலைக்காரர்களை உண்மையில் குறை கூற முடியாது என்று ஒரு எடுத்துக்காட்டுடன் அவர் கூறினார். உங்கள் கவனக்குறைவினால் நீங்கள் பணத்தை இழப்பீர்கள் மற்றும் அந்த வீட்டு வேலைக்காரர் அல்லது ஓட்டுநர் பணிநீக்கம் செய்யப்படலாம்.

இதே போல, திட்டங்கள் தவறாகும் போது, பொறுப்பிலுள்ள ரோட்டரியினர் மீது குற்றம் சாட்டப் பட்டது, ஆனால் நான் DRFC மற்றும் DG மீது மிகப் பெரிய பொறுப்பை வைப்பேன். DRFC யினுடைய கையெழுத்தில்லாமல் எந்த திட்டமும் செய்யப்படுவதில்லை, மேலும் தனது மாவட்டத்தில் என்ன திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை DG அறிந்துகொள்ள வேண்டும். தனது ரோட்டரியினரும் பொதுமக்களும் கொடுத்த பணத்திற்கு அவர்தான் பொறுப்பாவார். பணம் சரியாக செலவழிக்கப்படுவதை உறுதிப்படுத்த DG மற்றும் DRFC இருவருக்கும் பொறுப்புள்ளது, மேலும் அறிக்கைகள் சரியானவை என்பதை DRFC உறுதிப்படுத்த வேண்டும்.

அவரது செய்தி மிகவும் தெளிவாக இருந்தது. ரோட்டரி கேடரின் தலைவரான, மற்றொரு குழு உறுப்பினரான PRID மனோஜ் தேசாய் அதன் பங்கை விளக்கினார்: நாங்கள் TRFக்கு எங்கள் நேரத்தையும் நிபுணத்துவத் தையும் கொடுக்க தன்னார்வமாக முன் வந்துள்ள 700 ஆலோசகர்கள் அடங்கிய குழுவாக இருக்கிறோம். TRFக்கு உறுதியான ஆதரவை வழங்குகிறோம். இந்தியாதான் அதிக எண்ணிக்கையிலான 90 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முதல் கருத்தரங்கு மார்ச் மாதத்தில் நடைபெறும், இதற்கு 50 பேர் பதிவு செய்துள்ளனர்.

பெரிய மற்றும் வலுவான திட்டங்களைத் திட்டமிட்டு, செயல் படுத்துமாறு ரோட்டரியினரை அவர்கள் வலியுறுத்துகின்றனர்; பல மாவட்டங்கள் அவர்களை TRF போலீஸ்காரர்களாக கருதுகின்றன!

அவரை பண மோசடி தடுப்பு நிபுணர் என்று வர்ணித்த வஹன்வதி, TRF மானியங்களில் பொறுப்பு பிரச்சினைகள் குறித்து பேசுமாறு RISAOவைச் சேர்ந்த ராஜேஷ் ஆனந்திடம் கேட்டுக் கொண்டார். உண்மையான பொறுப்புப் பணியானது

*RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, வருமாண்டு TRF தலைவர் K R ரவீந்திரன், அறங்காவலர் சேய்ஜி கிட்டா, RI தலைவர் மார்க் மலோனி, RIPN சேகர் மேத்தா, PRIP ராஜேந்திர சாபு மற்றும் கல்யாண் பானர்ஜி.*





*உலகளாவிய மானியங்கள் குறித்த கருத்து பரிமாற்றத்தில்* RI *தலைவர் மலோனி, மார்கரிட்டா வ்யூகோ,* TRF *அறங்காவலர் ஜெனிபர் ஜோன்ஸ், நொபுகோ, அறங்காவலர் கிட்டா, உஷா சாபு, வானதி ரவீந்திரன்,* PRIP *ராஜேந்திர சாபு,* PRIDs P T *பிரபாகர், பாண்டுரங்க செட்டி மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*

தற்போதைய RI தலைவர் மார்க் மலோனி மற்றும் கடந்த அறங்காவலர் தலைவர் பாப் ஸ்டீவர்ட்டின் மூளையில் உதித்த கருத்து என்று ஆனந்த் கூறினார். திட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் மிதமிஞ்சி செயல்படுதல் காரணமாக பொறுப்புப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இது சமூக மதிப்பீடு இல்லாத இடங்களில் அடிக்கடி கவனிக்கப்படும் ஒரு சவாலாகும், என்று அவர் கூறினார். மேலும், பயனாளி அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஊக்குவியுங்கள்.

திட்டத்தின் நிலைத்தன்மை மற்றும் முக்கியத்துவம் மானிய ஒப்புதலிற்கு மற்றொரு முக்கிய காரணியாக உள்ளது என்று ரவீந்திரன் கூறினார். சில நேரங்களில் நிதிகள் சரியாகப் பயன்படுத்தப்பட்டன, அனைத்து ரசீதுகளுக்கும் பணம் செலுத்தப்பட்டது, எதுவும் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் முடிந்த பிறகு, திட்டம் திட்டமிட்டபடி பயனுள்ளதாக இல்லை என்று கண்டறியப்பட்டது, ஏனென்றால் உள் தேவைகளைப் பூர்த்தி செய்ய திட்டத்தின் திட்டமிடல் போதுமானதாக இல்லை. தண்ணீர் விநியோகம் இல்லாத பள்ளிகளில் கை கழுவும் நிலையங்கள் அமைத்தல் அல்லது வடிகால் நீர் தடையில்லாமல் பாயாத இடத்தில் கழிப்பறை கட்டுதல், இதனால் மாணவர்கள் அதைப் பயன்படுத்த இயலாது; அல்லது ஆசிரியர்கள் இல்லாததால் வகுப்புகளை நடத்த முடியாத பள்ளிக்கு பெஞ்சுகளை கொடுத்தல் போன்ற சம்பவங்களை அவர் உதாரணமாகக் கூறினார்.

இலங்கையில் ரோட்டரி கர்ப்பப்பை புற்றுநோயை நீக்குவதற்கான திட்டத்தில், TRF பணத்தின் மூலம் DNA சோதனை இயந்திரத்தை தந்தது, இது பெண்கள் வெறுக்கும் பேப் ஸ்மியர் சோதனையிற்கு மாற்று வழி, ரோட்டரி அளித்த முதல் கட்ட நுகர்வுப் பொருட்கள் முடிந்த பிறகு, அரசாங்கம் அவற்றை மீண்டும் நிரப்பும் என்று அரசாங்கத்திடமிருந்து உத்தரவாதம் கிடைத்த பிறகே அந்த திட்டத்தை ரோட்டரி செய்தது. இல்லையென்றால் இந்தத் திட்டம் படுதோல்வி அடைந்திருக்கும்.

TRF உலகாளவிய உதவித்தொகை விண்ணப்பங்களின் ஒப்புதல்கள் தொடர்பாக இந்தியாவுக்கு பொருத்தமான சில முக்கியமான பிரச்சினைகளை RIPN மேத்தா எழுப்பினார். உலகளாவிய உதவித்தொகைகளுடன் தொடர்பு உடைய பிரச்சினைகளை பார்வையாளர்களுக்குள்ளிருந்த மற்றவர்கள் எழுப்பிய போது இது பல ரோட்டரியன்கள் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்தியாவில் இருந்து வரும் விண்ணப்பங்களுக்கு குறிப்பாக அதன் நூற்றாண்டில் TRF அனுமதியளிக்க வில்லை என்று சிலர் கருதினர்.

இந்தியாவில் தேவைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்த ஒரு நல்ல புரிதல் தேவைப்படுகிறது என்பதை அவர் வலியுறுத்தினார். ஒரு அளவு அனைவருக்கும் பொருந்தாது என்று நீங்கள் சொன்னீர்கள், அதே போல எல்லா திட்டங்களிலும் ஒரே தவறு செய்யப்படுவதில்லை. நாங்கள் உலகில் பாதி எண்ணிக்கையிலான திட்டங்களை செய்கிறோம். நமது மண்டலங்களிலுள்ள ரோட்டரியன்கள் மிகச் சிறந்த பணிகளைச் செய்கின்றனர், என்றார்.





RIPN சேகர் மேத்தா பேசுகையில் உடன் PRIP கல்யாண் பானர்ஜி, பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ, RI தலைவர் மார்க் மலோனி, மார்கரிட்டா மற்றும் அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ்.



TRF அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன் Rtn ரவிசங்கர் மற்றும் DG தீபக் குப்தா.



RISAO வை சார்ந்த ராஜேஷ் ஆனந்த், வருமாண்டு TRF தலைவர் K R ரவிந்திரன் மற்றும் PRID மனோஜ் தேசாய்.

தேவை மதிப்பீட்டை எவ்வாறு செய்வது என்பது பற்றி ரோட்டரியன்களுக்கு ஒரு நல்ல புரிதல் தேவைப்பட்டால், தேவை மதிப்பீட்டின் சிறந்த அம்சங்களை விவரிக்க ஒரு கருத்தரங்கு நடத்தப்படலாம் என்று அவர் ஏற்கனவே அறங்காவலர் வஹன்வதியுடன் கலந்தாலோசித்துள்ளார். ஆனால் பல TRF உதவித் தொகை விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் மறுப்பது ரோட்டரியன்களின் உத்வேகத்தைப் பாதிக்கும் என்று அவர் கூறினார்.

இந்தியாவில் ரோட்டரி தனது 100 வது பிறந்தநாளைக் கொண்டாடும் ஆண்டில் இது மிகவும் பொருத்தமானது, இது அடுத்த ஆண்டு மீண்டும் வராது, அதேநேரத்தில் 350 மில்லியன் டாலர் மதிப்புள்ள சேவைத் திட்டங்களைச் செய்வதற்கு DGக்கள் உறுதியளித்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

(சில சந்தர்ப்பங்களில் TRF அறங்காவலர்கள் சிந்தித்த விதங்களிலும், சேவை திட்டங்களுடன் இணைக்கப்பட்ட ரோட்டரியன்கள் எழுப்பிய கேள்விகளிலும் ஒரு தத்துவ வேறுபாடு இருந்தது என்று ரவீந்திரன் பின்னர் ரோட்டரி நியூஸுக்கு விளக்கிக் கூறினார். உதாரணமாக, பத்து கழிப்பறைகள் தேவைப்படும் ஒரு பள்ளிக்கு, ஒரு கழிப்பறை தேவைகள் அளவை பூர்த்தி செய்யாது என்பதனால் ஒரு கழிப்பறையை வழங்காது மற்றும்

ரோட்டரியன்களின் நிதி அதிக தேவையுள்ள இடங்களில் சிறப்பாக செலவழிக்கப்படும் என்று அறங்காவலர் நினைக்கிறார். மறுபுறம், கழிப்பறையே இல்லாமல் இருப்பதை விட ஒரு கழிப்பறை சிறந்தது என்ற எதிர் கண்ணோட்டமும் உள்ளது! இது அறங்காவலர் குழு மட்டுமே பரிசீலித்து செய்யக் கூடிய ஒரு முடிவாகும். அந்த விதிவிலக்கை ஏற்படுத்துவது ஊழியர்களின் களத்தில் இல்லை.)

அறங்காவலர் வஹன்வதி மேலும் கூறுகையில்: நமக்கு $21.5 மில்லியன் GGக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; இரண்டாவது நாடான தைவானுக்கு $4.5 மில்லியன் மட்டுமே கிடைத்துள்ளது. என்று அவர் கூறினார்.

மறுபுறம், உதவித்தொகைகளுக்கு விரைவாக ஒப்புதல் அளிப்பதை ஆதரித்து சில குரல்கள் எழுப்பப்பட்டன, என் அனுபவம் என்னவென்றால், எவன்ஸ்டனில் உள்ள ஊழியர்கள் மிகவும் உதவியாக உள்ளனர்; என்று அவர்களை வழிநடத்திய PRIP ராஜேந்திர சாபூ கூறினார்.

ஒரு அமைப்பாக TRF மற்றும் RI தலைமை ரோட்டரியன்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதலிளிக்கவில்லை என்றால், மேடையில் அமர்ந்திருந்த பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ அவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் அடுத்த மூன்று மாதங்களுக்குள், நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளை நான் தனிப்பட்ட முறையில் விசாரித்து, வஹன்வதிக்கு ஒரு அறிக்கையை வழங்குவேன் என்றார்.

நீங்கள் எழுப்புகிற கேள்விகளுக்கு என்னிடம் உடனடியான பதில்கள் இல்லை ஆனால் இந்த விவாதத்தில் கலந்துகொள்வது மிகவும் பயனுள்ளளதாக இருந்தது, ஏனென்றால் இந்தியாவில் GGக்கள் தொடர்பான ஒரு பிரச்சினை உள்ளது என்று ஜான் ஹ்யூகோ கூறினார். ஒரு நல்ல புரிதலைப் பெறுவதாகவும், மற்ற



TRF*அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன் வருமாண்டு* TRF *தலைவர் ரவிந்திரன்.*

பிராந்தியங்களுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் உதவித்தொகைகள் நிராகரிக்கப்படுகிறதா என்பதை கண்டுபிடிப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

ஒரு முக்கியமான எண்ணிக்கையை வெளிப்படுத்திய அவர், உலகளவில் 90 சதவீத GGக்கள் ஒப்புதல் பெறுகின்றன, ஆனால் இந்தியாவில் ஒப்புதல் விகிதம் 50 சதவீதமாக இருந்தால், அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை, அதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பேன். ஊழியர்கள் GGக்களை மதிப்பீடு செய்யும் போது சாத்தியமான அனைத்திற்கும் ஒப்புதலளிப்பதும், இல்லையென்றால் மறுப்பதுமே அவர்களுடைய வேலை என்று கூறினார்.

(உலகளாவிய உதவித்தொகை விண்ணப்பங்களுக்கான உலக ஏற்றுக்கொள்ளல் விகிதம் 90 சதவீத மாகவும், கடந்த ஆண்டு முதல் பாதியில் நமது பிராந்தியத்தில் 89 சதவீதமாகவும் இருந்தது. இரண்டாவது பாதியில், உலக ஏற்றுக்கொள்ளல் 83 சதவீதமாக இருந்தது; நமது பிராந்தியங்களில் இந்த எண்ணிக்கை 78 சதவீதமாக இருந்தது என்று ரவீந்திரன் பின்னர் ரோட்டரி நியூஸிடம் கூறினார்.)

மேலும் தற்போது உதவித் தொகை விண்ணப்பங்கள் தொடர்பான பெரும்பாலான பணிகள் எவன்ஸ்டனில் செய்யப்பட்டு வருவதனால், நமது நீண்டகால தத்துவ அணுகுமுறை மற்றும் குழுவிற்கான அறிவுரைகள் ஆகியவை ஒப்புதல் மற்றும் இறுதி செயல்பாடுகளை எவன்ஸ்டனில் இருந்து பிராந்திய அலுவலகங்களுக்கு மாற்ற ஆயத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். நேர மண்டலங்களுக்கு நெருக்கமாக, தேவைகள் மற்றும் அங்குள்ள யதார்த்தங்கள் குறித்த சிறந்த புரிதல் இருக்கும்; அதுவே நீண்டகால உத்தியாகும் என்று அவர் மேலும் கூறினார்.

ஆனால் முடிவெடுக்கும் அதிகாரத்தை பிராந்திய அலுவலகங்களுக்கு மாற்றினால், ஊழியர்கள் மீது மூத்த தலைவர்கள் மற்றும் பிற ரோட்டரியன்கள் அசாதாரணமான அழுத்தம் வைக்க நேரிடும். இது அறங்காவலர் கொள்கைகளை வெளிப்படையாக செயல்படுத்துவதை மிகவும் கடினமாக்குகிறது. ஊழியர்கள் கொள்கையை வகுப்பதில்லை, அறங்காவலர்கள் எங்களிடம் சொல்வதை மட்டுமே நாங்கள் செயல்படுத்துகிறோம்,என்று அவர் மேலும் கூறினார்.

பிரதிநிதிகளில் ஒருவர் தனது விண்ணப்பங்கள் பெற்ற உடனடி கவனம், RI ஊழியர்களின் உதவி மற்றும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் 100 சதவீத ஒப்புதல் குறித்து பிரகாசமான தொனியில் பேசியதுடன், ஒரு நேர்மறையான குறிப்பில் உற்சாகமான அமர்வு முடிந்தது.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# TRF தருணங்கள்



RI தலைவர் மார்க் மலோனி, EMGA சாம் பதிபந்த்லா, TRF அறங்காவலர்கள் சேய்ஜி கிட்டா, குலாம் வஹன்வதி மற்றும் EMGA வினோத் பன்சல்.



உஷா சாபூவுடன் RIPN சேகர் மேத்தா மற்றும் சோனல் சங்வி.



RID பரத் பாண்ட்யா, மஞ்சு தாஸ் மற்றும் நயந்தரா மஹாஜன்.



RID கமல் சங்வியுடன் அறங்காவலர் வஹன்வதி.



சோனல் சங்வியுடன் மாதவி பாண்ட்யா.



வருமாண்டு TRF அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன், நளினி மற்றும் PRID P T பிரபாகருடன்.

வலது: RID சங்வி மற்றும் உஷா சாபூ.

கீழே: RIPN மேத்தாவுடன் PRIP கல்யாண் பானர்ஜி.



RI தலைவர் மலோனி, கேய், வருமாண்டு அறங்காவலர் தலைவர் K R ரவீந்திரன் மற்றும் அவர் மனைவி வானதி.







PRIPs பானர்ஜி, ராஜேந்திர சாபூ, RID பரத் பாண்ட்யா இவர்களுடன் RIPN மேத்தா.



RI பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ, மார்கரீட்டா, PRID C பாஸ்கர், மாலா மற்றும் PDG ரவி வத்லாமணி.





RIDN A S வெங்கடேஷ் மற்றும் அவர் மனைவி வினிதா.



PDGs ராமச்சந்திரன் பரத், சஷி ஷர்மா, சாம் மோவா, சந்திரசேகர் கோல்வேக்கர், அவர் மனைவி ருடா, சுமதி மற்றும் PDG M முருகானந்தம்.



RIPN மேத்தா, சோனல், RID கமல் சங்வி மற்றும் பினோதா பானர்ஜி.





RID பாண்ட்யா, PRIP சாபூ, உஷா, RIPN மேத்தா, சோனல், RID கமல் சங்வி மற்றும் மாதவி.





மேலே: மாலா, PRID C பாஸ்கர், பாண்டுரங்க செட்டி, சங்கீதா பன்சால், PDG ஜான் டேனியல் மற்றும் மீரா.
கீழே: அறங்காவலர் செய்ஜி கிட்டா, நொபுகோ, அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ், ஷர்மிஷ்தா மற்றும் PRID மனோஜ் தேசாய்.





இடது: இன்ஸ்டிட்யுட் தலைவர் T N சுப்ரமணியன், PRIDs Y P தாஸ், அஷோக் மஹாஜன், அறங்காவலர ஜெனிஃபர் ஜோன்ஸ், நயன்தரா மற்றும் வித்யா.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# 2030க்குள் மேலும் நான்கு அமைதி மையங்களைத் திறக்கவுள்ளது TRF

ரஷீதா பகத்

இந்தூரில் நடைபெற்ற பிராந்தியச் சந்திப்பின் TRF இரவு விருந்தின்போது, அறங்காவலர் தலைவரின் பிரதி நிதியாக அறங்காவலர் சேய்ஜி கிட்டா பேசுகையில், TRFன் அமைதி திட்டத்தை பற்றி குறிப்பிட்டார். இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக TRF தொடர்ந்து திட்டமிடுகிறது. 2030க்குள் மேலும் நான்கு அமைதி மையங்கள் திறக்கப்படவுள்ளன. முதலாவது மையம் ஆப்பிரிக்காவிலுள்ள உகாண்டாவில் அமையும், இது 2021ல் திறக்கப்படும்.''

வன்முறை, முரண் மற்றும் தீவிரவாதம் ஆகியவை அதிகரித்து வரும் இன்றைய காலகட்டத்தில், ஓர் உறுதியான அமைதித் திட்டத்தை முன்வைப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக்காட்டிய கிட்டா, ரோட்டரி அமைதி மையங்கள் 1,300 அறிஞர்களுக்குப் பயிற்சியளித் திருக்கின்றன; இவர்களில் சுமார் 40 சதவிகிதப் பேர் அரசு அல்லாத அமைப்புகளுடனும், 15 சதவிகிதப் பேர் அரசு அமைப்புகளுடனும், பிறர் UN அமைப்புகளிலும் ஆராய்ச்சி, கல்வி மற்றும் பிற பிரிவுகளில் பணியாற்றுகிறார்கள் என்றார்.

இளம்பிள்ளைவாதத்தை ஒழிக்கும் நம்முடைய முயற்சிகளை எண்ணி நாம் எந்த அளவுக்குப் பெருமைப்படுகிறோமோ, அந்த அளவுக்கு நம்முடைய அமைதித் திட்டத்தை எண்ணியும் நாம் மிகவும் பெருமைப்படுகிறோம் என்று தெரிவித்த அவர், PRIP ராஜேந்திர சாபூ அமைதித் திட்டம் மற்றும் அமைதி மையங்களை அமைப்பதில் அவர் மிகவும் முக்கியமான பொறுப்பை வகித்துள்ளார் என்று பாராட்டினார்.

அறங்காவலர் குலாம் வஹன்வதி மகிழ்ச்சியுடன் தெரிவித்த சில விஷயங்கள், கடந்த ஆண்டு TRFக்கு வழங்கப்பட்ட $395 மில்லியன் ஒரு சாதனைத் தொகையாகும். உலகளாவிய இந்த வழங்கலில் $21.4 மில்லியன் வழங்கிய இந்தியா 2வது இடத்தில் இருந்தது. உலகிலேயே அதிகம் வழங்கிய மாவட்டங்களாக இரு இந்திய மாவட்டங்கள் விளங்கின: முதல் இடத்தில் RID 3190, இரண்டாம் இடத்தில் RID 3142.

அத்துடன், உலகிலேயே அதிகம் வழங்கிய 50 மாவட்டங்களில் ஒன்பது மாவட்டங்கள் இந்தியாவைச் சேர்ந்தவை, 9வது இடத்தில் RID 3011 இடம்பெற்றிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2025க்குள் $2.025 பில்லியன் என்ற மானிய இலக்கை எட்டவேண்டும், அதன்மூலம் ஒரு முக்கிய நாடாக விளங்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்றார் வஹன்வதி.

இந்த நிதிக்குப் பங்களிக்க வேண்டும் என்று இந்தியாமுழுவதும் காணப்படுகின்ற துடிப்பு தொடரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ''இந்த ஆண்டு, $30 மில்லியன் திரட்ட




PDG J B *காம்தார் மற்றும் அவர் மனைவி மார்லீன் அவர்களை கௌரவிக்கும் RI தலைவர் மார்க் மலோனி, அறங்காவலர்கள் செய்ஜி கிட்டா மற்றும் குலாம் வஹன்வதி.*




EMGAs *வினோத் பன்சல், சாம் பதிபன்த்லா, அறங்காவலர் வஹன்வதி,* RID *கமல் சங்வி, செய்ஜி கிட்டா,* RI *தலைவர் மலோனி,* AKS *உறுப்பினர்களான வித்யா மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர்* T N *சுப்ரமணியன்,* RIPN *சேகர் மேத்தா, வருமாண்டு* TRF *தலைவர்* K R *ரவீந்திரன் மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*

வேண்டும் என்ற நம்முடைய இலக்கை தாண்டிச்செல்வோம்.''

அதேசமயம், ஆண்டு மற்றும் போலியோப்ளஸ் நிதிப் பங்களிப்புகளில் நாம் இன்னும் சவால்களைச் சந்தித்து வருகிறோம் என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். அவையும் முக்கியமானவைதாம். ரோட்டரியினர் தொடர்ந்து இதற்கும் பங்களிக்கவேண்டும்.

முன்பைவிட அதிக எண்ணிக்கையிலான இந்தியப் பெருநிறுவனங்கள் TRFஐ நம்புகிறார்கள், அது நம்பிக்கைக் குரியது என்று அறிந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். நவம்பரில் அவர் இந்தியாவின் ஆறு ரோட்டரி மாவட்டங்களுக்குச் சென்றார்; இந்த ஆறு மாவட்டங்களில் நடைபெற்ற TRF கருத்தரங்குகளில், $100,000க்கும் மேற்பட்ட நேரடிப் பங்களிப்புகள் வந்தன; அவை ஒவ்வொன்றிலும் மேலும் அதிகத் தொகைக்கான உறுதிப்பாடுகள் வழங்கப்பட்டன.

TRF பங்களிப்புகளை மிக நன்றாக நிகழ்த்தி வருவதற்காக, இப்போதைய DGக்கள் அனைவரையும் அவர் பாராட்டினார்.

RI இயக்குநர் பாரத் பாண்ட்யா இந்தக் கூட்டத்தில் பேசும்போது, ரோட்டரி அறக்கட்டளையை RIன் முதுகெலும்பாகக் குறிப்பிட்டார். TRF




AKS *உறுப்பினர்கள் கேஷ்வ் குன்வர் மற்றும் அவர் மனைவி துர்கா, அறங்காவலர் கிட்டா,* RI *தலைவர் மலோனி,* RIPN *மேத்தா, வருமாண்டு* TRF *தலைவர்* K R *ரவீந்திரன் மற்றும்* RID *பரத் பாண்ட்யா ஆகியோருடன்.*

இரவு விருந்தில் 400 ரோட்டரியன்கள் பங்கேற்கிறார்கள் என்கிற சாதனை TRFக்கு உங்களுடைய உறுதிப்பாட்டையும் அர்ப்பணிப்புணர் வையும் காட்டுகிறது என்றார்.

TRFன் வழியாகப் பணியாற்றுவதன் மூலம், நாம் உலகை மாற்றுகிறோம், அதை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக ஆக்குகிறோம். இன்னும் மேம்பட்ட எதிர்காலத்தை நோக்கிப் பணியாற்றவேண்டும் என்கிற முன்னேற்றத் தொலைநோக்கை ரோட்டரிக்கும் ரோட்டரியன்களுக்கும் வழங்குவது, TRF தான்.

TRF நல்கைகளின் மூலம் செய்யப்படும் திட்டங்கள் லட்சக்கணக் கானோருக்குப் பயன் தருகின்றன, என்று தொடர்ந்து குறிப்பிட்டார் அவர்.

RI பொதுச் செயலாளர் ஜான் ஷ்யூகோ, RID 3232ஐச் சேர்ந்த PDG J B காம்தர் மற்றும் மாலீன் ($500,000 பங்களிப்புடன் தலைமை வட்டம்), RID 3142ஐச் சேர்ந்த கிஷோரிலால் ஜூன்ஜூன்வாலா ஆகிய இரு AKS உறுப்பினர்களை அறிமுகப்படுத்தினார். ஆர்ச் க்ளம்ஃப் சமூகம் மிக விரைவாக வளர்ந்து வருவதாகவும், அதில் இப்போது 1,000




உறுப்பினர்கள் இருப்பதாகவும், AKS உறுப்பினர்களுடைய எண்ணிக்கையில் இந்தியா இரண்டாம் இடத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

EMGAக்கள் சாம் பதிபந்த்லா மற்றும் வினோத் பன்சால் ஆகியோர் முக்கிய நன்கொடையாளர்களையும் இரண்டு AKS உறுப்பினர்களையும் அறிமுகப்படுத்தினார்கள்.

தானும் மார்லீனும் எளிமையான வசதிகளைக் கொண்ட, ஆனால், இதயத்தால் வளமான, பகிர்ந்து கொள்ளும் தத்துவத்தைக் கொண்ட குடும்பங்களிலிருந்து வருவதாகக் காம்தார் குறிப்பிட்டார். நாங்கள் எல்லாவிதமான ஏற்றத்தாழ்வுகளையும் கண்டுள்ளோம். மிகப்பெரிய பொருளாதார நிச்சயமின்மையுடன் நாங்கள் எங்களுடைய திருமண வாழ்க்கைகளைத் தொடங்கினோம், குடும்பத்துக்குச் சொந்தமான எங்களுடைய தொழிலைத் தட்டுத் தடுமாறி நடத்தினோம், பல நல்ல சமாரிட்டன்களுடைய உதவியைப் பெற்றோம்.''

தங்களுடைய தொழில் முன்னேறிய காலகட்டத்தில், அவர்கள் அன்னை தெரசா அவர்களைச் சந்தித்தார்கள். வலிக்கும்வரை வாரி வழங்குங்கள், என்று அவர்களுக்கு அறிவுரை சொன்னார் அவர். கிட்டத்தட்ட அதே நேரம், புகழ்பெற்ற ரோட்டரியனான கிரிஸ் சிடாலெ-யைச் சென்னையில் சந்தித்தார் அவர். கிரிஸ் எங்களை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தினார்; எங்களுடைய வழிகாட்டியாக ஆனார்.

PHF பொறுப்பைப் பெறுவதற்கான தன்னுடைய முதல் நன்கொடையாகிய $1,000ஐத் திரட்டுவதுதான் மிகவும் கடினமாக இருந்தது என்று காம்தார் ஒப்புக் கொண்டார். என்னுடைய பணம் எப்படிப் பயன்படுத்தப்படும் என்பது பற்றி எனக்கு ஐயங்கள் இருந்தன. ஆனால், ரவியைப்போல் (PRIP K R ரவீந்திரன்) வெளிப் படையாகப் பேசக்கூடிய என் நண்பர் கிரிஸ் என்னுடைய ஐயங்களைத் தீர்த்துவைத்தார். "J B, கொஞ்சம் நம்பிக்கையோடு இருங்கள்,




*AKS உறுப்பினர்கள் லலித் மற்றும் நீலு கண்ணா அவர்களுடன் EMGA பன்சல், அறங்காவலர் வஹன்வதி, RID சங்வி, DG தீபக் குப்தா, அறங்காவலர் கிட்டா, RI தலைவர் மலோனி, RIPN மேத்தா, வருமாண்டு TRF தலைவர் ரவீந்திரன் மற்றும் RID பாண்ட்யா.*



AKS உறுப்பினர்கள் கிஷோரிலால் ஜூன்ஜூன்வாலா, PDG J B காம்தார், மார்லீன் அவர்களுடன் EMGA பதிபன்த்லா, அறங்காவலர் வஹன்வதி, RI பொது செயலாளர் ஜான் வ்ய்யூகோ, அறங்காவலர் கிட்டா RI தலைவர் மலோனி மற்றும் EMGA பன்சல்.

உங்களுடைய பணம் இன்னும் சிறந்த ஒரு தாக்கத்தைத் தருவதற்காகப் பயன்படுத்தப்படும்' என்றார்.''

இந்த அங்கீகாரத்தைக் கண்டு பணிந்து நிற்பதாக ஜூன்ஜூன்வாலா குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியது: நாம் எவ்வளவு சம்பாதிக் கிறோம் என்பது நம்முடைய அன்றாட வாழ்க்கையைத் தீர்மானிக் கிறது. ஆனால், நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது நம்முடைய வாழ்க்கையையே உருவாக்குகிறது.

இந்த நிகழ்ச்சியில் அங்கீகரிக்கப் பட்ட பிற TRF கொடையாளர்கள்: லலித் மற்றும் நீலு கன்னா (RID 3012), கிரீஷ் கோவிந்த் மற்றும் சஞ்சீவனி குணெ (3131); மனீஷ் மற்றும் மோனா க்யானி மற்றும் குல்பூஷன் மற்றும் மஞ்சு ஜெட்லி; T N சுப்ரமணியன் மற்றும் வித்யா (அனைவரும் 3141 லிருந்து); தெபஷீஷ் மற்றும் சரிஸ்மதா தாஸ் (3240); கேசவ் மற்றும் துர்கா குன்வார் (3292); கிரன் லால் ஷ்ரெஸ்தா (3292); ரவி ராமன் மற்றும் ஷோபனா (3232); DG A K நடேசன் மற்றும் பார்வதி (2982).

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

## PRID அசோக் மஹாஜனிற்கு போலியோ பயனியர் விருது



V முத்துகுமரன்

PRID அஷோக் மஹாஜன் அவர்களுக்கு 'போலியோ பயனியர்' விருது வழங்குகிறார் RI தலைவர் மார்க் மலோனி. மாதவி, நொபுகோ, அறங்காவலர் செய்ஜி கிட்டா, நயந்தரா, கேய் மற்றும் RID பரத் பாண்ட்யா ஆகியோரும் உடன் உள்ளனர்.

RI தலைவர் மார்க் மலோனி போலியோ பயனியர் விருதினை PRID அஷோக் மஹாஜனிற்கு இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் வழங்கினார்.

மஹாஜன் அவர்கள் இந்தியாவில் போலியோ ஒழிப்பிற்காக பெரிதும் பாடுபட்டார். அவர் ரோட்டரி முஸ்லிம் உல்லேமா கமிட்டியின் தலைவராக 2006ம் ஆண்டிலிருந்து உள்ளார். மேலும் போலியோ ஃப்ளஸ் கமிட்டியின் உறுப்பினராக 2009 முதல் 2013 வரை பணியாற்றியுள்ளார்.■

# Star Performers (TRF)

| Zone 4 | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Contribution to Annual Fund | 3141 | Shashi Sharma |
| Highest Contribution to Endowment Fund | 3060 | Pinky Patel |
| Highest Contribution to Polio Fund | 3060 | Pinky Patel |
| Highest Per Capita APF Contribution to TRF | 3141 | Shashi Sharma |
| Highest Total Contribution to TRF | 3141 | Shashi Sharma |

| Donor | Trophy | IPDG | District |
|---|---|---|---|
| Nitish Laharry Trophy | Highest Total Contribution to TRF | Suresh Hari | 3190 |
| Binota and Kalyan Banerjee Trophy | Highest Endowed Fund Contribution to TRF | Suresh Hari | 3190 |
| Usha and Raja Saboo Trophy | Highest Annual Fund Contribution to TRF | Shashi Sharma | 3141 |
| Usha and Raja Saboo Trophy | Highest Polio Fund Contribution to TRF | Guddati Viswanadh | 3020 |



PDG குட்டாட்டி விஸ்வநாத் மற்றும் அவர் மனைவி அருணா அவர்களுடன் அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் வருமாண்டு TRF தலைவர் PRIP K R ரவீந்திரன்.



TRF அறங்காவலர் சேய்ஜி கிட்டா PDG முக்குல் சின்ஹா மற்றும் அவர் மனைவி ராக்கி அவர்களுக்கு PRID C பாஸ்கர் மற்றும் அறங்காவலர் வஹன்வதி ஆகியோருடன் விருது வழங்குகிறார்.



PDG சுரோஷ் ஹரி அவர்களுக்கு வருமாண்டு TRF தலைவர் PRIP KR ரவீந்திரன் மற்றும் அறங்காவலர் கிட்டா அவர்களும் RRFC அவினாஷ் போத்தார், EMGA சாம் பதிபந்த்லா, அஷோக் பஞ்ச்வானி மற்றும் DG சமீர் ஹரியாணி ஆகியோர் முன்னிலையில் விருது வழங்குகின்றனர்.



# — Zones 4, 5 and 6A

| Zone 5 | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Contribution to Annual Fund | 3190 | Suresh Hari |
| Highest Contribution to Endowment Fund | 3190 | Suresh Hari |
| Highest Contribution to Polio Fund | 3020 | Guddati Viswanadh |
| Highest Per Capita APF Contribution to TRF | 3190 | Suresh Hari |
| Highest Contribution to TRF | 3190 | Suresh Hari |

| Zone 6A | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Contribution to Annual Fund | 3291 | Mukul Sinha |
| Highest Contribution to Endowment Fund | 3291 | Mukul Sinha |
| Highest Per Capita APF Contribution to TRF | 3291 | Mukul Sinha |
| Highest Total Contribution to TRF | 3292 | Chintamani Bhattarai |

**Highest donor participation**

**Zone - 4**

3131 PDG Shailesh Palekar

**Zone - 5**

3181 PDG P Rohinath

**100% Club Participation**

**Zone - 4**

3132 PDG Vishnu Mondhe
3142 PDG Ashes Ganguly

**Zone - 5**

2981 PDG S Piraiyon
3182 PDG Abhinandan Shetty



TRF அறங்காவலர் கிட்டா, வருமாண்டு TRF தலைவர் K R ரவீந்திரன், PDG A V பதி மற்றும் வீணா அவர்களுக்கு விருது வழங்குகின்றனர். RRFC அவினாஷ் போத்தார் மற்றும், EMGA சாம் பதிபந்த்லா ஆகியோர் உள்ளனர்.



PDG சஷி ஷர்மா, RI தலைவர் மார்க் மலோனியிடமிருந்து விருதுபெறுகிறார். RID பரத் பாண்ட்யா மற்றும் PRID C பாஸ்கர் அவர்களும் உடன் உள்ளனர்.





இடது: PDG விஷ்ணு மோன்தே மற்றும் மனிஷா அவர்களுக்கு அறங்காவலர் கிட்டா விருது வழங்குகிறார். வருமாண்டு TRF தலைவர் K R ரவீந்திரன், RRFC விஜய் ஜலான் அவர்களும் உள்ளனர். மேலே: PDG பிங்கி பட்டேல் மற்றும் அவர் கணவர் சுமுல் பட்டேல் அவர்களுக்கு அறங்காவலர் கிட்டா விருது வழங்குகிறார். வருமாண்டு TRF தலைவர் PRIP K R ரவீந்திரன், PRID C பாஸ்கர், அறங்காவலர் வஹன்வதி ஆகியோரும் உள்ளனர்.

*Next issue: Membership and PI Awards.*

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# இதயத்திலிருந்து சிந்தியுங்கள் — RIPN மேத்தா

ஜெய்ஸ்ரீ

ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மத்தியில் சொற்பொழிவாற்றிய RIPN சேகர் மேத்தா, இந்தூர்ச் சந்திப்பின் கருப்பொருளான துணிச்சலாகக் கனவுகாணுங்கள் என்பதை விளக்கினார். கல்லி பாய்-ல் வரும் புகழ்பெற்ற ராப் பாடலைச் சுட்டிக்காட்டி, நீங்கள் அனைவரும் இந்த நேரத்துக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருந்துள்ளீர்கள் அப்னா டைம் ஆயேகா (என்னுடைய நேரம் வரும்) என்று காத்திருந்த உங்களுடைய நேரம் இப்போது வந்து விட்டது என்றார்.

இது ஒரு FICCI அல்லது ஓர் Assocham கூட்டமாக இருந்தால், அங்குள்ள பங்கேற்பாளர்களால் உங்கள் 40 பேர் அளவுக்கு இந்தியாவை மாற்ற இயலாது. நாம் போலியோவை அகற்றினோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ரோட்டரியன்களாகிய நம்மால் எதையும் சாதிக்க இயலும் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் உங்களை எப்படி நினைத்துக்கொள்கிறீர்கள் என்பது தான் உங்களுடைய வெற்றியைத் தீர்மானிக்கும், என்று குறிப்பிட்ட அவர், DGEக்களுக்கு மூன்று பணிகளை முன்வைத்தார்: பெரிதாகக் கனவு காணுங்கள், தெளிவான இலக்குகளை அமையுங்கள், பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுங்கள்.

நீங்கள் மருத்துவமனைகளையும் பள்ளிகளையும் கட்டவேண்டும், வெறுமனே புத்தகங்களையும் பென்சில்களையும் வழங்கினால் போதாது. உங்களுடைய கனவுகளை மறுவரையறை செய்யுங்கள், வழக்கத்தை மீறி முன்னேறுவதற்கான வாய்ப்புகளைத் தேடுங்கள்' என்ற அவர், அந்தமானிலுள்ள ஒரு தொலைதூரத் தீவில், சுனாமிக்குப் பிறகு, ரோட்டரி 500 வீடுகளைக் கட்டியவிதத்தை நினைவுகூர்ந்தார்.

ஹெலிகாப்டரிலிருந்து எங்களால் ஒரு பழுப்புத் தளத்தைமட்டும்தான் காண இயன்றது. மொத்தத் தீவும் அழிக்கப்பட்டிருந்தது. மூன்று மாதங்களில், ரூ2.5 கோடி செலவில் நாங்கள் அதை உயிர்ப்பித்தோம்.

நீங்கள் மனதால் சிந்திக்காமல் இதயத்தால் சிந்தித்தால்தான் இவையெல்லாம் சாத்தியமாகும் என்றார் அவர். இந்தியாவை ரோட்டரி முழு எழுத்தறிவு பெறச்செய்யும் என்று காத்மண்டில் PRIP கல்யாண் பேனர்ஜி அறிவித்த நிகழ்ச்சியையும், 1979ல் குழந்தைகளுக்குப் போலியோவுக்கு எதிரான தடுப்பு மருந்தை வழங்குவதற்காக ஃபிலிப்பைன்ஸில் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொடக்கத் திட்டத்தையும் அவர் விவரித்தார். அப்போது RI தலைவராக இருந்த ஜேம்ஸ் போமர், இந்த நோயை உலகிலிருந்து முற்றிலுமாக அகற்றுவதற்காக நாம் பல பில்லியன்


ஜெய்ஸ்ரீ

டாலர்களைச் செலவழிப்போம் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

காற்றில் கோட்டை கட்டுங்கள்'' என்று பங்கேற்பாளர்களை அவர் ஊக்குவித்தார். மக்கள் உங்களைப் பார்த்துச் சிரிக்கட்டும். பரவாயில்லை. பெரிய கனவுகளைக் காண்கிற துணிச்சலும், அந்தக் கனவுகளைப் பின்தொடர்ந்து செல்கிற துணிச்சலும் உங்களுக்கு இருந்தால், அந்தக் கனவில் வெற்றிபெற்றபின் நீங்கள் அவர்களைப் பார்த்துச் சிரிப்பீர்கள்.

DGEக்களுக்கு ஒரு தொலை நோக்குப்பார்வை இருக்கவேண்டும் என்று வலியுறுத்திய மேத்தா, டிஸ்னிலாண்டின் எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி இதை விளக்கினார். நாம் எல்லாரும் எலிகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால், ஓர் எலியை அடிப்படையாகக் கொண்டு ஒரு முழு ராஜ்ஜியத்தையே உருவாக்கவேண்டும் என்று நாம் நினைத்திருப்போமா?

டிஸ்னிவேர்ல்ட் தொடங்கப்பட்ட போது, வால்ட் டிஸ்னி உயிருடன் இல்லை. அப்போதைய CEO, மேடையில் அமர்ந்திருந்த டிஸ்னியின் மனைவியிடம் இப்படிச் சொன்னார், 'வால்ட் இதைப் பார்த்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணிப்பார்க்கிறேன்.'அதற்கு டிஸ்னியின் மனைவி சொன்ன பதில் மிகவும் புகழ்பெற்றது: "வால்ட்டால் மட்டும் இதைப் பார்க்க இயலும்."

### உங்களுடைய இலக்குகளை அமையுங்கள்

பங்கேற்பாளர்கள் தெளிவான இலக்குகளை அமைக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இந்த ஆண்டு உங்களுடைய சங்கம் 100 இதய அறுவைச்சிகிச்சைகளைச் செய்திருந்தால், அடுத்த ஆண்டு 102 என்ற இலக்கைத் தீர்மானிக்காதீர்கள். அது இலக்கே இல்லை. 125 என்றால் தான் அது நல்ல இலக்கு. நான் உங்களுக்குச் சொல்லும் புத்தம்புதிய வாசகம்: நீங்கள் எதையெல்லாம் திட்டமிட்டுள்ளீர்களோ அத்துடன் ஒரு பூஜ்ஜியத்தைச் சேருங்கள்.''

இலக்குகளைத் தீர்மானித்தபின், அடுத்த வேலை, பணிகளைப் பகிர்ந்து தருவது. உங்களுக்கு இரண்டு கைகள்தான் உள்ளன; இங்கு அமர்ந்திருக்கும் பெண்களுக்குதான் பத்துக் கைகள் உள்ளன, அன்னை துர்காவைப்போல. அவர்களைப் பார்த்துப் பிரதியெடுக்க முயலாதீர்கள். உங்களுக்குப் பத்துக் கைகள் இருந்தால், நீங்கள் ராவணனாகி விடுவீர்கள்.

தாஜ் மகாலைக் கட்டியவர் யார்? கட்டடத் தொழிலாளர்கள் தாம். ஆனால், வரலாற்று நூல்கள் அப்படியா சொல்கின்றன? ஆகவே, உங்கள் பணியைப் பகிர்ந்து கொடுங்கள், அதற்கான அங்கீகாரம் உங்களுக்குத் தானே வந்து சேரும் என்று குறிப்பிட்ட அவர், தான் ஒரு DGEயாக இருந்தபோது, தன்னுடைய பயிற்சியாளர் தனக்குச் சொன்ன அறிவுரையைப் பகிர்ந்து கொண்டார். அது இன்னும் என் காதுகளில் கேட்டுக்கொண்டிருக்கிறது. அவர் சொன்னார், ஆளுநருடைய பணி, சங்கத் தலைவர்களுடைய தன்முனைப்புகளுக்கு உயவெண்ணெய் விடுவது.

இது சங்கத் தலைவருக்கும் பொருந்தும். அவர் செய்ய வேண்டியதெல்லாம் ஒரே ஒரு விஷயம் தான், தன்னுடைய சங்க உறுப்பினர்களுடைய தோளில் தட்டிக் கொடுத்து, 'நன்றாகச் செய்தீர்கள். பாராட்டுகள்' என்று சொல்ல வேண்டியது தான்.''

தோல்வியைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்ற அவர், அமிதாப்பச்சனுடைய குரல் சரியில்லை என்று அகில இந்திய வானொலி நிராகரித்த கதையைச் சுட்டிக்காட்டினார். இதைவிடப் பெரிய ஒரு நகைச்சுவை இருக்கமுடியுமா? இன்று அவர் எட்டியுள்ள உயரத்தைக் காணுங்கள். தோல்வியடைவதில் எந்தத் தவறும் இல்லை. அதேசமயம், மீண்டும் எழுந்து நிற்கிற விடாமுயற்சி உங்களிடம் இருக்கவேண்டும். மனிதகுலத்துக்கு மிகச்சிறந்த சேவையைப் புரிவதற்காக உங்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு இது என்பதை நினைவில் வையுங்கள்.

உறுப்பினர் எண்ணிக்கை உங்களுடைய மிகப்பெரிய இலக்காக இருக்கட்டும். ஒவ்வோர் உறுப்பினரிடமும், ஒரே ஓர் உறுப்பினரை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தும் படி சொல்லித் தூண்டுங்கள்; அதன் மூலம் உறுப்பினர் எண்ணிக்கை இரு மடங்காவதைப் பாருங்கள். 2025க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக உயர்த்துவோம், அதற்காகத் தொடர்ந்து உழைப்போம் எனச் சொல்லி, ஊக்கம் தரும் சொற் பொழிவை நிறைவுசெய்தார் மேத்தா.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ



DGEக்களை ஊக்கப்படுத்தும் RIPN சேகர் மேத்தா

# துணிந்து கனவு காணுங்கள் இந்தூரில் ரொட்டேரியன்களுக்கு RID பாண்ட்யா ஊக்கம்

ரஷீதா பகத்

நம்முடைய கனவுகள் மிகப்பெரியவையாக இருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், இந்தூர் சந்திப்பின் கருப்பொருளான 'துணிந்து கனவு காணுங்கள்' என்பதற்குப் பின்னாலிருக்கும் செய்தியை விளக்கியும் பேசிய RI இயக்குநர் பரத் பாண்ட்யா, 100 ஆண்டுகளுக்கு முன்னால், ரோட்டரி ஒரு குழந்தையைப் போல் மெல்ல அடியெடுத்து நடந்து கொண்டிருந்த போது, ஜாம்செட்ஜி டாடா என்ற இந்தியத் தொழில்முனைவோர் பிரிட்டிஷ் ரயில் நிறுவனத்துக்கு இரும்பு ரயில்களை வழங்குவதற்கான தன்னுடைய ஒப்பந்தத்தைச் சமர்ப்பித்தார் என்றார்.

அப்போது, அந்த நிறுவனத்தின் இயக்குநர் ஒரு கடுமையான கருத்தைத் தெரிவித்தார். பிரிட்டிஷ் தகவல்குறிப்புகளுக்கேற்ப ஓர் இந்தியர் ரயில்களை உருவாக்கிவிட்டார் என்றால், அவர் வழங்கும் ஒவ்வொரு பவுண்ட் இரும்பையும் நான் சாப்பிட்டு விடுகிறேன், என்றார்.

டாடா நிறுவனத்தினர் அவருடைய பேச்சைப் பொய்யாக்கினார்கள். பிரிட்டிஷ் ரயிலுக்கு அவர்கள் வழங்கிய தரமான இரும்பையெல்லாம் அந்த இயக்குநர் சாப்பிட்டாரா என்பது பற்றி வரலாற்றுக் குறிப்பு ஏதுமில்லை.

டாடா நிறுவனத்தினர் தொடர்ந்து சிறந்த இரும்பை வழங்கிவந்தார்கள். இரண்டாம் உலகப்போரில் பிரிட்டிஷ் பீரங்கிகள் 'டாடாநகர்கள்' என்று அழைக்கப்பட்டன. காரணம், அந்தப் பீரங்கிகளை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட இரும்பு, இந்தியாவிலுள்ள டாடாநகரிலிருந்து வந்தது.

1964ல், முகம்மது அலியும் சன்னி லிஸ்டனும் உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் மோதினார்கள். அப்போது, லிஸ்டன்தான் குத்துச் சண்டை உலகில் பெரிய அரசர். அலியோ புதியவர். ஆனால், ஆறாவது சுற்றில் அலி அவரை வீழ்த்திவிட்டார்.

*இந்தூர் மேயர் மாலினி கவுர் அவர்களுடன் RI தலைவர் மார்க் மலோனி, கேய், RID பரத் பாண்ட்யா, இன்ஸ்டிட்யூட் தலைவர் T N சுப்ரமணியன், வித்யா மற்றும் மாதவி பாண்ட்யா.*



சண்டையில் ஒரு மனிதனுடைய அளவு என்ன என்பதைவிட, ஒரு மனிதனில் சண்டையின் அளவு என்ன என்பதுதான் உண்மையில் முக்கியம் என்கிற பழமொழியை அவர் நிரூபித்துவிட்டார்.

டாடாவானாலும், ஜி டி பிர்லா வானாலும், அம்பானியானாலும், நாராயணமூர்த்தியானாலும் சரி இவர்கள் எல்லாரும் துணிந்தார்கள், கனவு கண்டார்கள், சாதித்தார்கள் என்றார் பாண்ட்யா.

ரோட்டரியும் அதுபோன்ற ஒரு வெற்றிக்கதைதான். 1905 பிப்ரவரி 23ம் தேதி, ஒரேமாதிரியான சிந்தனையைக் கொண்ட தனிநபர்கள், சேவை லட்சியத்தால் ஒருங்கிணைக்கப் பட்டவர்களுடைய உலகத் தோழமை அமைப்பொன்றைக் கற்பனை செய்தார் பால் ஹாரிஸ். அதன்மூலம், ரோட்டரியின் பயணம் தொடங்கியது. ரோட்டரியினர் ஒன்றாகச் சேர்ந்து இன்னும் பெரிய கனவுகளைக் கண்டார்கள், இன்னும் பெரியவற்றைச் சாதித்தார்கள்.

எனக்கும் ஒரு கனவு உள்ளது. ரோட்டரிக்காகப் பணியாற்றவேண்டும், ரோட்டரியன்களுடன் பணியாற்ற வேண்டும், நம்முடைய சமூகங்களை, நம்முடைய உலகத்தை இன்னும் சற்று மேம்படுத்தவேண்டும். எனக்குத் தரப்பட்டுள்ள இந்த வாய்ப்பை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று என்னுடைய கனவு எனக்குச் சொல்கிறது.

RI இயக்குநர் பொறுப்பை, ஆற்றல் மிகுந்த ஒரு பதவியாக நான் நினைக்கவில்லை, ஒரு பொறுப்பாக நினைக்கிறேன், இந்த முக்கியமான பொறுப்பில் என்னால் இயன்றவரை மிகச் சிறப்பாகச் செயலாற்றவேண்டும், உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தப் பாடுபடவேண்டும், TRFக்காக உழைக்கவேண்டும், ரோட்டரியை முன்னேற்றிச்செல்ல முனையவேண்டும் என்று என்னுடைய கனவு எனக்குச் சொல்கிறது.''

நாம் சேர்ந்து பணியாற்றினால், தனித்தனியே சாதிப்பதை விட



## தூய்மையை தனது பணியாக ஏற்றுக் கொண்டவர்

*இந்தூர் இந்தியாவில் தூய்மையான நகரமாக மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக உருவெடுத்ததன் பின்னணியில் உள்ள பெண் இந்தூரின் மேயரான மாலினி கவுரை இந்த இன்ஸ்டிட்யூட் கவுரவித்தது.*

*சந்திப்பில் உரையாற்றிய அவர், 2014ம் ஆண்டில், இந்தூர் தூய்மை விளக்கப்படத்தின் கடைசியில் இருந்ததையும், கழிவுகளை எரிப்பதால் தொடர்ந்து தீங்கு விளைவிக்கும் வாயுக்களை உருவாக்கி வருவதையும், அதனால் அந்நகரின் பசுமை குறைந்து வருவதையும் நினைவு கூர்ந்தார்.*

*''தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு மற்றும் இந்தூரில் உள்ள மக்கள் இல்லாமல் நான் எதுவும் சாதிக்க முடியாது'' என்று கூறிய அவர், நகரத்தை மாற்றுவதற்கான சவாலை அவர் ஏற்றுக்கொண்டார்.*

*''பிரதமர் அறிவித்த போது ஸ்வச்ச பாரத் அபியானை அறிவித்த போது, நாங்கள் சுத்தம் செய்வதை எங்கள் நோக்கமாக கொண்டு உழைக்க இந்தூர் மக்கள் அளித்த ஆதரவை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். சில கடினமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது, ஆனால் இன்று தூய்மையின் தேவை குறித்து நிறைய விழிப்புணர்வு உள்ளது.*

*தனது பயணத்தை நினைவு கூர்ந்த மேயர், ஒரு ஸ்மார்ட் வார்டுடன் தொடங்கியதாகவும், அதில் நாங்கள் வெற்றி பெற்றதும், இந்தூரிலுள்ள 85 வார்டுகளிலும் இப்பயிற்சியை செயல்படுத்தினோம் என்றார். ஸ்வச்சத்தா மிஷனின் கீழ் நகரத்திற்கு கிடைத்த நிதி, வாகனங்களுக்காகவும் மற்றும் குப்பை சேகரிப்பு மற்றும் செயலாக்கத்திற்கான உபகரணங்கள் வாங்க முதலீடு செய்யப்பட்டது. ''திரவ கழிவுகளிலிருந்து திடப் பொருளைப் பிரித்து, இரண்டு வெவ்வேறு பெட்டிகளை வழங்குகிறோம்.'' திரவக் கழிவுகளிலிருந்து ஆர்கேனிக் உரங்கள் தயாரிக்கப்படுகையில், திடக்கழிவுகளும் பிரிக்கப்பட்டு சாலைகள், பிளாஸ்டிக் குழாய்கள் போன்றவற்றை தயாரிக்கப் பயன்படுகின்றன.*

*நகரத்தில் ஒரு பெரிய காய்கறி சந்தை உள்ளது என்று மாலினி மேலும் கூறினார், இது நிறைய காய்கறி கழிவுகளை உருவாக்குகிறது. காய்கறி கழிவுகளிலிருந்து மீத்தேன் வாயு தயாரிக்க ரூ.7 கோடி செலவில் ஆலை அமைத்துள்ளோம், அவை எங்கள் நகர பேருந்துகளில் 15 முதல் 20 பஸ்கள் வரை தேவையான எரிபொருளைப் பெறுகின்றன.*

*இந்த முயற்சிக்கு நன்றி - இந்தூருக்கு 3 ஆண்டுகளாக தூய்மை யான நகர விருது கிடைத்துள்ளது, வயிற்றுப்போக்கு, மலேரியா மற்றும் ஆஸ்துமா பாதிப்புகள் குறைந்துள்ளன என்று மருத்துவர்கள் பதிவிட்டுள்ளனர். ''நாங்கள் இந்த ஆண்டு 4வது வெற்றியை அடிக்கப்போகிறோம்!,'' என்றார்.*

RB

மிக அதிகமாகச் சாதிக்கலாம், அது நம்முடைய பணியை அதிகத் தாக்கமுள்ளதாக்கும். என்னுடைய கனவு, எல்லா நிலைகளிலும் நேர்மையில் கவனம் செலுத்தும் படியும் எனக்குச் சொல்கிறது.

இந்தியப் பழங்கால நூல்களைச் சுட்டிக்காட்டி அவர் கூறியது: சமாதியிலிருந்து நடப்பவர்களுடன் சேர்ந்து நடக்கிற ஒரே விஷயம், புதைக்கப்பட மறுக்கிற ஒரே விஷயம், ஒரு மனிதருடைய ஒழுக்கம் தான்... அது அவரைத் தாண்டி வாழும், அதை எப்போதும் புதைக்க இயலாது.

நாம் வாழும் உலகைச் சுற்றிப் பாருங்கள், போர், தீவிர வாதம், ஊழல், பட்டினி, பாலியல் வன்முறை, பிற இருண்ட காட்சி கள் ஊடக இடத்தை நிரப்புகின்றன. இத்தனை இருட்டின் மத்தியில், ரோட்டரிக்காக நாம் செய்யும் பெரிய, சிறிய திட்டங்கள் உண்மையில் எந்த வேறுபாட்டையா வது கொண்டுவருமா என்று நாம் ஐயம் கொள்கிறோம்.

அது போன்ற நேரங்களில், கன்ஃபூசியஸ் சொன்ன ஒரு விஷயத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்: இருட்டைச் சபிப்பதை விட, ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது நல்லது.

அந்த வாய்ப்பையும், பொறுப்பை யும் ரோட்டரி நமக்குத் தருகிறது. சேவை என்கிற மெழுகுவர்த்தியை நாம் ஏற்றிவைக்கவேண்டும்.

ஆனால், இந்த உலகை இன்னும் மேம்பட்ட ஓர் இடமாக மாற்ற



*வித்யா, இன்ஸ்டிட்யூட் தலைவர்* T N *சுப்ரமணியன்,*
RI *தலைவர் மார்க் மலோனி, கேய்.*

வேண்டும் என்று நாம் விரும்பினால், அதற்கு ஒரு மெழுகுவர்த்தி போதாது, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மெழுகுவர்த்திகள் தேவை. இங்கு தான், RI தலைவர் மார்க் மலோனியின் ரோட்டரியை வளருங்கள்'' என்ற அழைப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

பிரிட்டிஷ் பால் வல்லுநர் ஒருவர், பாக்டீரியாக்களுடைய எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால், பம்பாயில் உள்ள பாலைவிட லண்டனில் உள்ள சாக்கடை நீர் அதிகத் தூய்மையானது என்று இகழ்ந்து பேசினார். அதன் பிறகு, இந்தியப் பால் உற்பத்தியில் ஒரு புரட்சியை உருவாக்கினார் வர்கீஸ் குரியன். அவரைப்போன்ற முன்னோடிகளைப் பார்த்து நாம் ஊக்கம் பெறவேண்டும் என்று பாண்ட்யா தெரிவித்தார்.

இன்று, அமுல் என்பது இந்தியாவில் எல்லாருக்கும் தெரிந்த ஒரு சொல்லாக உள்ளது; அத்துடன், உலகிலேயே மிகப் பெரிய பால் தயாரிப்பாளராகியுள்ளது இந்தியா.

ஒருவர் கனவு காண்கிறார், சவால்களைச் சந்திக்கிறார், தன்மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார் என்றால், அவர்மூலமாக அதிசயங்கள் நிகழும் என்றார் பாண்ட்யா.

நிலவில் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் முதல் காலடியை எடுத்துவைத்ததுபோல, ரோட்டரியை ஒரு சிறிய அமைப்பாகத் தொடங்கிவைத்தார் பால் ஹாரிஸ். ஆனால், ரோட்டரியின் இன்றைய நிலையைப் பாருங்கள்: 214 நாடுகளில் 1.2 மில்லியன் ரோட்டரியன்கள் ஒவ்வொரு நாளும் ரோட்டரிக்காகச் சேவை புரிகிறார்கள்.

RI *தலைவர் மார்க் மலோனி, கேய்,* PRIP *கல்யாண் பானர்ஜி, பினோதா, வானதி ரவீந்திரன், மாதவி மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*



அதே போல், ஜொனாத்தன் லிவிங்ஸ்டன் சீகல் என்ற கதையையும் நாம் வாசிக்கலாம். அதுவும் ரோட்டரியன்களைப்பற்றிய கதை தான், ரோட்டரியன்களுக்கான கதை தான். மிக அதிக உயரத்துக்குப் பறக்கும் கடற்பறவை தான் மிக அதிகத் தொலைவைக் காண்கிறது என்கிற உண்மையை இந்தக் கதை விளக்குகிறது.

கனவு காண்கிறவர்கள், துணிச்சலுடன் செயல்படுகிறவர்கள் வெற்றிபெறுகிறார்கள். ஆனால், ரோட்டரியன்களுக்குக் கூடுதலான சில முக்கியக் குணங்கள் தேவைப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, அன்பும் இரக்கமும்.

இரக்கம் என்றால், பரிதாபப்படுவது இல்லை, தேவையுள்ளவர்கள், நலிந்தவர்கள்மீது பச்சாத்தாபம் காட்டுவது, நம் உலகை இன்னும் அதிகச் சமமான ஓர் இடமாக ஆக்குவதற்காகப் பணிபுரிய அது நம்மை அனுமதிக்கிறது.

அன்பு, கருணை, இரக்கத்துடன் சேவைபுரியுங்கள், ஏனெனில், காது கேட்காதவர்களும் கேட்கக்கூடிய, கண் பார்வையற்றவர்களும் காணக்கூடிய மொழி இதுதான்.

பாண்ட்யா தொடர்ந்து குறிப் பிட்டது: நம்முடைய வாழ்க்கைகளின் மிகப்பெரிய அதிசயம், மனிதன் பறப்பதோ, நீரில் நடப்பதோ இல்லை, இந்த உலகில் நன்றாக நடந்து அதைச் சிறப்பாக மாற்றுவதுதான்.''

நம்முடைய பகுதிகளில் ரோட்டரியன்கள் சில மிகச் சிறந்த பணிகளைச் செய் கொண்டிருந்தார்கள். எடுத்துக்காட்டாக, நூற்றுக்கணக்கான பள்ளிகளுக்குப் பள்ளி அமர்மேசைகளை வழங்குவது, இளம்பிள்ளைவாதப் பேரணிகளை நடத்துவது, மருத்துவப் பிரச்னைகளுக்கான முகாம்களை நடத்துவது, மாற்றுத்திறனாளிகளுக்குக் கண்ணியத்தைத் தருவது, குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சை, ரத்த, கண் மற்றும் தோல் வங்கிகள், மருத்துவமனைகளுக்கு உயிர்காக்கும் கருவிகள்போன்ற முக்கிய மருத்துவ சேவைகளை வழங்குவது, கழிப்பறைகளைக் கட்டுவது, கை கழுவும் நிலையங்களை அமைப்பது, கிராமங்களை ODF ஆக்குவது. 150,000 ரோட்டரியன்கள் அர்ப்பணிப்புணர்வுடன், திறமையுடன், இரக்கத்துடன் பணியாற்றியதால்தான் இது சாத்தியமானது.



RID *பரத் பாண்ட்யா, மாதவி மற்றும் அவர்கள் மகள் நிதி.*

இப்படிப்பட்ட வெற்றியின் சாரம், தொடர்ச்சி, நல்லிணக்கத்தோடு ஒன்றாகப் பணியாற்றுவது. மாதவியும் அவரும் RI இயக்குநர் கமல் மற்றும் சோனல் சாங்க்வி மற்றும் TRF அறங்காவலர் குலாம் வாஹன்வடியுடன் ஒரு மிகச்சிறந்த உறவைக் கொண்டிருந்தார்கள்.

2018–19ல் நம்முடைய பகுதிகள் TRFக்கு $21 மில்லியன் பங்களித்தன. இரண்டு RI மாவட்டங்கள் (3190 மற்றும் 3141) ஒட்டுமொத்த உலகிலும் மிகச்சிறந்த இரண்டு மாவட்டங்களாக வளர்ந்தன. இதற்குக் காரணம், 2018–19 ஆளுநர்களுடைய கடின உழைப்பு, PRID C பாஸ்கர் வழங்கிய மிகச்சிறந்த தலைமை.

தான் ஓர் இளம் மருத்துவ மாணவராக இருந்தபோது, 40 ஆண்டு அனுபவம் கொண்ட மூத்த மருத்துவரான தன்னுடைய தந்தை தனக்குச் சொன்ன ஓர் அறிவுரையை அவர் நினைவுகூர்ந்தார், நான் எல்லாவிதமான மருந்துகளையும் பரிந்துரைத்திருக்கிறேன். ஆனால், அவற்றுள் நோயாளிகளுக்கு மிகச் சிறப்பாகப் பணிபுரிவது எது என்றால், இரக்கம் தான்.

ஆம், நோயாளிகளை மட்டு மில்லை, ஒவ்வொரு மனிதரையும் கையாள்வதற்கு முக்கியத் தேவை, இரக்கம்தான்.

சந்திப்புத் தலைவர் T N சுப்ரமணியன் பேசுகையில், இந்தச் சந்திப்பு ஏன் இந்தூரில் நடக்கிறது என்று எல்லாரும் வியந்ததாகக் குறிப்பிட்டார். ஆனால், RID பாண்ட்யா துணிந்து கனவு காண்போம்'' என்ற கருப்பொருளை அவருக்குத் தந்தபோது, அதைப்பற்றி அதிகம் சிந்திக்கச் சிந்திக்க, இந்தூரைப்பற்றிய நினைவுகள் அவர் நினைவில் அதிகம் தோன்றின.

கடந்த சில ஆண்டுகளாகவே இந்தியாவில் மிகவும் தூய்மையான நகரங்களின் பட்டியல்களில் இந்தூர் முதல் இடத்தில் விளங்கி வந்திருக்கிறது. ஆனால், அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னால், மிகவும் அழுக்கான நகரங்களில் ஒன்றாக இருந்தது இந்தூர். ஒரே ஒரு பெண்ணின் உறுதியான செயல்பாடு களால் அந்த நிலைமை மாறியது.

அந்தப் பெண், தொடக்க விழாவில் பேசிய மேயர் மாலினி கௌர். அவர் ஒரு தூய நகரத்தைப்பற்றித் துணிந்து கனவு கண்டார், அதை நோக்கிச் செயல்பட்டார், நகரத் தெருக்களில் நள்ளிரவு நேரத்தில்கூடச் சுற்றிவந்தார், குடிமக்கள் மனத்தில் தங்களுடைய நகரத்தின் தூய்மையைப்பற்றிய பெருமையுணர்வைத் தூண்டினார், அதன்மூலம், ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தார். இது போன்ற கனவுகள்தான் ரோட்டரிக்குத் தேவை இளம்பிள்ளைவாதத்தை உலகிலிருந்து நிரந்தரமாக நீக்க வேண்டும் என்கிற கனவைப்போல.''■

# நீங்கள்தான் முதன்மையானவர்கள்: DGEக்களிடம் மலோனி

ரஷீதா பகத்

இந்தூர் பிராந்தியச் சந்திப்பில், DGEக்களிடம் பேசுகையில் RI தலைவர் மார்க் மலோனி நீங்கள் தான் முதன்மையானவர்கள் என்று ஊக்குவித்தார். இது RI தலைவர் எட் காட்மனின் (1985–86) கருப்பொருள் என்றார் அவர்.

சான்டியாகோவில் நடைபெறும் பன்னாட்டுச் சந்திப்பில் கலந்து கொள்ளும் கடைசி ஆளுநர் குழு இது தான். அடுத்த ஆண்டு (ஜனவரி 2021), IA ஒர்லான்டோவுக்கு மாறுகிறது.

இன்று தொடங்கி, ஜூலை 1 வரையிலான காலகட்டம் உங்களுடைய ஆளுநர் பணியில் மிக முக்கியமானது. ஜூலை 1க்குள் நீங்கள் இதைத் திட்டமிடவில்லையென்றால், அநேகமாக அது நிறைவேறப்போவதே இல்லை. 2020–21ல் உங்களுடைய மாவட்டம் எதைச் சாதிக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றிய இந்த இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்கம் உங்களுக்கு வழங்கியிருக்கும் என்று நான் நம்புகிறேன்.''

DGக்களின் நோக்கம், அல்லது பதவி, தங்களுக்குப் பாராட்டைப் பெற்றுக்கொள்வதாக இருக்கக்கூடாது என்றார் RI தலைவர். ஒரு நல்ல தலைவருடைய அடையாளம், பிறரைச் சேவைபுரியும்படி வழிநடத்துவது, அவர்களுடைய கடப்பாடுகளை ஏற்றுக்கொள்வது, நிகழும் அனைத்துக்கும் பிறரைக் காரணமாகக் குறிப்பிட்டுப் பாராட்டுவது, என்றார்.

## எதிர்பார்ப்புகளைத் தாண்டிச் செல்லுங்கள்

புதிய ஆளுநர்கள் மத்தியில் பேசிய PRIP ராஜேந்திர சாபூ, நீங்கள் வெற்றிகரமான ஆளுநர்களாக ஆவதற்கு முதுகெலும்பாகத் திகழப்போகிறவர்கள், உங்களுடைய மிக வலுவான ஆதரவாளர்கள் உங்களுடைய துணைவர்கள்தான் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

தங்களுடைய GMLஐ நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்கள் மாவட்டத்தில் உள்ள ரோட்டரியன்களுடன் தொடர்பில் இருக்குமாறும், மாதந்தோறும் தாங்கள் எழுதவேண்டிய செய்தியைத் தொகுப்பாசிரியர் ஒருவரிடமோ உதவி ஆளுநர் ஒருவரிடமோ ஒப்படைத்துப் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிடவேண்டாம் என்றும் அவர் எச்சரித்தார். DG தன்னுடைய யோசனைகளை ரோட்டரியன்களுக்குத் தெரிவிக்கிற ஒரு தனிப்பட்ட தகவல்தொடர்பு இது, பிறர் இதைச் செய்யக்கூடாது,'' என்றார் அவர்.

ஆளுநர்கள் தங்களுடைய இந்தப் பதவியைச் சமூக ஏணியில் ஏறுவதற்கான ஒரு வாய்ப்பாகப் பார்க்கக்கூடாது என்றும் சாபூ எச்சரித்தார். தனக்குத் தெரிந்த ஒரு DG, தன்னுடைய காரின் உச்சியில் ஒரு சிவப்பு விளக்கையும் ஒரு கொடியையும்கூடப் பொருத்தியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் என்னைச் சந்திக்க வந்த போது. ஏன் இந்த ஆடம்பரம் என்று அவரிடம் பண்பாகக் கேட்டேன். அதிகாரம், நெறிமுறைகள், மதிப்பீடுகளைப் பற்றிய அவருடைய சிதைந்த எண்ணங்கள் அனைத்தும் முற்றிலும் கைவிடப்பட்டவை; ஒரு முக்கியமான மனிதராகத் தன்னுடைய அதிகாரத்தைத்




*GETS துணைத்தலைவர் ராஜீவ் ப்ரதான், மார்லீன், GETS தலைவர் J B காம்தார், சோனல், RID கமல் சங்வி, RI தலைவர் மலோனி, கேய், மாதவி, RID பரத் பாண்ட்யா மற்றும் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோருடன் DGEக்கள் மற்றும் அவர்கள் மனைவியர்களுடன்.*

தான் வெளிக்காட்டுவதாகவும், தான் எங்கு சென்றாலும் காவலர்கள் தனக்கு வணக்கம் வைப்பதாகவும் சொன்னார்.

இந்த மனிதர் விட்டுச்சென்ற சொத்து என்ன தெரியுமா? புதிய சங்கங்களைத் தொடங்கித் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களைச் சங்கத் தலைவர்களாக ஆக்கினார், TRF நல்கைகளைத் தவறாகப் பயன்படுத்தினார், அதனால் சிறைக்குச் சென்றார், அவருடைய சொந்த மதிப்பும், ரோட்டரியின் மதிப்பும் மொத்தமாகப் பாதிக்கப்பட்டன.

ஆகவே, உங்களிடமிருந்து இன்னும் உயர்ந்த, இன்னும் சிறந்த எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள், ரோட்டரியன்களின், சமூகத்தின் இதயங்களில் ஓர் இடத்தைப் பிடியுங்கள்.''

சாபூ தான் ஆளுநராக இருந்தபோது, ஒருவர் தனக்கு வாக்களித்தாரா, இல்லையா என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் மிகச்சிறந்த மனிதர்களைத் தன்னுடைய குழுவில் சேர்த்ததாகக் குறிப்பிட்டார். நீங்கள் அப்படிச் செய்தால், ஒரு மிகச் சிறந்த குழு உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் மாவட்டத்தில் கச்சிதமான நல்லிணக்கமும் கிடைக்கும்.''

தங்களுடைய குடும்பங்களை அலட்சியப்படுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். தான் DGயாக ஆனபோது, எனது இளைய மகன் (அவருக்கு வயது 12 தான்) தன்னுடைய மனைவியிடம் கேட்டதை நினைவுகூர்ந்தார்: "அப்பா ஆளுநராகி விட்டாரே; இனிமேல் நான் அவரைச் சந்திக்கவேண்டுமென்றால் அவருடைய செயலாளரிடம் அப்பாயின்ட்மென்ட் கேட்கவேண்டுமா?

இதைக் கேட்ட நாங்கள், இடை வெளியை உணர்ந்து கொண்டோம்.



RI *தலைவர் மலோனி,* RID *பரத் பாண்ட்யா மற்றும்* PRIP *ராஜேந்திர சாபூ.*



IAக்கும் மாநாட்டுக்கும் நாங்கள் அவரை எங்களுடன் அழைத்துச் சென்றோம். ரோட்டரியைக் கண்டு அவர் வியந்தார். இப்போது அவர் TRFக்கு ஒரு பெரிய நன்கொடையாளர், ஓர் AKS உறுப்பினரும்கூட.

முற்றிலும் சேவை-நோக்கம் கொண்ட உஷா தனக்கு மனைவியாக வந்தது தன்னுடைய அதிர்ஷ்டம்தான் என்று குறிப்பிட்ட அவர், ரத்த தானத்தை ஒரு வெற்றிகரமான மாவட்டத் திட்டமாக ஆக்க உஷா செய்த உதவிகளை நினைவுகூர்ந்தார். ரத்தத்தைப் பார்த்தாலே பெரிதாக அஞ்சுகிற தன்னைக்கூட உஷா ரத்ததானம் செய்யவைத்ததாகக் குறிப்பிட்டார்.

DGEக்கள் மிகச்சிறந்த சேவைத் திட்டங்களைத் திட்டமிடவேண்டும், இலக்குகளை அமைக்கவேண்டும், பாராட்டுகள், புகழ்ச்சியுரைகளை அதிகம் சார்ந்திருக்காதீர்கள். உங்களுடைய சொந்த இதயம், உள்ளே ஒலிக்கும் குரல் உண்மையைச் சொல்லும். மகிழ்ச்சியைத் தேடிக் கதவை மிகவும் அழுத்தமாகத் தள்ளாதீர்கள்; ஏனெனில், அந்தக் கதவு உள்நோக்கித் திறப்பது என்று அறிவுரை வழங்கினார் சாபூ.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# நாம் $2 பில்லியன் மதிப்புள்ள தொண்டு நிறுவனம்: ஜான் ஹ்யூகோ

V முத்துகுமரன்

அடுத்த 10 ஆண்டுகளில் ரோட்டரி எங்கே இருக்கும்? சிறந்த சேவைத் திட்டங்களைச் செய்ய பல்வேறு தொழில் வல்லுநர்கள் வருவதற்கு இது இன்னும் பொருத்தமானதாக இருக்குமா? வயது முதிர்ந்த மற்றும் சிறு வயதினர் என்னும் இருவகையான மக்களையும் பிணைக்கும் சவாலை இது எவ்வாறு கையாளப் போகிறது? இது உண்மையிலேயே மிகவும் நம்பமுடியாததாக இருக்கிறது, அதாவது ஒரே சங்கத்தில் 35 வயதான இளம் தொழில் வல்லுநர்களுடன் 75 வயதான ஓய்வு பெற்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருத்தல், ஒருவருக்கொருவர்

*இன்ஸ்டிட்யூட் ஒருங்கிணைப்பாளர் பரத் பாண்ட்யா மற்றும் மாதவி, RI பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ மற்றும் மார்கரீட்டா அவர்களை கௌரவிக்கின்றனர்.*



வசதியாக உணர்ந்து, ஒரே விதமாக வேலை செய்தல் — இது உண்மையிலேயே மிகவும் நம்பமுடியாததாக இருக்கிறது, என்று இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் ஒரு கூட்டத்தில் உரையாற்றிய RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ கூறினார்.

வரலாற்று ரீதியாக, ரோட்டரி ஒரு தயாரிப்புப் பொருள் கடையாக இருந்து வருகிறது, ஏனென்றால் இது அனைத்து மாடலுக்கும் பொருந்தும் ஒரு அளைவை வழங்குகிறது. ஆனால் இனிமேல் ஒரு தயாரிப்புப் பொருள் வழங்கும் கடையாக இருக்கும் ஆடம்பரத்தை நாம் தொடர முடியாது. இளமையான, அற்புதமான, பாரம்பரிய அல்லது கிளப் மாதிரியான நாம் மாற்றுத் தயாரிப்புகள் பலதரப்பட்ட மக்களை ஈர்க்க வேண்டும். ரோட்டரியில் சேருவதற்கான மாற்று வழிகளை உருவாக்குவதே சமயோஜித திட்டங்களில் ஒன்றாகும், இதை உருவாக்குவது ஒரு சவாலாக இருக்கிறது.

கடந்த 114 ஆண்டுகளில், ரோட்டரி சில அற்புதமான திட்டங்களைச் செய்துள்ளது. 100 ஆண்டுகளுக்கும் மேலான ஒரு அமைப்பானது தன் இயல்பான வரலாற்றுப் பாதையில் முன்னேற்றம், வளர்ச்சி, வெற்றி மற்றும் ஒரு குறிப்பிட்ட உயரத்தை அடையும் பாதையைக் கொண்டுள்ளது. வளர்ச்சி வளைவின் தொடர் வீழ்ச்சியை சரிசெய்யவில்லை என்பதனால் கோடக் (Kodak) அதன் பிரமாண்டமான இருப்புக்குப் பிறகு பொருத்தத்தை இழந்தது என்பதை சுட்டிக்காட்டினார். ரோட்டரி இப்போது இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் உள்ளது, ஏனென்றால் இது நெடுநாட்களாக 1.2 மில்லியன் உறுப்பினர்களுடன் போராடுகிறது மற்றும் இளம் தொழில் வல்லுநர்களை ஊக்குவிக்க வேண்டும். விரைவில் RIயில் வெளியிடப்படும் புதிய சமயோஜிதத் திட்டத்தில் உறுதியான நடவடிக்கை எடுப்பதன் மூலம் ரோட்டரி இந்த போக்கைக் குறைக்க முடியும் என்று ஹ்யூகோ நம்புகிறார்.

## ஆறு சவால்கள்

அடுத்த சில தசாப்தங்களில் இதைப் பொருத்தமாக வைத்திருப்பது ஒரு சவாலாக இருக்கும் என்பதனால், ஒரு தொடர்ச்சியான முன்னேற்ற செயல்முறை மற்றும் மாற்றங்களைப் பின்பற்றுதல் ஆகியவை காணப்பட வேண்டும். மாற்றங்களைப் பின்பற்ற, குறிப்பாக தொழில்நுட்பத்தில், நாமும் பிற தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்க நாம் 'போதுமான வேகமுள்ளவர்களாக' இருக்கப் போகிறோமா?

ரோட்டரி மிகவும் நல்ல காரணங்களுக்காக இடைநிறுத்தத்தை செயல்படுத்தியுள்ளதாக அவர் கூறினார். நாம் வடிவமைப்பால் தொடர்ச்சியற்றிருக்கிறோம். நம் தலைவர், RI Board, DGக்கள் மற்றும் கிளப் தலைவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மாறுகின்றனர். சவால்களைச் சமாளிக்க நாம் 10 வருட தொடர்ச்சியான, நிலையான முயற்சிகளை எடுக்க வேண்டும். ஆனால் நமக்கு தொடர்ச்சி தேவைப்படும் ஒரு காலம் இருக்கும், அது ஒரு பிரச்சனையாக இருக்கும். நாம் நேரான பாதையில் செல்ல வேண்டும் மற்றும் நமது ஆளுகை கட்டமைப்புகளை ஆக்கிரமிப்பதற்கு வழிவகுக்கும் வழி விலகல்களைத் தவிர்க்க வேண்டும்.

''நாம் எளிதில் அளவிடக்கூடிய கீழிருந்து மேலான அணுகுமுறையுடன் போலியோவிற்குப்பின் ரோட்டரியின் அடுத்த பெரிய காரியமாக ஒரு செயலை மேற்கொள்ள வேண்டும்.'' என்று ஹ்யூகோ கூறினார். ஐந்தாவது சவால் பிரதேசமயமாக்கலாகும். உலகம் முழுவதும் ரோட்டரிக்குள் இப்போது வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன. நாம் பிராந்திய அளவில் வேறுபாடுகளை மதிக்க வேண்டும், அதே நேரத்தில், ரோட்டரியில் நம் அனைவரையும் பிணைக்கும் பசையை பராமரிக்க வேண்டும்,'' என்று அவர் கூறினார்.

இளைஞர் பரிமாற்றம், கூடுகை, உலகளாவிய நன்கொடைகள், நாம் செய்யும் அனைத்து வேலைகள் போன்ற நம்மை ஒன்றிணைக்கும் மதிப்புகள் மற்றும் காரியங்களை மனதில் கொள்ள வேண்டும். இறுதியாக, ரோட்டரியின் ஒரு பகுதியாக ரோட்டராக்டை உயர்த்தியுள்ளோம். நாம் இதை எவ்வாறு செயல்படுத்தப் போகிறோம்? ரோட்டராக்டர்கள் நம்முடைய ஒரு அங்கமாக மாறும் இந்த செயல் திட்டத்தை நாம் செயல்படுத்தும் போது நாம் கவனமாக இருக்க வேண்டும்.

சுருக்கமாகக் கூறுவதனால், இணக்கம், மாற்றங்களைப் பின்பற்றுதல், தொடர்ச்சி, அடுத்த உலகளாவிய திட்டம், பிரதேசமயமாக்கல் மற்றும் ரோட்டராக்டின் புதிய தோற்றம் ஆகியவை வரப்போகிற ஆண்டுகளில் ரோட்டரிக்கு சவாலான பகுதிகளாக இருக்கும்.

## 1.4 மில்லியன் ரோட்டரியினர்

அடுத்த 10 ஆண்டுகளில் 1.4 மில்லியன் ரோட்டராக்டர்கள் மற்றும் 1.4 மில்லியன் ரோட்டேரியன்களை விரிவுபடுத்தும் நம்பிக்கையில், இளமையான, புத்திக்கூர்மையுள்ள மனசுகளை தங்கள் சட்டைக் கைகளை சுருட்டிக் கொண்டு, ரோட்டரியில் வேலை செய்வதற்கு'' ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஹ்யூகோ கூறினார்.

TRF நன்கொடை, உறுப்பினர் சந்தா, பரிசுகள் மற்றும் பிற நன்கொடைகள் மூலம் உலகம் முழுவதுமுள்ள ரோட்டரியினர் திரட்டிய பணம் ஆண்டுக்கு $1.25 பில்லியன் ஆகும். இப்போது, நமது தன்னார்வ நேரத்தின் மதிப்பை சேர்த்தால், $850 மில்லியன் (ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தால் கணக்கிடப்பட்டது) ஆகும் மற்றும் நாம் திரட்டிய பணத்தின் மூலம், ஆண்டுக்கு $2 பில்லியன் மதிப்புள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமாகிறோம், இது கேட்ஸ் அறக்கட்டளையுடன் உலகின் இதுபோன்ற மிகப்பெரிய அமைப்புகளில் ஒன்றாகிறோம் என்று ஹ்யூகோ கூறினார்.

2025 ஆம் ஆண்டில் ரோட்டரி $2.025 பில்லியன் அரசு சாரா தொண்டு நிறுவனமாக வளர வேண்டும் என்று அவர் ரோட்டரியினர்களிடம் நினைவு படுத்தினார். இந்தியாவில் நீங்கள் முன்னனியில் இருக்கிறீர்கள். இந்த இலக்குதான் முன்னோக்கி செல்லும் ரோட்டரியின் மிகவும் அடிப்படையான நிதி ஆதாரமாகும்,என்று அவர் கூறினார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# DGE துணைவர்களுக்கான ஓர் நிகழ்ச்சி

ஜெய்ஸ்ரீ

DGEக்களை ஆதரிக்க துணைவர்களை தயார்படுத்த இந்தூர் இன்ஸ்டிட்யூட் சிறப்பு அமர்வுகளைக் நடத்தியது. கேய் மலோனி கூறினார்:'' நீங்களே உங்களுடைய DG-துணைவர்களின் கண்களும் காதுகளும் ஆவீர்கள்.''

கவர்னர் செயல்படும் விதத்தில் துணைவர்கள் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறார்கள் என்று கூறிய கேய், மேலும் இண்டர்நேஷனல் அசெம்பிளியில் (IA) முழு மனதுடன் பங்கேற்குமாறு வாழ்க்கைத் துணைவர்களை கேட்டுக்கொண்டார்.'' அங்கு சென்று உங்கள் தேசிய குழுவினுள் தங்குவது எளிது. ஆனால் உலகின் மற்ற பகுதிகளில் இருந்து DGEs இன் துணைவர்களை சந்தியுங்கள், அதனால் நீங்கள் அவர்களுடைய கலாச்சாரம், மக்கள் மற்றும் அவர்களின் தேவைகளை அறிந்து கொள்வீர்கள். அவர் தன் கணவர் மார்க் மலோனி DG ஆக இருந்தபோது தான் எப்படி அவருடன் உலகம் முழுவதும் பயணம் செய்தேன் என்பதை விளக்கினார். 1998ல், நாங்கள் இந்தியாவில் ஒரு NIDயில் பங்கேற்றோம். போலியோ நோய்த்தடுப்புக்காக குடும்பங்கள் தங்கள் சிறு குழந்தைகளை அழைத்து வருவதைப் பார்ப்பது மிகவும் உணர்ச்சிகரமான விஷயமாக இருந்தது. பின்னர் 2007ல், அவர்கள் மீண்டும் RI தலைவரின் பிரதிநிதியாக மீண்டும் வந்தனர், மற்றும் உள்ளூர் ரோட்டரி சங்கம் நீர் நிலையை மீட்டெடுத்தபோது மும்பை சேரிகளை சென்று பார்த்தனர்.'' ரோட்டரி செய்த நல்ல வேலையைப் பார்க்க எங்களுக்கு மிகவும் பெருமையாக இருந்தது'' என்றார். மருத்துவ பணிகள் என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான வையாகும்.

PRIP ராஜேந்திர சாபூவின் மனைவி உஷா, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ரோட்டரியை கவனித்து வருவதோடு இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பல சேவைகளில் பணியாற்றியிருக்கிறார்.'' மிகவும் பலனளிப்பதாக அதே நேரம் மனதிற்கு மிகவும் நெருக்கமானதாக மருத்துவ பணிகள் இருக்கின்றன. அக்டோபர் 1988ல், என்னுடைய 60வது வயதில் உகாண்டாவில் என் முதல் மருத்துவ பணியைத் துவங்கிய போது எனக்கு வாழ்க்கை புதிதாக துவங்கியது.'' இருபது ஆண்டுகள் ஆப்ரிக்கா, இந்தியா, தென் கிழக்கு ஆசியா, மங்கோலியா ஆகிய இடங்களுக்கு 40க்கும் மேற்பட்ட மருத்துவ பணிகளுக்கான பயணங்கள். ''இந்த பயணங்கள்



*DGEக்களின் மனைவிமார்கள், நொபுகோ கிட்டா, RI தலைவர் மலோனி, கேய், வானதி ரவீந்திரன், உஷா சாபூ மற்றும் மாதவி பாண்ட்யா ஆகியோருடன்.*

மீது எங்களுக்கு தீவிர விருப்பம் ஏற்பட்டுவிட்டது... ஓர் மகிழ்ச்சியான தவிர்க்க முடியாத பழக்கமாகிவிட்டது.''

நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுப்பது அல்லது பேண்டேஜிங் செய்வது, மருத்துவர்களுக்கு காபி பரிமாறுவது, அழுகிற தாயை சமாதானப்படுத்துவது அல்லது அறுவை சிகிச்சைக்கு செல்லும் குழந்தைக்கு ஒரு அரவணைப்பைக் கொடுப்பது இதில் எந்த வேலையாக இருந்தாலும் அதுவும் பணியே. மருத்துவ பணியில் பணியாற்றுவதன் மூலம் ரோட்டரியின் உண்மையான உணர்வை நான் புரிந்து கொண்டேன்.

இந்த அனுபவம் அவருக்கு பல மதிப்புமிக்க பாடங்களைக் கற்பித்திருக்கிறது. ''லுகோடெர்மா உருவான போது இந்த துன்பங்கள் அனைத்தையும் பார்த்தது என்னை பலப்படுத்தியது,'' என்றார்.

2004 சுனாமிக்கு பிறகு ரோட்டரி மூலம் இலங்கையில் PRIP K R ரவீந்திரன் தலைமையில் ரோட்டேரியன்கள் 14,000 குழந்தைகள் ஒவ்வொரு ஆண்டும் படித்து விட்டு வெளியே வரும் 25 பள்ளிகளை மீண்டும் கட்டினார். உத்தர்காண்டில் 2013ன் பெரிய பூகம்பத்திற்கு பிறகு,





*இன்டர்நேஷனல் அசெம்ப்லியில் பங்கு பெற மனைவிமார்களுடன் நடன பயிற்சியில் சோனல் மற்றும் மாதவி.*

PRID Y P தாஸ் 32 பூகம்பம் மற்றும் நிலச்சரிவினை எதிர்த்து நிற்கக்கூடிய பள்ளிகளை ருத்ரபிரயாக்கில் கட்டினார் என்றும் அவர் கூறினார்.

ரோட்டரியின் ஆன்மாவை உயிரோட்டமாகவும், துடிப்பாகவும் வைத்திருக்க, நாம் இரக்கத்துடனும் அக்கறையுடனும் இதுபோன்ற மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். சுயம் என்ற உணர்விலிருந்து விலகி அதற்கும் மேலானது சேவை என்ற மாற்றத்தை தருவதே ரோட்டரி, என்று அவர் கூறினார்.

துணைவர்கள் பணிக்கு தயாராக இருக்க வேண்டும் மற்றும் அவர்களின் மாவட்டங்களைப் பற்றிய அடிப்படை களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று வானதி ரவீந்திரன் கேட்டுக் கொண்டார். எத்தனை சங்கங்கள் உள்ளன, உங்கள் மாவட்டத்தின் நீளம் மற்றும் அகலம், உறுப்பினர் வளர்ச்சி அல்லது இழப்பு, மாவட்டம் செய்து வரும் திட்டங்கள் எந்த திசையில் செல்கின்றன என்பது தெரிந்திருக்க வேண்டும் என்றும் கூறினார்.

DGக்கள் அறக்கட்டளைக்கு நிதி திரட்ட வேண்டும். வானதி, ரவீந்திரன் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் தன்னுடைய சங்கத்திற்கு தன் முதல் காசோலையாக அளிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தார் என்பதை இங்கு நினைவூட்டினார். தொகை பெரிதாகவோ, சிறிதாகவோ இருக்கலாம். அவர் முதலில் கொடுப்பதால், அவர் அறக்கட்டளைக்காக மற்றவர்களிடம் பணம் கேட்கத் தயங்கியதே இல்லை.'' உங்கள் கணவரை முதல் காசோலை வழங்க நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்; அவ்வாறு செய்ய உங்கள் சம்மதமும் இருப்பதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும் என்றார்.''

மாவட்டத் தலைவரின் வெற்றிக்கு துணைவரின் ஆதரவின் முக்கியத்துவத்தை டாக்டர் மாதவி பாண்ட்யா மீண்டும் வலியுறுத்தினார். பறக்க இரண்டு இறக்கைகள் தேவை என்று அவர் கூறினார். புன்னகையுடன் மக்களைச் சந்திக்கவும். ஆக்கபூர்வமாகவும் சிந்தனையுடனும் இருங்கள். சிறிய திட்டங்களை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமைகளை ஊக்குவித்து அதனால் மற்றவர்கள் பயன் பெறச் செய்யவும், என்று அறிவுரை வழங்கினார்.

எனக்கு இந்த ஒரு வருடம் உள்ளது, நான் அதை முழுமையாக வாழ்வேன்-இது உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் என்று சோனல் சங்வி கூறினார்.

ரோட்டரிக்கு உங்கள் வீடு அல்லது வேலையை விட முன்னுரிமை கொடுக்க தேவையில்லை. இந்த மூன்றில் எதுவும் பாதிக்கப்படாத வகையில் உங்கள் ஆண்டை கவனமாக திட்டமிடுங்கள் என்று RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோவின் மனைவி மார்கா கூறினார்.■

# இன்ஸ்டிட்யூட் வண்ணங்கள்



Hemant Kumar



PDG பாலகிருஷ்ண இனாம்தாரின் மனைவி நீலிமா, PDG தீபக் புரோஹித்தின் மனைவி வீணா, மாதவி பாண்ட்யா, மார்லின் காம்தார், சோனல் சங்வி மற்றும் வித்யா சுப்ரமணியன்.



PRIP ராஜேந்திர சாபு, உஷா, PRIP கல்யாண் பானர்ஜி, வருமாண்டு TRF தலைவர் ரவீந்திரன், வானதி, RID கமல் சங்வி, சோனல் அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ், RI பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ மற்றும் அறங்காவலர் குலாம் வஹன்வதி இன்ஸ்டிட்யூட் துவக்க விழாவில்.





D 3232 குழு PDG ISAK நாசர், RIDN A S வெங்கடேஷ், DG G சந்திரமோகன் மற்றும் DGE S முத்துபழனியப்பன் RIPN சேகர் மேத்தாவுடன்.



பினோதா பானர்ஜி தன் கணவர் கல்யாண் பானர்ஜியை புகைப்படம் எடுக்கிறார்.

ஹேமந்த் குமார்



வித்யா, இன்ஸ்டிட்யூட் தலைவர், T N சுப்ரமணியன், RI தலைவர் மார்க் மலோனி, கேய், RIPN சேகர் மேத்தா, ராஷி, மாதவி மற்றும் RID பரத் பாண்ட்யா.



சார்ஜென்ட் அட் ஆர்ம்ஸ் PDG B ஜெயராஜன், மோனா கியானி, PDG பாபு ஜோசஃப், RID பரத் பாண்ட்யா, PDG J P வியாஸ், நீட்டா வியாஸ், DG சிவநாராயண ராவ், Rtn ரவி ராமன் மற்றும் ரஜித் மேனன்.



TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் ஜெனிஃபர் ஜோன்ஸ்.



ரோட்டரி நியூஸ் இதழை வாசிக்கும் RI பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ.





PRIPs ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி.



உஷா சாபூ மற்றும் மாதவி பாண்ட்யா.



கேய் மலோனியுடன் உஷா சாபூ.



பினோதாவுடன் உரையாடும் RI தலைவர் மலோனி.
PRIP கல்யாண் பானர்ஜியும் உடன் உள்ளார்.



RI பொது செயலாளர் ஜான் வ்ற்யூகோ,
RI தலைவர் மலோனி மற்றும் மார்கரீட்டா வ்ற்யூகோ.



RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி.



அப்போலோ மருத்துவமனையின் துணைத்தலைவர் ப்ரீதா
ரெட்டியை வரவேற்கிறார் PRID பாண்டுரங்கசெட்டி,
RID பாண்ட்யாவும் உடன் உள்ளார்.





வருமாண்டு TRF தலைவர்
K R ரவீந்திரனுடன் RID சங்வி
மற்றும் PRIP சாபு.



RI பொதுசெயலாளர் வ்ற்யூகோவும்
அவர் மனைவி மார்கரீட்டாவும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# பெண்கள் சலுகைகளை அல்ல; வாய்ப்புகளைதான் எதிர்பார்க்கிறார்கள்: ஸ்மிரிதி இரானி

ரஷீதா பகத்

சமீபத்தில், இந்தியாவில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாவதும் எரிக்கப்படுவதும் போன்ற வன்முறை நிகழ்வுகளும் அதிகரித்து வருகின்றன. இந்தப் பின்னணியில், பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்துக்கான மத்திய அமைச்சரான ஸ்மிரிதி இரானி இந்தூர் சந்திப்பில் வழங்கிய பேச்சு மிகச்சிறப்பாக அமைந்தது. பாலினச் சமநிலைக்கான அவசரத் தேவையை வலியுறுத்திய அவருடைய அழைப்பு, பங்கேற்பாளர்களை வியக்க வைத்தது.

"நான் எப்போதும் மிகச் சிறப்பாகப் பணியாற்றியாகவேண்டும்; ஏனெனில், ஒருவேளை நான் தோற்றுவிட்டால், மக்கள் என்னை மட்டும் குறைசொல்லப் போவதில்லை; பெண்கள் எப்போதும் தோற்றுப் போகிறவர்கள் தான் என்று முத்திரை குத்திவிடுவார்கள்" என்று ஒரு பெண் தெரிவித்திருந்த கருத்தை முன்வைத்து, ஒருங்கிணைப்பாளரும் RI இயக்குநருமான பரத் பான்ட்யா கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், உண்மையில், ஒரு பெண் எப்போதும் மற்றவர்களை விடச் சிறப்பாகப் பணியாற்ற வேண்டியிருக்கிறது என்றார். காரணம், ஒரு வேளை அவர் தோற்றுவிட்டால், அவருடைய பாலினமும் அந்த நோக்கமும் தோற்றுவிட்டதாகப் பிறர் கருதுகிறார்கள்.''

நம் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான இந்தச் சாய்வுநிலை வேரூன்றியுள்ளது என்று தெரிவித்த அவர், இதற்கு எடுத்துக்காட்டாக,



*கேய் மலோனி த்ரிவேனி ஆச்சார்யாவை கௌரவிக்கிறார். மத்திய அமைச்சர் ஸ்மிரிதி இராணி, இன்ஸ்டிட்யூட் தலைவர் சுப்ரமணியன் மற்றும் RID பரத் பாண்ட்யா அவர்களும் உடன் உள்ளனர்.*

மும்பையில் நிகழும் போக்குவரத்து நெரிசலொன்றைக் குறிப்பிட்டார், முன்னால் சென்று பாருங்கள், கண்டிப்பாக ஒரு பெண்தான் இந்த நெரிசலை உண்டாக்கியிருப்பார் என்று யாரேனும் சொல்வார், என்றார்.

இச்சந்திப்பில் பெருமைப்படுத்தப் பட்ட இரண்டு துணிவான பெண் களைக் (மானசி ஜோஷி மற்றும் திரிவேணி ஆசார்யா) குறிப்பிட்டுப் பேசிய அவர், பெரிய சவால்கள் வரும் போது பெண்களால் இப்படிப் பட்ட மன உறுதியைக் காண்பிக்க இயலும் என்பதை மக்கள் நினைவில் கொள்ளவேண்டும் என்றார்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னால், சாலை விபத்தொன்றில் ஒரு காலை இழந்த மானசி, ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற பன்னாட்டுப் பாரா-பேட்மின்டன் சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். திரிவேணியோ 5,000 பெண்களை விபச்சாரத் தொழிலிலிருந்து மீட்டுள்ளார்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் ஒரு பெண்ணாக இருப்பது எவ்வளவு



சிரமம் என்பதை மக்களுக்கு நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது. மானசி துணிந்து கனவுகண்டார், திரிவேணி துணிச்சலுடன் செயல்பட்டுப் பிறரைக் கனவு காணச் செய்தார். இவர்கள் இருவருமே தங்களுடைய தனித்துவ மான வழிகளில் துணிவை வரையறுத்தார்கள்.

இதுபற்றி விமர்சிப்பது மிக எளிது; ஆனால், ஒருவருடைய வாழ்க்கையை மாற்றுவது மிகக் கடினம். விபச் சாரத்தில் சிக்கியுள்ள பெண்களை மீட்பதற்காகவே தன்னுடைய ஒட்டு மொத்த வாழ்க்கையையும் அர்ப் பணித்துள்ளார் திரிவேணிபென். அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறார் என்ற அமைச்சர், அனைவரும் எழுந்து நின்று கைதட்டித் திரிவேணி பென்னைப் பெருமைப்படுத்தவேண்டும் என்று பார்வையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

இப்போதெல்லாம் பெண்களுக்கு ஆற்றலளிப்பதைப்பற்றிப் பேசுவது ஃபேஷனாகிவிட்டது என்று குறிப்பிட்ட பான்ட்யா, பெண்கள் பிறரால் ஆற்றலளிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா என்று அமைச்சரைக் கேட்டார்.

அவர் தன்னுடைய அறிமுகத்தில் சுவாமி விவேகானந்தரைப்பற்றிக் குறிப்பிட்டதை இரானி நினைவு கூர்ந்தார். சிலர் சுவாமி விவேகானந்தரிடம் சென்று, நாம் எல்லாரும் சேர்ந்து பெண்களுக்கு ஆற்றலளிப்பதைப்பற்றிப் பேசுவோம் என்றார்கள். அப்போது சுவாமிஜி கேட்டார், பெண்களுக்கு ஆற்றல் அளிக்க நீங்கள் யார்? அவர்களுக்குக் கல்வியை வழங்குங்கள்; அவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆற்றலளித்துக் கொள்வார்கள். அதற்கான முழுத் தகுதியும் அவர்களுக்கு உள்ளது.''

அதேசமயம், பாலினச் சமநிலையைக் கொண்டு வருவதற்கு நம்மால் உதவ இயலும், நம்மால் இயன்ற சிறிய விஷயங்களைச் செய்ய இயலும்; இதைப்பற்றி நம்மை நாமே கேள்வி கேட்டுக்கொள்ளவேண்டும். ரோட்டரியன்கள் அவருடைய நோக்கத்தில் எப்படியெல்லாம் உதவினார்கள் என்று திரிவேணி பென் குறிப்பிட்டார். இதற்கு எல்லாம் உங்களுக்கு நேரம் இல்லா மலிருக்கலாம்; ஆனால், இதற்கு உதவக்கூடிய வளங்கள் உங்களிடம் உள்ளன, இப்படிப்பட்ட உறவுகளை வலுப்படுத்தவேண்டும். மிகச்சிறந்த அதிசயங்களைச் சாதிக்கும் திறன் பெண்களுக்கு உண்டு; அதற்கான வாய்ப்பும், இடமும் அவர்களுக்குத் தேவை.''

மக்களுடைய மனநிலையை மாற்றுவது எப்படி என்று இன்ஸ்டிட்யூட்டின் தலைவர் PDG T N சுப்ரமணியன் அமைச்சரைக் கேட்டார். அவருக்குப் பதிலளிக்கையில், பெண்கள் சிறப்பாகச் செயல்பட்டு வெற்றிபெறுவதற்குச் சலுகைகள் வேண்டியதில்லை, வாய்ப்புகள்தான் தேவை என்றார்.

பின்னர், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைச் செயல்பாடுகள் அதிகரித்துவருவதைப்பற்றிப் பார்வையாளர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்குப் பதிலளித்த இரானி, பாலினச் சமநிலையின்மையும் பெண்களுக்கு எதிரான வன்முறையும் இந்தியாவில்மட்டுமின்றி உலகம் முழுக்க இருக்கின்றன என்றார். இந்தியாவில், இந்த உரையாடலில் ஆண்களும் சமமான கூட்டாளிகளாக உள்ளார்கள் என்பதை எண்ணி நான் மகிழ்கிறேன். ஆண்களை நாம் எதிரிகளாக ஆக்க இயலாது.''

இங்குள்ளவர்கள் அனைவரும் பையன்கள், பெண்களுடைய பெற்றோர் என்பதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் ஒரு முக்கியமான அம்சத்தை முன்வைத்தார், இந்த விஷயத்தில் நாம் ஊடகங்கள், அமைப்புகள், சமூகத்தின்மீது பழி போட்டுவிட்டு நம்முடைய பொறுப்பைத் தட்டிக்கழிக்க இயலாது. ஏனெனில், நாம்தான் சமூகத்தை உருவாக்குகிறோம். நம்முடைய குழந்தைகள் (குறிப்பாகப் பையன்கள்) பெண்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதற்கு நாம்தான் பொறுப்பு.

நாம் சமநிலையைப்பற்றிப் பேசினால், பெண்களை மதிக்க வேண்டும் என்று பேசினால், அதை வீட்டிலிருந்து தொடங்கவேண்டும். நம்முடைய மகன்கள் பெண்களை எப்படிக் காண்கிறார்கள் என்பதற்கும்,

நம்முடைய மகள்கள் தங்களுடைய உரிமைகளுக்காக எப்படிக் குரல்கொடுக்கிறார்கள் என்பதற்கும் நாம்தான் பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

திரிவேணிபென் இதுபற்றித் தன்னுடைய கணவரிடம் பேசியுள்ளார். அவரை இதில் கூட்டாளியாக ஆக்கிக்கொண்டுள்ளார். Rescue Foundationற்கு உதவுவதன் மூலம், ரோட்டரியும் அவருடைய கூட்டாளியானது.''

இந்த நாடு நம் மகள்களுக்குப் பாதுகாப்பாக இல்லை என்றும், அரசு அதைப்பற்றி என்ன செய்கிறது என்றும் ஒரு பெண் கவலை எழுப்பிய போது, அரசாங்கம் பாலியல் வன்முறையில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனையை வழங்குகிறது என்று தெரிவித்தார். அதைவிடப் பெரிய தண்டனை இருக்க இயலாது. அத்துடன், நாங்கள் 1,023 விரைவு நீதிமன்றங்களை அமைத்துள்ளோம்.

நீதியை நாடும் எந்தப் பெண்ணாலும் அவருடைய சொந்தப்பகுதியிலேயே நீதியை அணுக இயலும் என்பதை அரசு உறுதி செய்ய விரும்புகிறது என்றார். ஆனால், இதிலும் ஒரு சவால் உள்ளது. பல பெண்களால் சட்ட உதவிக்கான கட்டணத்தைச் செலுத்த இயலுவதில்லை. ஆகவே, திரு சுப்ரமணியன் போன்ற வழக்கறிஞர்கள் மிக அதிகக் கட்டணம் பெறுவதை விடுத்து ஒரே ஒரு பெண்ணுக்கு உதவினால் கூட, அது ஒரு மாற்றமாகும்.''

சட்ட உதவியுடன், இப்படிப்பட்ட பெண்கள் மீண்டும் தங்களுடைய சொந்தக்காலில் எழுந்து நிற்க ஆதரவு தேவை. நிதியளவிலும் சரி, உளவியல் அடிப்படையிலும் சரி, அவர்களுக்கு நம் உதவி தேவைப்படுகிறது. நாம் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட ஒரே ஒரு பெண்ணுக்கு உதவினால்கூடப் போதும், அது ஒரு பெரிய பங்களிப்பாக இருக்கும்.

ஆனால், என்னை நடுங்கச்செய்யும் அளவுக்கு ஒரு புள்ளிவிவரமும் உள்ளது. தண்டனை பெற்ற பாலியல் குற்றவாளிகளுடைய தேசியத் தரவுத்தளமொன்றை நாம் முதன்முறையாக உண்டாக்கி யுள்ளோம். அந்தத் தரவுத்தளத்தில் 7 லட்சத்துக்கும் மேற்பட்ட பாலியல் குற்றவாளிகள் உள்ளார்கள்.

சிறுவர் ஆபாசப்பட இணையத் தளங்களையும் விபச்சாரத்தைச் சட்டப்பூர்வமாக்கும் கோரிக்கை களையும் கடுமையாகக் கண்டித்த அமைச்சர், இப்படிப்பட்ட ஓர் இணையத்தளத்தில் 5000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் உள்ளார்கள் என்றார். என்னுடைய கேள்வி என்னவென்றால், இந்த இணையத்தளத்தில் சிறுவர்களுடைய ஆபாசப்படங்களைப் பார்க்கிற இந்த மக்கள் யார்?

சிவப்பு விளக்குப் பகுதிகள் சமூகத்தின் தேவைகளை நிறை வேற்றுகின்றன என்றும், அதனால் நாம் விபச்சாரத்தைச் சட்டப் பூர்வமாக்கவேண்டும் என்றும் சொல்கிறவர்களை நான் ஒரு கேள்வி கேட்கிறேன்: தன்னுடைய தேவைகளை நிறைவுசெய்வதற்காக ஒரு பெண்ணை ஒரு பாலியல் ஆசைப் பொருளாக ஆக்கும் சமூகம் எப்படிப்பட்டது?

பெண்களுக்கு எதிரான இந்தக் கொடும் சட்டவிரோதச் செயல்களைச் சட்டப்படி அனுமதிக்கவேண்டும் என்று நினைக்கிறவர்கள், அதன்மூலம், பாலியல் வன்முறைக்கு எதிரான ஒரு பாதுகாப்பான சூழல் பெண்களுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறவர்கள் எல்லோரும், பெண்களைப்பற்றிய மனிதத்தன்மையற்ற அணுகு முறையைக் கொண்டுள்ளார்கள்.

அறிவார்ந்த பதில்கள், நகைச் சுவையான கருத்துகள், கலகலப்பான பதிலடிகளின்மூலம் இரானி பார்வையாளர்களுடைய பெரும் வரவேற்பைப் பெற்றார். பாலினச் சமநிலையைப்பற்றி ஒரு ரோட்டரியன் கேள்வி எழுப்பியபோது,



*ரோட்டராக்டர்களுடன் மத்திய அமைச்சர் ஸ்மிரிதி இராணி, RI தலைவர் மலோனி, கேய், இன்ஸ்டிட்யூட் தலைவர் T N சுப்ரமணியன், RID பரத் பாண்ட்யா, மாதவி மற்றும் வித்யா.*

உங்களுடைய தொழில் என்ன என்று பதில் கேள்வி கேட்டார் அமைச்சர். "உங்களுடைய ஆண் மற்றும் பெண் ஊழியர்களுக்கு நீங்கள் சம அளவு சம்பளம் வழங்குகிறீர்களா?"

அதற்கு அவர் அப்படிச் சொல்ல முடியாது, அது சம்பளப் பட்டியலைப் பொறுத்தது என்று பதில் சொன்னார். உடனே அமைச்சர், இதைத்தான் நான் எதிர்பார்த்தேன் என்றார். அரங்கம் கைதட்டி அவரை ஊக்குவித்தது.

பெருநிறுவன ஏணியில் எப்படி முன்னேறுவது என்பது, பெண்கள் சந்திக்கும் சவால்களில் ஒன்று.'' பணியிடத்தில் ஆண்கள், பெண்களுடைய பங்களிப்பைத் தாங்கள் நியாயமாக மதிப்பிடுகிறோமா என்று நிறுவனங்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளவேண்டும். பணி நேரங்கள், கெடுக் காலகட்டத்தை நீட்டிப்பது போன்ற விஷயங்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே மாதிரியான தரநிலைகளைதான் தாங்கள் பயன்படுத்துகிறோமா என்று அவர்கள் சிந்திக்கவேண்டும்.

நன்கு படித்த பெண்கள், பட்டயக் கணக்காளர்போன்ற தகுதிகளைப் பெற்ற பெண்கள் பலர் திருமணத்துக்குப்பிறகு பணிபுரிய அனுமதிக்கப்படுவதில்லை, அவர்கள் தங்களுடைய கணவர்மார்களை



*மத்திய அமைச்சர் ஸ்மிரிதி இராணி, இன்ஸ்டிட்யூட் தலைவர்* T N *சுப்ரமணியன் மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*

ஊக்கப்படுத்த வேண்டியிருக்கிறது என்று தொடங்கி ஒரு நீண்ட கேள்வியை இன்னொருவர் கேட்ட போது, அவரை நகைச் சுவையாக இடைமறித்தார் அமைச்சர். நான் கணவர்மார்களை ஊக்கப்படுத்தவேண்டுமா? மற்ற பெண்களுடைய கணவன்மார்களை நான் ஊக்கப்படுத்தவேண்டும் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை ஐயா ஒருவேளை, நான் சாஸ் பி கபி பஹூ தி என்ற புகழ்பெற்ற இந்தித் தொடரில் துள்சியாக நடித்ததால்தானோ?.

நகைச்சுவையைத் தொடர்ந்து, தீவிரமான தொனியில் தொடர்ந்து குறிப்பிட்டது: நாம் சந்திக்கும் சவால் என்னவென்றால், பல நேரங்களில் பெண் CAக்கள் திருமணத்துக்குப்பிறகு இடம் மாற வேண்டியிருக்கிறது; புதிய இடத்தில் தங்களுடைய பணியை மீண்டும் தொடங்குவது எப்படி என்று அவர்களில் பெரும்பாலானோருக்குத் தெரிந்திருப்பதில்லை. அதே தொழிலில் இருக்கும் மற்றவர்கள் அவர்களுக்கு உதவ இயலுமானால், அது அவர்களுக்குப் பெரிய அளவில் துணைநிற்கும்.''

எழுத்தறிவு, பள்ளிகளில் கழிப் பறைகளைக் கட்டுவதுபற்றிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு கேட்டார்: "உங்களுக்கு என்ன உதவி தேவை? அதை என்னிடம் சொல்லுங்கள்; நீங்கள் கேட்ட உதவி கிடைக்கும்.''

சம வாய்ப்புகளைப் பொறுத்த வரை, அவை நம் நாட்டில் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால், அவற்றை அமல்படுத்துவதில் பிரச்னை இருப்பதாகச் சொன்னார்.

எடுத்துக்காட்டாக, குழந்தைப் பராமரிப்புக்கான 26 வாரத் தாய்மை விடுமுறையை எடுத்துக் கொண்டார் அமைச்சர். "நாட்டின் மிகப்பெரிய ஊடக நிறுவனங்களில் ஒன்று, முதன்மையான நேரத்தில் இப்பிரச்னையை விவாதிக்கிற அமைப்பு, தன்னுடைய சொந்த நிறுவனத்தில் இதை அமல்படுத்த வில்லை என்பதை கண்டறிந்தோம்.

ஆகவே, அரசாங்கம் (பாலினச் சமநிலைக்கான) சட்டங்களை வகுக்கிறது; ஆனால், அவற்றை அமல்படுத்தும் பணி மீதமிருக்கிறது.

புகைப்படங்கள்:
ரஷீதா பகத்



# நவம்பர் 2020ல் கொச்சியில் அடுத்த இன்ஸ்டிட்யூட்

ரஷீதா பகத்





**கீழே:** *கொச்சி இன்ஸ்டிட்யூட்டிற்கு பதிவு செய்யும் பூத் ஒன்றை RI தலைவர் மார்க் மலோனி. RIPN மேத்தா, சோனல் சங்வி முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.*

RI இயக்குநர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் கமல் சங்வி, PDG சஞ்சய் கெம்கா ஆகியோர், கொச்சியில் நிகழவிருக்கும் அடுத்த பிராந்தியச் சந்திப்பைப்பற்றி வண்ணமயமானமுறையில் ஓர் அறிமுகத்தை வழங்கினார்கள். நவம்பர் 26–28ல் நடைபெற விருக்கும் இந்தச் சந்திப்பின் தலைவராக PDG சஞ்சய் கெம்கா செயல்படுவார்.

கொச்சிச் சந்திப்புக்கான அரங்கத்தைத் தொடங்கி வைத்தார் RI தலைவர் மார்க் மலோனி. அந்த அரங்கம், கேரளத்தில் வடிவமைக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்ட ஒரு கேரளப் படகுடன் வண்ணமயமாகவும் படைப்புணர்வுடனும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மசாலாப்பொருட்கள், தேங்காய் ஆகியவற்றுடன் அலங்கரிக்கப்பட்டிருந்த இந்த அரங்கம், ரோட்டரியன்கள் அடுத்த சந்திப்புக்காக விரைவாகப் பதிவுசெய்து கொள்ளவும், முன்கூட்டியே பதிவுசெய்கிறவர்களுக்கான ஒரு தள்ளுபடியைப் பெறவும் உதவியது.

கிராண்ட் ஹயாத் பொல்காட்டித் தீவில் நடைபெறவுள்ள கொச்சி சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு ரோட்டரியன்களை வரவேற்ற ஒருங்கிணைப் பாளர் சங்வி, இந்தத் தென்னிந்திய நகரத்தின் கவர்ந்திழுக்கும் பல அம்சங்களை நினைவுகூர்ந்தார்.

கீழையுலகின் வெனிஸ் என்றும் கொச்சியை அழைப்பார்கள் என்று குறிப்பிட்ட அவர், அங்கு வருகிறவர்களுக்குத் தலைவர் சஞ்சய் கெம்கா அன்பும் நட்பும் நிறைந்த ஒரு சந்திப்பை இதயச் சந்திப்பை உங்களுடைய பழைய நட்புகளைப் புதுப்பிப்பதற்கான, புதிய நட்புகளை உருவாக்கிக் கொள்வதற்கான ஓர் இடத்தை உறுதிசெய்வார் என்று வாக்களித்தார்.

கெம்காவும் இந்தப் பேச்சில் ஒரு துளி மசாலாவைச் சேர்த்துப் பங்கேற்பாளர்களை மயக்கிக் கவர்ந்திழுத்தார். இந்தச் சந்திப்புக்கு வருகிறவர்கள் பலவிதமான உணவுப்பொருட்கள், அப்பம், இன்னும் பல சுவையான தின்பண்டங்களை ருசிக்கலாம், உண்மையான ஒரு விருந்து அனுபவத்தைப் பெறலாம் என்று வாக்களித்தார் அவர். இத்துடன், இங்குள்ள உப்பங்கழிகளின் மாயாஜாலத்தையும்,



**மேலே:** 2020 *கொச்சியில் நடைபெற உள்ள இன்ஸ்டிட்யூட்டை பிரபலப்படுத்தும் சோனல் மற்றும் RID கமல் சங்வி, மாதவி, ராஷி மற்றும் கொச்சி இன்ஸ்டிட்யூட் குழு.*






RIPN *சேகர் மேத்தா, RI தலைவர் மார்க் மலோனி, RID கமல் சங்வி மற்றும் கொச்சி இன்ஸ்டிட்யூட் தலைவர் சஞ்சய் கேம்கா.*

படகுப் பயணங்களையும் சேர்த்துக் கொண்டால், கொச்சி நகரம் உண்மையிலேயே பயணிகளின் சொர்க்கம்தான்.

கொச்சிச் சந்திப்பின் இணைத் தலைவர் PDG TVR மூர்த்தி, சந்திப்பின் செயலாளர் PDG ஜான் டானியல், தலைமைத் திட்ட வல்லுனர் PDG சந்தீப் நாரங். துணைத்தலைவர், PDG அனிருத்தா ராய் சௌத்ரி.

இந்த விளம்பரச்செயல் பாட்டின் நிறைவாக, சந்திப்புக் குழுவினர் அனைவரும், வெள்ளைவெளேர் கேரளச் சேலைகளை உடுத்திய அவர்களுடைய துணைவர்களும், RIPN சேகர் மேத்தா, ராஷியும் புகழ்பெற்ற மலையாளப் பாடலான ஜிமிக்கிக் கம்மலுக்கு நடனமாடினார்கள்.

இந்தச் சந்திப்புக்காக இணையத்தில் பதிவுசெய்து கொள்ள விரும்புகிறவர்கள் இந்த இணையத்தளத்துக்குச் செல்லலாம்: www.rotaryinstitute2020.org.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# இன்ஸடிட்யூட் துளிகள்







ரோட்டரியினரை RI ஹொனலுலுவில் ஜூன் 6–10ல் நடைபெறவுள்ள RI கன்வென்ஷனுக்கு பதிவு செய்ய ஊக்குவிக்கும் RI தலைவர் மலோனி, PDG தீபக் ஷிகார்பூர் மற்றும் கன்வென்ஷன் விளம்பர கமிட்டித் தலைவர் PRID P T பிரபாகர்.

கார்கில் மற்றும் சியாச்சன் பகுதிகளில் சேவை புரியும் இந்திய ராணுவ வீரர்களுக்கு தீபாவளி கொண்டாட்டமாக RID 3080 2017ம் ஆண்டு முதல் அவர்களுக்கு இனிப்பு காரவகை களை அனுப்பிக் கொண்டிருக்கிறது. இந்த திட்டத்தை உஷா சாபு துவக்கினார். இத்திட்டத்தலைவர் காவல் பேடி இத்திட்டத்திற்கு பிற ரோட்டரியனரும் ஆதரவு தரும்படி கேட்டுக்கொண்டார்.



ரோட்டரி இந்தியா நூற்றாண்டை முன்னிட்டு www.rotary-india.org என்னும் ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களை தங்கள் சங்கத்தின் பலவிதமான ப்ராஜக்ட்டுகளை பதிவேற்றலாம். இந்த வலைதளத்தை RI தலைவர் மார்க் மலோனி இன்ஸ்டிட்யூட்டில் RIPN சேகர் மேத்தா, RIDs பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி உள்ளிட்டோர் மத்தியில் துவக்கி வைத்தார்.

**கீழே:** Zone 4,5,6 மற்றும் 7 ரோட்டரி மூத்த தலைவர்கள் இந்திய ரோட்டரியின் நூற்றாண்டை முன்னிட்டு 'ஹெரிட்டேஜ்' விருதுகள் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர்.










RIDs பரத் பாண்ட்யா மற்றும் கமல் சங்வி அவர்களின் புதிய திட்டமான 'ப்ராஜெக்ட் பாஸிடிவ் ஹெல்த்' - இதன் கீழ் இன்ஸ்டிட்யூட்டில் அப்போலோ மருத்துவமனை பூத்தில் சலுகை விலையில் ரோட்டரியினர் இரத்த அழுத்தம், சக்கரை மற்றும் பல்வேறு நோய் அறிகுறிகளை கண்டறியலாம். இந்த அப்போலா பூத்தை RI தலைவர் மார்க் மலோனி, பாண்ட்யா, சங்வி மற்றும் RIPN சேகர் மேத்தா முன்னிலையில துவக்கி வைத்தார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# ரோட்டராக்டர்களுடன் ஓர் கலந்துரையாடல்

ஜெய்ஸ்ரீ

ரோட்டராக்டர்களுடைய முக்கியத்துவம் அதிகரித்துவருவது இந்தூர் சந்திப்பில் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது: முந்தைய CoLல் ரோட்டராக்டை உயர்த்துவோம் என்ற வாக்கின் மிகச்சிறந்த வெற்றி, 2019 சான் டியாகோ பன்னாட்டுச் சந்திப்பில் 60 ரோட்டராக்டர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது, ஹாம்பர்க் சந்திப்பில் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றது ஆகியவற்றைத் தொடர்ந்து, இந்தச் சந்திப்பிலும் அவர்கள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தார்கள்.

வரலாற்றில் முதன்முறையாக, இந்தூர் சந்திப்பின் நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு 26 ரோட்டராக்டர்கள் வந்திருந்தார்கள் ரோட்டராக்ட் தொடர்பான சமீபத்திய வாரியத் தீர்மானங்களைப்பற்றிய பலவிதமான பார்வைகள் அதில் இடம்பெற்றன.

ரோட்டராக்டர்கள் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய தொகையை வசூலிப்பதற்கு RI வாரியம் தீர்மானித்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தொகை எவ்வளவு என்று RID 3291ன் PDRR ஸ்ரீஜிதா கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த

DRRகள், RIPN *சேகர் மேத்தா, ராஷி*, RID *கமல் சங்வி* RI *பொது செயலாளர் ஜான் ஹ்யூகோ, மார்கரீட்டா*, TRF *அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ்*, PDGs *ஷ்யாமாஸ்ரீ சென் மற்றும் ருச்சீர் ஜானி ஆகியோருடன்.*



RI தலைவர் மார்க் மலோனி, அடுத்த போர்ட் கூட்டத்தில் இந்தத் தொகை தீர்மானிக்கப்படும் என்றார். ''உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தும் போது, அவர்களைப்பற்றிய புள்ளி விவரத் தகவல்கள் நமக்குக் கிடைக்கும். அதைக்கொண்டு நாம் திட்டமிடலாம், புதிய சிந்தனைகளை உருவாக்கலாம். அத்துடன், ரோட்டராக்ட் RIன் உறுப்பினராகி விட்டால், சங்கங்கள் சில சேவை களில் ஈடுபடவேண்டும் என்று எதிர்பார்க்கப்படும்; அதற்கு நமக்கு நிதி தேவை.''

TRF அறங்காவலர் ஜெனிஃபர் ஜோன்ஸ், RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, RID 3054ன் DRR குஷால் புவா, RID 3291ன் PDRR ஸ்ரீஜிதா கலந்துகொண்ட, RID கமல் சங்வி ஒருங்கிணைத்த உரையாடலொன்றில் அவர் இதைக் குறிப்பிட்டார். ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்களைக் கொண்ட பார்வையாளர்கள் மத்தியில்



மலோனி, RIPN சேகர் மேத்தா, RID பரத் பாண்ட்யா, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் PRID C பாஸ்கர் ஆகியோரும் இருந்தார்கள்.

ரோட்டராக்டை உயர்த்துவோம், ரோட்டராக்டர்களுக்கான வயது வரம்பை அகற்றுதல் மற்றும் ரோட்டரி ஆதரவளிக்கும் ரோட்டராக்ட் சங்கங்களை நிறுத்துதல் ஆகியவையும் விவாதிக்கப்பட்டன.

ரோட்டராக்டை உயர்த்துவதற்கு என்ன தேவை? என்று ஜெனிஃபரைக் கேட்டார் சங்வி. அதற்கு ஜெனிஃபர் இவ்வாறு பதிலளித்தார்: 2016ல், ரோடராக்டர்களில் வெறும் 5 சத விகிதத்தினர்தான் ரோட்டரியன்களாக ஆனார்கள் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். இது எங்களுக்கு அதிர்ச்சி தந்தது. ரோட்டரி அவர்களுடைய DNAல் இடம் பெற்றிருக்கும்; அவர்களை நம் குடும்பத்தின் உறுப்பினர்களாக வைத்திருக்கவேண்டும் என்று நாங்கள் நினைத்தோம்.

2016 CoLல் எடுக்கப்பட்ட இரட்டை உறுப்பினர் தீர்மானம், ரோட்டரியன்களையும் ரோட்டராக்டர் களையும் ஒரு படி அருகில் கொண்டு வந்தது. பல ரோட்டராக்டர்கள் இரட்டை உறுப்பினர்களாக ஆனார்கள்.

பின்னர், 2019ல் நாம் ரோட்டராக்டை உயர்த்தி, அதை RIன் ஓர் உறுப்பினராக ஆக்கினோம்-ரோட்டராக்டர்களிடம் நீங்கள் வெறும் உறுப்பினர்கள் இல்லை, நீங்கள் ரோட்டரி குடும்பத்தின் ஒரு பங்கு என்று சொல்லும் ஒரு மிக முக்கியமான படிநிலை இது.''

2019 சந்திப்பில், ரோட்டராக்டை உயர்த்துவதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, முதலில் அந்தத் தீர்மானம் வெற்றிபெறவில்லை. அடுத்த சில விநாடிகளுக்குள், சமூக ஊடகங்களில் ஒரு மிகப்பெரிய பரப்புரை தொடங்கியது, இதனால், மறுநாள் காலையில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது; அந்தத் தீர்மானம் ஒரு மிகப்பெரிய பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப் பட்டது. அது ஒரு மிகச்சிறந்த கொண்டாட்டமாக இருந்தது என்றார்.

இந்தத் தீர்மானம், எங்களுக்குக் கூடுதல் பொறுப்பைத் தந்திருக்கிறது. இதன்மூலம், இப்போது எங்களால் இன்னும் பெரிய விஷயங்களைச் செயல்படுத்த இயலும், என்றார் DRR புவா.

PDRR ஸ்ரீஜிதா, என்னோடு ரோட்டராக்டில் இருக்கும் பலர், இப்போது ரோட்டரியில் சேரப் போவதாக வாக்களித்திருக்கிறார்கள்'' என்றார். 2017முதல் இவர் இரட்டை உறுப்பினராக உள்ளார்; இந்த மாத நிறைவில் இவர் ஒரு ரோட்டரி சங்கத்தைப் பதிவுசெய்யவுள்ளார்.

ரோட்டராக்டை உயர்த்துவோம் செயற்குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, அக்டோபரில் சந்தித்த RI போர்ட் ரோட்டராக்டுக்கான அதிகபட்ச வயது வரம்பை நீக்கியுள்ளது.

இந்தத் தீர்மானத்தைப்பற்றிப் பேசிய ஹ்யூகோ, ''ரோட்டராக்டின் அதிகபட்ச வயது வரம்பு 30ஆக இருந்தபோது, ரோட்டரியில் சேர்வதற்கான வயதுவரம்பு 40ஆக இருந்ததாகவும், அது ஒரு பெரிய இடைவெளியை உருவாக்கியதாகவும் குறிப்பிட்டார். ரோட்டராக்டிலிருந்து விலகியவர்கள் 10 ஆண்டுகளுக்குப்பிறகுதான் ரோட்டரியில் சேர இயலும். அதற்குள், அவர்கள் அந்த ஆர்வத்தை இழந்திருப்பார்கள். இதன்மூலம், 95 சதவிகித ரோட்டராக்டர்களை நாம் இழந்துகொண்டிருந்தோம் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். ஆகவே, ரோட்டராக்டர்கள் ரோட்டரியில் சேரத் தயாராகும்வரை ரோட்டராக்டில் தொடரலாம் என்பதை அனுமதிப்பதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.''

DGEக்கள் மற்றும் DGNகளை நோக்கி அவர் குறிப்பிட்டது, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை வலுப்படுத்துங்கள். ரோட்டராக்டர்களை உங்களுக்கு இணையாக நடத்துங்கள், என்றார்.

ஸ்ரீஜிதா, இதையெல்லாம் கேட்டபிறகு, நீங்கள் ஒரு ரோட்டரி சங்கத்தைத் தொடங்க விரும்பு கிறீர்களா, அல்லது, ரோட்டராக்டராகத் தொடர விரும்புகிறீர்களா? என்று கேட்டார் சங்வி.

நான் ரோட்டராக்டில் சேர்ந்த போது, அது ஒரு தோழமையான, தொழில்முறை முன்னேற்றம்,

தலைமையை வலியுறுத்துகிற அமைப்பாக இருந்தது. இப்போது, அவற்றுக்கு இணையாகச் சேவையை யும் வலியுறுத்தும் ஒரு ரோட்டராக்டை நோக்கி நாம் நகர்கிறோம். ஒவ்வொரு வரும் தனக்குள் கேட்கும் குரலைக் கவனிக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன். உங்களுக்கு 30 வயதாகியிருக்கலாம், அதைவிட அதிக வயதுகூட ஆகியிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில், நாம் அடுத்த நிலைக்குச் செல்லத் தயாராகிவிட்டோம் என்று உங்களுக்கே தோன்றும். இரட்டை உறுப்பினராக இருக்கிற நான் இந்த மாற்றத்தை உணர்ந்தேன்.

வியப்பான விஷயம், வயதுக் கான அதிகபட்ச வரம்பை நீக்கும் தீர்மானம் பெரும்பாலான ரோட்டராக்டர்கள் அல்லது ரோட்டரியன்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறவில்லை.

அது 30ஆக இருக்க வேண்டிய தில்லை, 35வரை செல்லலாம். ஆனால், வயது வரம்பு வரையறுக் கப்பட வேண்டும். ஏனெனில், ரோட்டராக்ட் என்பது மிகவும் மகிழ்ச்சியான ஓர் இயக்கம்; யாரும் அதிலிருந்து விலக விரும்ப மாட்டார்கள். நிறைவாக நான் வலுவாகப் பரிந்துரைக்கும் விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு ரோட்டராக்டரும் நிதியளவில் வசதி யான ஒரு நிலையை அடைந்ததும் ரோட்டரியில் இணையவேண்டும் என்பதுதான் என்றார் RID 3060ன் PDG ஆஷிஷ் தேசாய் மற்றும் DG பினா-வுடைய மகன் PDRR ஷாஷ்வத் தேசாய்.

இந்தத் தீர்மானங்களைப்பற்றிய தன்னுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட RIPN மேத்தா, DGக்கள், DGE மற்றும் DGNகள் தங்களுடைய உறுப்பினர் குழுக்களில் DRRகளை உறுப்பினர் களாகச் சேர்த்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ரோட்டரியன்களும் ரோட்டராக்டர்களும் ஒருவரிடமிருந்து மற்றவர் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம் என்றார் ஜெனிஃபர். சமீபத்திய IAயில், பொதுத் தோற்றம்பற்றிய



RID *பரத் பாண்ட்யாவுடன் ரோட்டராக்டர்கள்.*

ஓர் உரையாடல் நிகழ்ச்சியில் அவர் இதை நேரில் கண்டதாகக் குறிப் பிட்டார். நாம் சமூக ஊடகங்களில் இயங்குவதற்கு ரோட்டராக்டர்கள் உதவலாம் என்று ஒரு DGE குறிப்பிட்டபோது, இந்தியாவைச் சேர்ந்த ஒரு ரோடராக்டர் உடனடியாகப் பதிலளித்தார்: ஆம், தொழில்நுட்பம், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் எங்களால் உங்களுக்கு உதவ இயலும். ஆனால், அங்கு ஒரு கதையை எப்படிச் சொல்வது என்று நீங்கள் எங்களுக்குக் கற்றுத்தரவேண்டும். அந்தக் கணம் மிக அழகாக இருந்தது ரோட்டரியன்களும் ரோட்டராக்டர்களும் ஒருவருக் கொருவர் வழிகாட்டிகளாக இருந்து உதவலாம் என்ற சிந்தனை மிகச் சிறப்பாக அமைந்தது.

RIன் ரோட்டராக்ட்-இன்டராக்ட் குழுவின் முன்னாள் உறுப்பினர் களில் ஒருவரான Rtn கார்த்திக் கிட்டு இன்னொரு வாரியத் தீர்மானத்தைச் சுட்டிக்காட்டினார்: ஐந்து ரோட்டராக்டர்கள் ஒன்றாகச் சேர்ந்து TRFக்கு 50 பங்களித்தால், TRF தலைவர் நேரடியாகக் கையெழுத்திட்ட ஒரு சான்றிதழ் அவர்களுக்குக் கிடைக்கும். இது ஒரு மிகச்சிறந்த தீர்மானம். முன்பெல்லாம் 1,000 பங்களித்தால் தான் உங்களுக்குச் சான்றிதழ்கள் கிடைக்கும் என்றார் அவர்.

ரோட்டரி சங்கங்களுடைய ஆதரவு இல்லாமலே ரோட்டராக்ட் சங்கங்களைப் பதிவுசெய்யலாம் என்று அனுமதிக்கிற தீர்மானத்தைப் பற்றிய கருத்துகள் கலவையாக அமைந்தன.

ஆனால், ஆதரவாளரே தேவையில்லை என்று தீர்மானிப்பது ஒரு நல்ல சிந்தனையாகாது என்று கருத்து தெரிவித்தார் புவா. சில இளைஞர்கள், தாங்கள் தலைவராகவேண்டும் என்பதற் காகவே ஒரு புதிய சங்கத்தைப் பதிவுசெய்ய முனையலாம். அப்போது, சங்கத்தின் நீடித்துநிற்கும் தன்மை குறைந்துவிடும். அத்துடன், ஒரு ரோட்டராக்ட் சங்கத்தை ஒரு ரோட்டரி சங்கம் ஆதரிக்கிறது என்றால், தொடக்கக் கால கட்டத்திலாவது அந்த ரோட்டரி சங்கம் அந்த ரோட்டராக்ட் சங்கத்துக்கு உதவும் என்றார்.

இதற்கு முன் நடைபெற்ற சுருக்கமான நிகழ்வில், RIPN மேத்தா, RIDகள் பான்ட்யா, சங்வி மற்றும் ஹ்யூகோ ஆகியோர் ரோட்டராக்டர்களிடம் பேசினார்கள். நம் நாட்டில் ரோட்டராக்ட் வளர்ந்து வருகிறது. நீங்கள் உங்களுடைய நிலையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும்; உறுப்பினர் எண்ணிக்கையில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் பாண்ட்யா. பல சங்கங்களில் உறுப்பினர் எண்ணிக்கை என்பது வெறுமனே தாளில்தான் உள்ளது என்றும், மேம்பட்ட நன்மைகளைப் பெறவேண்டுமென்றால், இந்தச் செயல்முறையை ஒழுங்கு படுத்தவேண்டும் என்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ

# பூமியிலிருந்து எடுத்ததை பூமிக்கேத் திருப்பித் தரவும்: ரவிசங்கர்

V முத்துக்குமரன்

மண் புத்துணர்ச்சி செய்வதற்கான உலக முயற்சியின் பகுதியாக, RID 3190 'கோட்டி நாட்டி' (ஒரு கோடி கன்றுகள் நடுதல்) திட்டத்தை துவக்கியுள்ளது பற்றி இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் D ரவிசங்கர், IPP, RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ், பேசினார்.

ரோட்டேரியன்கள் என்னை ரூபாய் 100 கோடி தந்தவர் என்று சொல்லும் போதெல்லாம் நான் கூனிக் குறுகுகிறேன். அதற்கு பதிலாக சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உழைத்த ஒருவர் என்று என்னை நீங்கள் அழைத்தால் நான் மகிழ்ச்சியடைவேன். காரணம் வாழ்க்கை என்பது பணத்திற்கு அப்பாற்பட்டது மற்றும் நாம் சமுதாயத்திலிருந்து எடுத்துக் கொண்டதை மீண்டும் திருப்பும் கொள்கையை பின்பற்றுகிறோம், காரணம் இந்த சமுதாயம் தான் பணம் சம்பாதிக்க நமக்கு உதவியது என்று அவர் கூறினார். அவரது சங்கம் சமீபத்தில் 126 சந்தோஷமான பள்ளிகளை நிறைவு செய்திருக்கிறது, 145 பிளே ஸ்கூல்கள் மற்றும் 45 அங்கன்வாடிகளில், ஒவ்வொரு ஆண்டும் 10,000 மாணவர்கள் பயன் அடைகிறார்கள். கோட்டி நாட்டி 10 மில்லியன் கன்றுகளை நடும் நோக்குடன் படிப்படியாக கர்நாடகம் முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், "நாங்கள் 10 கோடி விதை பந்துகளை மலைப்பாங்கான பகுதிகளில் அளித்து வருவதோடு மாநிலம் முழுவதும் வறண்ட ஆறுகள் மற்றும் நீரோடைகளை மீட்டெடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம். முன்னாள் IAS அதிகாரி K அமரநாராயணா கோட்டி நாட்டி திட்ட ஒருங்கிணைப்பாளராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். "எனினும், கடந்த ஆண்டு (2018–19), RID 3190 கர்நாடகாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் கோலார் மற்றும் சிக்மகளூர் பகுதிகளில் திறமையான மனித வளம் கிடைக்காததால் 38 லட்ச கன்றுகளையே நட முடிந்தது.



V முத்துக்குமரன்

*RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் உறுப்பினர் D ரவிசங்கர் அவர்களை RI தலைவர் மார்க் மலோனி கௌரவிக்கிறார். PDG சுரேஷ் ஹரி, RID பரத் பாண்ட்யா மற்றும் DG சமீர் ஹரியாணி ஆகியோரும் உடன் உள்ளனர்.*

ரோட்டரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் இடையே ஒரு மத்தியஸ்தம் சார்ந்த பங்கைக் ஆற்றுகிறது. ரோட்டரி மற்றும் இதர NGOக்களால் பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஜில்லா பரிக்ஷத்கள் மற்றும் கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்குவதற்காக மத்திய அரசாங்கம் மாநில அரசுகளுக்கு MNREGA நிதியினை அளிக்கிறது. என்று கூறினார். அனைத்து 39 RID மாவட்டங்களும் உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அந்தந்த மாநில அரசாங்கங்களுடன் கூட்டு சேர்ந்து இத்திட்டத்தை மேற் கொள்ளலாம் என்று ரவிசங்கர் கூறினார்.

RID 3190 வாழும் கலை அறக்கட்டளை மற்றும் இதர NGOகளுடன் இணைந்து இந்த லட்சிய பச்சை புரட்சியை செயல்படுத்துவதால் ஆண்டு முழுவதும் விவசாயிகள் மற்றும் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் தங்கள் கிராமங்களில் மரக்கன்றுகளை நடவு செய்வதற்கு தினசரி ரூ.250–300 ஊதியம் கிடைக்கும்.

TRFக்கு அளித்த பங்களிப்பு களைப் பற்றி பேசிய அவர், ரோட்டேரியர்களிடையே நாம் ஏன் கொடுக்க வேண்டும், நம்முடைய பணம் எங்கு செல்கிறது, ரோட்டரி திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக DDF மற்றும் வருடாந்திர நிதி என எவ்வாறு திருப்பி விடப்படுகிறது என்பதில் தெளிவான புரிதல் இல்லை என்று சுட்டிக்காட்டினார். ரோட்டரி முதலில் இயற்கையோடு இணைந்தால் மட்டுமே உலகை இணைக்க முடியும். பூமியைப் பாதுகாப்பதற்கான ஒரு சிறந்த காரணத்திற்காக அது இணைக்கப்பட்டிருந்தால் நாம் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க முடியும், என்று கூறி அவர் தன் உரையை முடித்துக் கொண்டார்.■

# ஒரு சிறந்த உலகினை உருவாக்க உதவும் வருடாந்திர நிதி

V முத்துக்குமரன்



V முத்துக்குமரன்

TRF *அறங்காவலர் செய்ஜி கிட்டா மற்றும் நொபுகோ அறங்காவலர் குலாம் வஹன்வதி, மாதவி மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*

2019–20க்கு 400 மில்லியன் விரிவான நிதி திரட்டும் குறிக்கோளுடன், 140 மில்லியன் டாலர் வருடாந்திர நிதி இலக்கை அடைய அறக்கட்டளை ஒவ்வொரு ரோட்டரியனிடமும் குறைந்தபட்சம் 100 பங்களிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. "எங்கள் வாழ்க்கையை மாற்றும் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கு தொடர்ந்து நிதியளிக்கும் TRFன் திறனுக்கு வருடாந்திர நிதி முக்கியமானது'' என்று இந்தூர் சந்திப்பில் ஜப்பானைச் சேர்ந்த TRF அறங்காவலர் செய்ஜி கிட்டா கூறினார்.

உலகெங்கிலும் உள்ள ரோட்டரி கிளப்களில் சுமார் 80 சதவீதம் வருடாந்திர நிதி வழங்குகின்றன, இந்த சதவீதத்தை அதிகரிப்பதே குறிக்கோள் என்று கிட்டா தனது உரையின் போது கூறினார். போலியோ ஒழிப்பு என்பது ரோட்டரியின் முன்னுரிமையாக தொடரும். "ஒவ்வொரு குழந்தையிடம் நாங்கள் வாக்குறுதியளித்திருந்த ஒரு போலியோ இல்லாத உலகத்தை உருவாக்கும் வேலையை முடிக்க வேண்டும்.''

## போலியோ கதையைப் பகிரவும்

நம்முடைய சமுதாயங்களில் போலியோவை ஒழித்த அந்தச் சிறந்த வரலாற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதன் மூலம் குழந்தைகளை முடக்கும் இந்த நோயினை பற்றிய ஒரு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் ரோட்டரியின் பங்கு குறித்தும் சொல்ல வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். இது எங்கள் தற்போதைய பணியின் வெற்றியை உறுதிசெய்கிறது மற்றும் எதிர்கால முயற்சிகளுக்கு ஒரு பாரம்பரியத்தை உருவாக்க அந்த வெற்றியை மேம்படுத்துகிறது. உலக போலியோ தினத்தில் (அக்.24), ரோட்டரியின் ஆன்லைன் உலகளாவிய அப்டேட் பேஸ்புக்கில் பல்வேறு நேர மண்டலங்கள் மற்றும் வெவ்வேறு மொழிகளில் ஸ்ட்ரீம் செய்யப்பட்டது. "ஆன்லைன் அப்டேட் 176,400 முறைகள் பார்க்கப்பட்டதோடு 5,790 நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் 187 நிகழ்வுகள் இந்தியாவிலிருந்து வந்தவை.''

போலியோவை பொறுத்தவரை, அறக்கட்டளை இலக்கு இந்த ஆண்டு 50 மில்லியன், அந்த இலக்கை அடைந்துவிட்டால், கேட்ஸ் அறக்கட்டளை அதோடு இணைந்து 100 மில்லியன் தருவதால் இரண்டுமாக இணைந்து மொத்த போலியோ நதி 150 மில்லியனாகும்.

மாவட்ட மானியங்கள், உலகளாவிய மானியங்கள் அல்லது போலியோபிளஸ் மற்றும் ரோட்டரி அமைதி மையங்களுக்கு பங்களிப்பு செய்வதன் மூலம் DDFகளை முழுமையாகப் பயன்படுத்துமாறு ரோட்டரி மாவட்டங்களை கிட்டா கேட்டுக் கொண்டார். டிரான்ஸ்ஃபர்மேட்டிவ் பார்டனர்ஷிப்களாக உருவாக்க இந்த நிதியை பல வழிகள் பயன்படுத்த வழிகள் உள்ளன,'' என்று அவர் கூறினார். $150 மில்லியன் போலியோ நிதி மற்றும் $140 மில்லியன் ஆண்டு

நிதியைத் தவிர, பரிபூரண பரிசுகள் மற்றும் அர்ப்பணிப்புகள் மூலம் எண்டோமெண்ட் நிதிக்கு $75 மில்லியனை இலக்காக வைத்துள்ள அதே நேரம், உலக நிதி தொகை மற்றும் மற்ற பரிபூரண பரிசுகள் $35 மில்லியன் ஆக, இந்த ஆண்டு மொத்த நிதி சேர்க்கை இலக்கு $400 மில்லியனைத் தொட்டது.

### TRF எண்டோமெண்ட்

ரோட்டரி 2025ம் ஆண்டில் TRF எண்டோமெண்ட்டை குறைந்த பட்சம் $1 பில்லியன் நிகர சொத்துக்களுடன் $2.025 பில்லியனாக கட்டமைக்க இலக்கு வைத்துள்ளது. "$2 பில்லியன் எண்டோமெண்ட் மூலம் நாம் செய்யக்கூடிய நன்மைகளை கற்பனை செய்து பாருங்கள். முதலீட்டு வருவாய் ரோட்டேரியர்களுக்கு ஆண்டுக்கு கிட்டத்தட்ட $100 மில்லியனை வழங்கி அதன் மூலம் அனைத்து வகையான வாழ்க்கை மாற்றும் திட்டங்களையும் செய்ய உதவும், என்றார்.

அமெரிக்காவின் தொண்டு நிறுவனங்களின் உயர் மதிப்பீட்டாளரான சேரிட்டி நேவிகேட்டர், TRFக்கு தொடர்ச்சியாக 11வது ஆண்டாக அதன் 4 நட்சத்திர மதிப்பீட்டை வழங்கியுள்ளது. "இந்த மதிப்பீடு எங்கள் வலுவான நிதி ஆரோக்கியத்தையும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மைக்கான எங்கள் கடமைகளையும் அங்கீகரிக்கிறது. ஆயிரக்கணக்கான தொண்டு நிறுவனங்களில் ஒரு சதவீதம் மட்டுமே இந்த சிறப்பைப் பெற்றுள்ளது, என்று அவர் கூறினார்.

### ரோட்டரி இந்தியா நூற்றாண்டு

ஜனவரி 2020 இல் RC கொல்கத்தா தனது 100வது ஆண்டு விழாவை கொண்டாடும் நேரத்தில் செய்ஜி கிட்டா ரோட்டரி தலைவர்களுக்கு ஆண்டு விழா வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த நிகழ்வு உங்களுடைய சிறப்பான வரலாற்றை கொண்டாடுவதற்கான ஒரு அற்புதமான வாய்ப்பாகும். வட அமெரிக்காவிலும் மற்றும் உலகின் பிற பகுதியில் உறுப்பினர்கள் குறைந்து வருகிற நிலையில் இந்தியாவில் 150,000 உறுப்பினர்கள் இருப்பதோடு அது இன்னும் வளர்கிறது என்பது இந்த நாடு ஆசிய பகுதிகளில் ஒரு தலைமை பங்கு வகிக்கிறது என்பதையே காட்டுகிறது, என்று அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஆண்டு, அறக்கட்டளை $395 மில்லியனைப் பெற்றது, இதனால் நிதி திரட்டும் இலக்கு $380 மில்லியனைத் தாண்டியது. இந்த ஆண்டில், TRF $86.6 மில்லியன் மதிப்புள்ள 1,403 உலகளாவிய மானியங்களையும், $26.4 மில்லியன் மதிப்புள்ள 494 மாவட்ட மானியங்களையும் வழங்கியது.■

# பினா வியாஸ் IIW பிரிசிடெண்டாக ஆக உள்ளார்

மார்ச் 21, 2020 வரும்போது, ஜெய்ப்பூரில் நடைபெறும் சர்வதேச இன்னர் வீல் (IIW) மாநாட்டிற்கு அதன் பிரிசிடெண்டாக தலைமை தாங்கும் டாக்டர் பினா வியாஸ், இந்த மதிப்பிற்குரிய பதவியை எட்டும் ஏழாவது இந்திய பெண்ணாவார். தற்போது அதன் துணைத் தலைவரான பினா, இந்த உலகளாவிய மாநாட்டை இந்தியா முதன்முறையாக நடத்தவுள்ளது என்றார்.இங்கிலாந்தின் மான்செஸ்டரில் 1924ல் தொடங்கப் பட்ட இன்னர் வீல் 104 நாடுகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான உலகளாவிய உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

IIW ஐ.நாவுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது, இந்தியாவில் 1,570 கிராமங்களில் ஒரு முதன்மை திட்டத்தில் தத்து எடுத்துக் கொண்டுள்ளனர். "இந்தியாவில் 1,350 கிளப்புகளில் 46 000 உறுப்பினர்களை 27 IW மாவட்டங்களாக பிரித்துள்ளோம். எங்கள் நோக்கம் அனாதைகளே இல்லாத இந்தியா, இந்த இலக்கை இன்னும் பத்தாண்டுகளில் நாங்கள் அடைந்துவிடுவோம் என்று அவர் கூறினார்.



V முத்துகுமரன்

*IIW துணைத்தலைவர் பீனா வியாஸ், சோனல், மாதவி, ராஷி, வானதி,* PDG *மயூர் வியாஸ் மற்றும்* RID *பரத் பாண்ட்யா ஆகியோருடன்.*

போலியோ மற்றும் கல்வியறிவு திட்டங்களில், எங்கள் பெண்கள் ரோட்டேரியர்களை விட தீவிரமாக செயல்படுகிறார்கள். போலியோவை ஒழிப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் 25 ஆண்டுகளுக்கும் மேலாக ரோட்டரியுடன் இணைந்திருக்கிறோம், மேலும் கல்வியறிவு திட்டங்களில் தீவிர பங்காளிகளாக இருக்கிறோம்.

ரோட்டரியுடன் கைகோர்த்து IW கிளப்புகள் திட்டங்களைச் செய்து வருவதால், ரோட்டரியிடம் எனது வேண்டுகோள் என்னவென்றால், இன்னர் வீலை உங்கள் சேவையில் பங்குதாரராக அங்கீகரிக்க வேண்டும், இது எங்கள் இமேஜை மேலும் மேம்படுத்தும், என்று பினா கூறினார். RID 3060ன் RC ஆனந்த் மில்க் சிட்டியின் சார்டர் பிரிசிடெண்டாகவும் ஆக இருப்பதால் ரோட்டேரியனாகவும் அவர் உள்ளார். அவரது கணவர் PDG மயூர் வியாஸின் தார்மீக ஆதரவுடன், அவர் சர்வதேச பெண்கள் இயக்கத்தை வழிநடத்துவதை எதிர்பார்த்துள்ளார்.■

# சிறு செய்திகள்

ரஷீதா பகத்

### கண்ணீர் நிறைந்த விடைபெறல்

ஐந்து நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்ற இந்தூர் சந்திப்பின் நிறைவுக் கணங்களில், இதைச் சிறப்பாக ஏற்பாடு செய்ய உதவிய தன்னுடைய நெருங்கிய நண்பருமான PDG T N சுப்ரமணியனுக்கு நன்றி தெரிவித்தார் RID பரத் பாண்ட்யா. அப்போது அவருடைய குரல் தழுதழுத்ததைப் பார்த்த பங்கேற்பாளர்கள் அனைவரும், ஓர் RI இயக்குநர் ஒரு பிராந்தியச் சந்திப்புக்குக் கவனமாகத் திட்ட மிடுகிறார், அதை வெற்றிகரமாக நிகழ்த்துகிறார் என்றால் அது அவருக்கு எந்த அளவு உணர்வுபூர்வமான ஒன்று என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

பாண்ட்யா மிகுந்த கண்டிப்புடன் இந்த நிகழ்ச்சியை நடத்தியிருந்தார், குறிப்பாக, நேர விஷயத்தில் அவர் ஏகப்பட்ட கண்டிப்பைக் காட்டினார்.

இந்த நிகழ்ச்சிக்குத் திட்டமிடவும் இதைச் சிறப்பாக நிறைவேற்றவும் உதவிய யாரையும் அவருடைய கழுகுக்கண்கள் விட்டுவைக்கவில்லை; அனைவரையும் அழைத்துப் போது மான அளவில் நன்றி சொன்னார்.

பாண்ட்யாவும் சரி, சுப்ரமணியனும் சரி, தங்களுடைய கண்ணீரை மறைக்கக்கூட முயலவில்லை; உணர்வு மிகுந்த இந்தக் கணத்தில் மாதவியும் நெகிழ்ந்துபோனார்.

கலந்து கொண்டவர்களிடம் பேசியபோது, இந்தச் சந்திப்பிற்கான ஏற்பாடுகள், சந்திப்பு நடைபெறும் நகரத்தின் தேர்வு, இதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல நிகழ்ச்சிகள், குறிப்பாக, இங்கு வழங்கப்பட்ட உணவு என அனைத்தும் பங்கேற்பாளர் களை நன்கு கவர்ந்திருப்பது தெரிந்தது.

பரத், மாதவி இருவரும் சிறப்பாக இந்த நிகழ்ச்சியை நடத்தினார்கள்; மாதவி எங்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்டமுறையில் சந்தித்து ஒரு சிறிய பரிசை வழங்கினார்; அது என் மனத்தைத் தொட்டது என்றார் சந்திப்பில் பங்கேற்ற ஒருவர்.

### எனர்ஜி பேனர்ஜி

RIPN சேகர் மேத்தாவைப் பாராட்டிப் பேசிய PRIP கல்யாண் பேனர்ஜி, ''நம்முடைய சேகர் என்றைக்காவது RI தலைவராவார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான்; ஆனால், முதல் முயற்சியிலேயே அவர் இதைச் சாதிப்பார் என்று நம்மில் யாரும் கனவுகூடக் கண்டிருக்கமாட்டோம் என்றார்.

''அவர் எப்போதும் விரைவாகச் செயல்படுகிறவர்; அவர் எங்கு சென்றாலும், எப்போதும் ராஷியும் அவருடன் இருக்கிறார்; அவருக்குச் சமநிலையை, வலிமையைத் தருகிறார்; அதனால்தான் சேகரால் அதிகாலை 2மணிவரை உழைத்துவிட்டு, மூன்றே மூன்றுமணிநேரம் தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6மணி விமானத்தைப் பிடித்து வேறு எங்கேனும் ஓடமுடிகிறது.''

10 வருடத்துக்கு முன்னால் நான் என்னுடைய பணியைத் தொடங்கியபோது, மக்கள்



*வித்யா சுப்ரமணியன், மத்திய அமைச்சர் ஸ்மரிதி இராணி மற்றும் RIPN சேகர் மேத்தா.*

என்னை 'எனர்ஜி பேனர்ஜி' என்று அழைப்பார்கள். ஆனால், சேகர் அந்த விஷயத்தில் தனியிடத்தைப் பிடித்து விட்டார். இத்துடன், மற்றவர்களையும் அவர் சொந்தமாக முன்னேறச்செய்கிறார்; உண்மை யிலேயே அவர் ஒரு மிகச் சிறந்த ஊக்குவிப்பாளர்.

### ஒரு மிக நீண்ட பயணம்

தலைவர் மலோனி, எங்களுடைய 30 நாள் பயணத்தில் இது 21வது நாள் என்றார். தலைவரானபின் நாங்கள் நிகழ்த்திய பயணங்களிலேயே இதுதான் மிக நீண்டது; அநேகமாக, நாங்கள் நிகழ்த்தப்போகும் பயணங்களிலேயே மிக நீண்டதாகவும் இதுதான் இருக்கும்.

என்னுடைய சிகையலங்காரக் கலைஞரை நான் சந்தித்துப் பல நாட்களாகின்றன; அது உங்களுக்கே தெரியும்.

இந்தப் பயணத்தின்போது, அவர்கள் உலகைச் சுற்றிவந்ததாக அவர் குறிப்பிட்டார். நானும் கே-யும் தனித்தனியே புறப்பட்டோம்; கே அலபாமாவிலிருந்து புறப்பட்டார்; நான் எவான்ஸ்டனிலிருந்து புறப்பட்டேன்.

அடுத்து, அவர்கள் மீண்டும் பசி ஃபிக் பெருங்கடலைக் கடந்து பனாமா சந்திப்புக்குச் சென்றார்கள். அதன்பிறகு, மூன்றாவதுமுறையாகப் பசிஃபிக்கைக் கடந்து கொரியா சந்திப்புக்குச் சென்றோம்; வியட்நாமைக் கண்டோம்; இந்தூர் வந்தோம்; வீடு திரும்புமுன், நாங்கள் துருக்கியில் மூன்று மாவட்டங்களைக் காணவுள்ளோம். உலகில் வணிகரீதியில் இயங்கும் அத்தனை விமானங்களிலும் பறந்து விடவேண்டும் என்று நானும் கே-யும் முயல்வதாகத் தோன்றுகிறது.''

### அரசியல் அறிவுரைகள் மிக அதிகம்

இந்தூர் சந்திப்பின் மிகப் புகழ்பெற்ற பேச்சாளர்களில் ஒருவர், மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி. அவருடைய கூர்மையான பதில்களும் நகைச்சுவையான பதிலடிகளும் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தன. தானும் ரோடராக்டராக இருந்தவர்தான் என்று இரானி குறிப்பிட்டபோது, பார்வையாளர்களாக அமர்ந்திருந்த DRRகள் பலத்த



*இன்ஸ்டிட்யூட் தலைவர் T N சுப்ரமணியன், RID பரத் பாண்ட்யா மற்றும் வித்யா, மாதவி இன்ஸ்டிட்யூட் நிறைவு விழாவில்.*

கைதட்டலை எழுப்பினார்கள்.

இளைஞர்களுக்கு ஓர் அறிவுரை சொல்லுங்கள் என்று ஒருவர் கேட்ட போது, அரசியல்வாதிகள் ஏற்கெனவே நிறைய அறிவுரை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் ஒரு கோரிக்கை வைக்கிறேன் என்றார் அவர். அடுத்த தொழிற்புரட்சியை நாம் தலைமைதாங்கி நடத்தப்போகிறோம். ஆனால், நாம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறவர்களாகமட்டும் இருக்கப்போகிறோமா? அல்லது, அதன் உரிமையாளர்களாகப் போகிறோமா? இந்தியாவில் பெண்கள் உரிமையாளர்களாக இருந்து நடத்துகிற தொழில்நுட்ப நிறுவனங்கள் எத்தனை?

இத்துடன், இன்னும் அதிகப் பெண்கள் அறிவியல், கணிதப் படிப்புகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இந்தியக் கிராமப்புறங்களில் இருக்கிற இளைஞர்களைப் பொறுத்த வரை, அவர்களுக்குள் புதுமைச்சிந்தனை உணர்வை நாம் நிரப்பவேண்டும்; அவர்கள் தங்களுடைய யோச னைகளை வணிகரீதியில் அறிமுகப்படுத்த உங்களால் உதவ இயலுமானால், அது ஒரு நல்ல முன்னேற்றப் படியாக இருக்கும். இது வெறும் கோரிக்கைதான், அறிவுரை இல்லை!''

### ஹோனலூலுவில் உரையாடல் நிகழ்வுகள் குறைவாகவே இருக்கும்

ஹோனலூலு சந்திப்பில் கலந்து கொள்ளும் படி இந்திய ரோட்டரியன்களை அழைத்த தலைவர் மலோனி, ஹோனலூலுவில் நடைபெறும் இரண்டாவது RI சந்திப்பு என்றார். இதற்கு முன் 1969ல் அங்கு RI சந்திப்பு நடைபெற்றதாகவும் குறிப்பிட்டார். இம்முறை இச்சந்திப்பில் கலந்துகொள்ள வருகிறவர்கள் ஹவாயீ-யை நன்கு அனுபவிப்பதற்காகச் சந்திப்பின் கால அட்டவணை அதிக நெகிழ்வுத் தன்மையோடு மாற்றப்படும் என்றார்.



*RI தலைவர் மார்க் மலோனி, கேய், PRID P T பிரபாகர் மற்றும் RID பரத் பாண்ட்யா ஹொனலுலு கன்வென்ஷன் பிரபலப்படுத்தும் நிகழ்வு ஒன்றில்.*

இதில் உரையாடல் நிகழ்ச்சிகள் குறைவாகதான் இருக்கும். ஆகவே, நீங்கள் ஹோனலூலு, ஹவாயீ-யை நன்கு அனுபவிக்கலாம்,'' என்றார்.

### சேமித்தல் அதை அள்ளி வழங்குதல்

இந்தச் சந்திப்பின்போது நடைபெற்ற TRF இரவுணவு நிகழ்ச்சியில் PDG J B காம்தர் மற்றும் மர்லீன் ஆகியோர் உயர்நிலை (500,000 நன்கொடையுடன் தலைவரின் நிலை) AKS உறுப்பினர்களாகச் சேர்க்கப் பட்டார்கள்.

''மர்லீனும் தானும் பலவிதங்களில் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என்றார் காம்தர். நாங்கள் நடுத்தர வருவாயைக் கொண்ட குடும்பங்களில் பிறந்திருந்தாலும், இதயத்தைப் பொறுத்தவரை செல்வம் நிறைந்த சூழலில்தான் நாங்கள் வளர்ந்தோம்.''

இந்த இணைப்பு நிகழ்ச்சியின் போதுகூட, தாங்கள் சிறிதளவு பணத்தைச் சேமித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, உங்களுடைய இணைப்பு நிகழ்ச் சியை இங்கு நடத்தலாம், அல்லது எவான்ஸ்டனில் நடத்தலாம் என்று எங்களிடம் குறிப்பிட்டார். நாங்கள் இருவரும் எவான்ஸ்டனுக்குத் தொழில்வகுப்பில் பறப்பதென்றால், சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கும். நாங்கள் அந்தப் பணத்தைச் சேமித்தோம் அநேகமாக, ஆண்டுத் திட்டங்கள் நிதிக்காகக் குலாம் அதைத் திரட்டிக்கொள்வார்.

தாங்கள் இன்னொரு தனித்துவ மான வழியிலும் பணம் சேமித்த தாகத் தொடர்ந்து குறிப்பிட்டார் காம்தர். அவருக்கு விலையுயர்ந்த கப்பல் பயணங்கள், கடிகாரங்கள் பிடிக்குமாம், மர்லீனுக்கு நகைகள் பிடிக்குமாம். நான் என்னுடைய பணத்தை TRFக்குத் தருவேன், அவர் தன்னுடைய பணத்தைப் பயன்படுத்தி எனக்கு விலையுயர்ந்த கடிகாரங்களை வாங்கித்தருவார் என்று நாங்கள் தீர்மானித்துக்கொண்டோம்,'' என்றார்.




*PRID மனோஜ் தேசாய், PDGs ஹித்தேஷ் ஜரிவாலா, ஷரத் ஜெயின், PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் பினோதா.*

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# பால் ஹாரிஸின் வீட்டைக் காப்பாற்ற ஒரு வேண்டுகோள்

ரஷ்மீதா பகத்



ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் மற்றும் அவர் மனைவி ஜீன் சிகாகோவில் உள்ள 20ம் நூற்றாண்டில் கட்டப் பட்ட கோம்லி பாங்க் என்று அழைக்கப்படும் வீட்டில், 1945ல் பால் இறக்கும் வரை வாழ்ந்தார்கள், ரோட்டரி பிறந்த இடமும் அதன் பெருவாரியான ஆரம்ப வாரியக் கூட்டங்களும் நடந்த அந்த வீடு இப்போது பாழடைந்துவிட்டதால் உள்ளூர் கார்பரேஷனால் இடிக்கப் பட உள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு சில ரோட்டேரியன்கள் அதை பழுது பார்த்து புதுப்பிக்க முடிவு செய்து, அதை நம் நிறுவனர் நினைவிட மாகவும் ரோட்டரி பாரம்பரிய தளமாகவும் நீடிக்க வேண்டும் என்று விரும்பினார்கள் என்ற விஷயத்தை இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் PRIP கல்யாண் பானர்ஜி தெரிவித்தார்.

அந்த வீட்டை புதுப்பிக்க, பால் ஹாரிஸ் ஹோம் ஃபௌண்டேஷன் என்ற பெயரில் ஒரு சிறப்பு டிரஸ்ட் உருவாக்கப்பட்டு, அந்த அறக்கட்டளைக்கு தலைவராக அந்த மாவட்டத்திற்கு சேவை செய்த RC சிகாகோ ஒன்னின் உறுப்பினராக இருந்த PDG ராபர்ட் நீயூப்ஃபர் இப்போது உள்ளார்.

அந்த அறக்கட்டளை இப்போது உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டரி கிளப்பகள் மூலம் கோம்லி பாங்க் வீட்டைப் புதுப் பிப்பதற்கும் எதிர்காலத்தில் தேவையான வரிகள் கட்ட மற்றும் செலவுகளுக்கு பயன்படும் வகையில் $10 மில்லியன்கள் திரட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. பங்களிப்புகள் வர தொடங்கி யுள்ளன, ஜப்பான் $1 மில்லியன் தருவதற்கு உறுதி மொழி அளித் திருக்கிறது. RI போர்டு இந்த முடிவை ஆதரிக்கிறது மற்றும் RI தலைவர் மார்க் மலோனி போர்டு உறுப்பினர்களை சிகாகோவில் உள்ள ஹாரிஸ் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். உறுப்பினர்கள் கட்ட வேண்டிய பணம் நிர்வாகச் செலவிற்கு தேவைப்படுவதால் RIயினால் எந்த பணத்தையும் வீடு புதுப்பித்தலுக்கு செலவிட முடியாது. எனவே,நீங்கள் அதற்கென்று தனியாக கொடுக்க வேண்டும்; எவ்வளவு கொடுக்கிறீர்கள் என்பது விஷயமே அல்ல, ஆனால் நீங்கள் எவ்வளவு தந்தாலும், உதவியாக இருக்கும். கட்டிடத்தின் வெவ்வேறு அறைகள் மற்றும் பகுதிகளுக்கு பெயரிடப்படும் வாய்ப்புகள் உள்ளன, மற்றும் தனிநபர்கள், கிளப்புகள் மற்றும் மாவட்டங்களிலிருந்து நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன, என்று பானர்ஜி மேலும் கூறினார்.

நன்கொடைகளை நேரடியாக P H ஹோம் ஃபௌண்டேஷன் (www.paulharrishome.org என்ற தளத்தில்) அல்லது TRFல் பால் ஹாரிஸ் ஹோம் டோனர் அட்வைஸ்டு ஃபண்டிலும் வழங்கலாம். அனைவரின் தாராளமான பங்களிப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்த பானர்ஜி, நம் நிறுவனர் பாலின் நினைவுகளை என்றென்றும் போற்றும் ஒரு நினைவுச்சின்னத்தை பாதுகாத்து அது எதிர்கால தலைமுறை ரோட்டேரியர்களுக்கு ரோட்டரி நினைவுச்சின்னமாக என்றென்றும் நிற்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், தயவுசெய்து உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் என்று கூறியுள்ளார்.

மேலும் விவரங்களுக்கு ரோட்டரேயின்கள் PRID C பாஸ்கர், RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் முன்னால் தலைவர் D ரவிஷங்கர் அல்லது பானர்ஜியையே நேரில் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.■



ரஷ்மீதா பகத்

PRIP *கல்யாண் பானர்ஜி*, PRID C *பாஸ்கர்* *மற்றும்* RID *பரத் பாண்ட்யா.*

# தென்னிந்திய ரோட்டரியை நான் மிகவும் வியக்கிறேன்: RIPN சேகர் மேத்தா

ரஷ்மீதா பகத்

RID 3211 செய்துவரும் சில திட்டங்களைத் தொடங்கிவைத்து/ அறிவித்துப் பாராட்டிய RIPN சேகர் மேத்தா, இந்த மாவட்டம் செய்துள்ள திட்டங்களின் தரம், அளவை எண்ணித் தன்னுடைய வியப்பையும் பாராட்டையும் வெளிப்படுத்தினார், நான் இப்படிச் சொல்வதால், மற்ற பகுதிகளில் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் செய்துள்ள பணிகளை நான் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று எண்ணிவிடாதீர்கள், ஆனால், தென்னிந்திய ரோட்டரியை நான் எப்போதும் மிகுந்த வியப்புடன் பாராட்டிவந்துள்ளேன். தென்னிந்தியாவில் ரோட்டரி உண்மையிலேயே நன்கு வளர்ந்து வருவதைக் காண்கிறேன்; இதற்குச் சான்றாக, தென்னிந்தியாவில் அதிகரித்துவரும் உறுப்பினர் எண்ணிக்கையைப் பார்த்தாலே போதும்.''

பாலா ரோட்டரி சங்கம் மட்டும், அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகளை வழங்கும் ரூ.11.5 கோடி மதிப்புள்ள திட்டமொன்றைச் செய்துவருகிறது என்பதைக் குறிப்பிட்ட அவர், இவ்வாறு கூறினார்: இது மிகவும் வியப்பளிக்கிறது. இத்துடன், கேரள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் 1,000 வீடுகளைக் கட்டவுள்ளீர்கள், அதில் 300 வீடுகள் இந்த ஆண்டில் நிறைவுசெய்யப்படவுள்ளன; (PDG ஜான் டானியெல் நடத்தும்) வொய் டானியெல் அறக்கட்டளை நன்கொடையாக வழங்கிய ரூ.1.75 கோடி மதிப்புள்ள நடமாடும் மாமோகிராஃபி (மார்பகப் புற்றுநோய் கண்டுபிடிப்பு)ப் பேருந்தை இயக்குகிறீர்கள்; இந்த அறக்கட்டளை பல கூடுதல் வீடுகளையும் கட்டி வருகிறது; நலப்பராமரிப்பு, எழுத்தறிவு போன்றவற்றில் இன்னும் பலப்பல திட்டங்களை நீங்கள் செய்து வருகிறீர்கள். இவற்றையெல்லாம் தொகுத்துப்பார்த்தால், நீங்கள் மிகச் சிறந்த சேவையைச் செய்துவருகிறீர்கள் என்று புரிகிறது.''

RC பாலாவின் தலைவராகவுள்ள ஸ்ரீனிவாச வச்சபரம்பிலை அவர் மேடைக்கு அழைத்துப் பெருமைப் படுத்தினார். மருந்துகளுக்கான ரூ.11.5 கோடித் திட்டத்தின் பின்னணியில் இருந்து இயக்கியவர் இவர்தான்.

உலகில் வேறு எங்கும் இந்தியா அளவுக்கு மிகப்பெரிய சேவைத் திட்டங்கள் செய்யப்படுவதில்லை

RIPN *சேகர் மேத்தா, ராஷி,* DGs S *ஷெய்க் சலீம்* (D 3212), *ஷிரிஷ் கேசவன்* (D 3211) *மற்றும் ஜான் டேனியல் ஆகியோருடன்.*



இந்த அளவு உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பதில்லை என்பதால், RI கிரீடத்தில் ரோட்டரி இந்தியா தான் மிகச்சிறந்த வைரம் என்பதை மீண்டும் வலியுறுத்தினார் மேத்தா. ரோட்டரியன்கள் தங்களுடைய சேவைத் திட்டங்கள், உறுப்பினர் எண்ணிக்கை இலக்குகள் ஆகிய இரண்டையும் பெரிய அளவில் அதிகரிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

4,000 உறுப்பினர்களைக் கொண்ட எந்தவொரு மாவட்டமும் 5,000 என்ற எண்ணுக்குச் செல்லவேண்டும்; அதன்பிறகு, முன்னேற்றத்தை விரைவாக்குவதற்காக, அதைப் பிரிக்கவேண்டும். இதற்கு அவர் பங்களாதேஷை எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டார். அங்கு வெறும் 3,000 உறுப்பினர்கள்தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் வெவ்வேறு மாவட்டங்களாகப் பிரிந்து, ஐந்தாண்டுகளில் 10,000க்கு வளர்ந்துள்ளார்கள். RID 3230 பிரிந்தபிறகும் இதேதான் நடந்தது. பிரிவினை என்பது இதயத்தை முறிப்பதுதான்; ஆனால், அது வளர்ச்சிக்கு ஏற்றது.''

தன்னைக் கடந்த சேவை விருதை DGE தாமஸ் வவுனிக்கெலுக்கும், PDG எம் ராமஸ்வாமி ஐயருக்கு (D 3211) ரோட்டரியில் 50 ஆண்டுகள் நிறை வேற்றியதுக்கும், மேத்தா வழங்கினார். சென்ற ஆண்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக PDG E K லூக் தலைமையில் இந்த மாவட்டத்தால் கட்டப்பட்ட வீடுகளையும், தன்னுடைய Y டானியெல் அறக்கட்டளை வழியாக ரோட்டரிக்காக PDG ஜான் டானியெல் செய்துவரும் சேவைத் திட்டங்களையும் பாராட்டினார்.

PDG டானியெல், தன்னுடைய அறக்கட்டளையால் நிதியளிக்கப்படுகிற, ரூ.1.75 கோடி மதிப்புள்ள ரோட்டரி மாமோபேருந்தை மேத்தாவிடம் ஒப்படைத்தார். அத்துடன், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இன்னும் சில வீடுகளைக் கட்டுவதற்காக ரூ.25 லட்சத் துக்கான காசோலையையும் அவர் வழங்கினார்.

100 தங்குமிடப் பொதிகளுக்காக, (Shelter kits) ரூ.6 லட்சத்துக்கான காசோலை யொன்றை RID 3211ன்




*PDG ஜான் டேனியல் மற்றும் அவர் மனைவி மீரா, DG ஷிரிஷ் கேசவன் முன்னிலையில் RIPN சேகர் மேத்தா மற்றும் ராஷி அவர்களிடம் ரோட்டரியிற்கு ஒரு மேமோ பஸ் அர்பணிக்கின்றனர்.*

## RI தலைவர்கள் நோபல் வெற்றியாளர்களும் கொல்கத்தாவும்

*இளம்பிள்ளைவாதத்தை முற்றிலு மாக அகற்றக்கூடிய நிலையில் இருக்கும் ரோட்டரி நோபல் பரிசை வெல்லவேண்டும் என்கிற தன்னுடைய நம்பிக்கையை RIPN சேகர் மேத்தா மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார். நாம் செய்துள்ள பணிக்காக, அந்தப் பரிசைப் பெறும் தகுதி நமக்கு உண்டு. ஏனெனில், கடந்த 2,000 ஆண்டுகளில், தடுப்பு மருந்தால் தடுக்கக்கூடிய ஒரே ஒரு நோய்தான் உலகிலிருந்து அகற்றப்பட்டிருக்கிறது, அந்த வரிசையில் இளம்பிள்ளைவாதம் இரண்டாவது நோய். இளம்பிள்ளை வாதம் முழுவதுமாக அகற்றப் படும்போது நமக்கு மிகப்பெரிய விளம்பரம் கிடைக்கும்; நம்மைப்பற்றிப் பேசுவதற்காக நாம் யாரிடமும் செல்லவேண்டியிருக்காது!''*

*RI தலைவர் பொறுப்புக்கு முன்னேறியிருக்கும் நான்கு இந்தியர்களுக்கும் கொல்கத்தாவுக்கும் உள்ள இணைப்பைப்பற்றி மக்கள் அடிக்கடி பேசுகிறார்கள். இதைக் குறிப்பிட்ட மேத்தா, மகிழ்ச்சி நகரமாகிய கொல்கத்தாவுக்கும் நோபல் பரிசுக்கும்கூட இணைப்பு உண்டு என்று சுட்டிக்காட்டினார்.*

*நோபல் பரிசு வென்றுள்ள இந்தியர்களில் அதிக எண்ணிக்கை யிலானவர்கள் கொல்கத்தாவைச் சேர்ந்தவர்கள். மீண்டும் ஒருமுறை, கொல்கத்தாவைச் சேர்ந்த அபிஜித் பானர்ஜி நோபல் பரிசு பெற்றுள்ளார். அவர் என்னுடைய பள்ளியைச் சேர்ந்தவர். நான் அந்தப் பள்ளியில் சேர்ந்து இரண்டாண்டுகளுக்குப்பின் அவர் அங்கு வந்து சேர்ந்தார். நோபல் பரிசு வென்றுள்ள மற்ற இந்தியர்களில் ரபீந்திரநாத் தாகூர், அன்னை தெரசா, அமர்த்யா சென் கொல்கத்தாவைச் சேர்ந்தவர்கள். யார் கண்டது? கொல்கத்தாவைச் சேர்ந்த இன்னோர் இந்தியர் மீண்டும் நோபல் பரிசு வெல்லலாம்! இதில் எனக்கு எந்தச் சிறப்புப் பெருமையும் இல்லை. ஆனால், உலகிலுள்ள 1.2 மில்லியன் ரோட்டரியினரின் சார்பாக யாராவது அங்கு சென்று அந்தப் பரிசைப் பெற வேண்டுமில்லையா? என்று சொன்னதும், அரங்கில் கைதட்டல்கள் வளர்ந்தன.*

*ஆனால், ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை 1.2 மில்லியன் என்ற எண்ணிலேயே நின்றுகொண்டிருப்பது தனக்குக் களைப்பூட்டுவதாகவும் மேத்தா குறிப்பிட்டார். ''இதை நாம் 1.3 மில்லியனாக ஆக்குவோம் அடுத்த மூன்றாண்டுகளில் நீங்கள் ஒவ்வொருவரும் தலா ஓர் உறுப்பினரை அழைத்துவந்தால் போதும் 2022ல் நான் என்னுடைய அலுவலகத்திலிருந்து வெளியே வரும்போது, இந்திய உறுப்பினர் எண்ணிக்கை 2.5 லட்சமாகும், நம்முடைய ஒட்டுமொத்த உறுப்பினர் எண்ணிக்கை 1.3 மில்லியன் ஆகும்,'' என்றார் அவர்.*

# கட்டமைப்பை உருவாக்குவோம்: PDGக்களைச் சேவையில் ஈடுபடுத்துவோம்



PDGக்கள் RIPN மேத்தா மற்றும் ராஷி அவர்களை கௌரவிக்கின்றனர்.

*எழுத்தறிவுத் திட்ட வடிவமைப்பைப் போன்ற ஓர் அமைப்பைத் தடுப்பு நலன், நீர் மற்றும் தூய்மை மற்றும் பேரிடர் மேலாண்மையில் உருவாக்குவதற்கான தேவையையும் RIPN அடிக் கோடிட்டுக்காட்டினார். ஒவ்வொரு பெரும் பிரிவுக்கும் ஒருங்கிணைப்பாளர்களை உருவாக்கலாம். நாம் கவனம் செலுத்தும் இந்த மூன்று பகுதிகளுக்கும் ஒரு கட்டமைப்புள்ள வலைப்பின்னலை நம்மால் உருவாக்க இயன்றால், நம்முடைய பணியில் கிட்டத்தட்ட 500 PDGக்கள் ஈடுபடுவார்கள்; இதன்மூலம், இந்தியாவில் தொண்டுப்பணிகள் செய்யப்படுகிற இயல்பு, விதம் மற்றும் வழியே மாறும்.''*

*இதனால், முன்னாள் ஆளுநர்கள் அரசியலில் அல்லது தேர்தல்களில் ஈடுபடுவதும் குறையும்; சும்மா இருக்கும் மனம், சாத்தானின் பணியகமில்லையா? முன்னாள் ஆளுநர்கள் பலர் இது போன்ற நல்ல பணிகளில் பங்கேற்க விரும்புகிறார்கள், சேவைப் பணிகளில் ஈடுபட விரும்புகிறார்கள், ஆனால், அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்கள் ரஞ்சிப் போட்டி ஆட்டங்களில் மட்டும் விளையாட விரும்புவதில்லை; தேசிய அளவில் விளையாட விரும்புகிறார்கள்.''*

*நலப்பணிகள், தண்ணீர் சார்ந்த பணிகள் அல்லது பேரழிவு மேலாண்மையில் பணியாற்ற விரும்பும் PDGகள் அல்லது பிற ரோட்டரியன்கள், தயவுசெய்து எனக்கு எழுதுங்கள். உங்களுக்கு ஏற்ற பணியை நாங்கள் கண்டிப்பாகக் கண்டறிவோம். நாம் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவோம், இந்தியாவில் ரோட்டரி பணியாற்றும் விதத்தை மாற்றுவோம். நாம் ஏற்கெனவே மிகச்சிறந்த பணியைச் செய்துகொண்டிருக்கிறோம்; இப்போது நாம் ஒரு துள்ளல் பலகையில் ஏறி நிற்கிறோம்; இங்கிருந்து மிகப்பெரிய பாய்ச்சலை நிகழ்த்துவோம் என்றார்.*

சார்பாக DG சிரீஷ் கேசவன் வழங்கினார்.

தனக்குப் பாராட்டுரை வழங்கிய DGக்கள் ஷிரிஷ் கேசவன் மற்றும் ஷேக் சலீம் (D3212) மற்றும் பல PDGக்களுக்குப் பதிலளித்த மேத்தா, ரொட்டேரியினரின் அன்பு மற்றும் நேயத்தால் தானும் ராஷியும் திக்குமுக்காடியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

RID 3211ன் சேவைத் திட்டங் களுக்காக, வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்காக அந்த மாவட்டத்தைப் பாராட்டிய ஷிரீஷ் கேசவன் இவ்வாறு குறிப்பிட்டார், ''ஒரு வீட்டைக் கட்டுவது எவ்வளவு சிரமம் என்பது எனக்குத் தெரியும். இத்தனை வீடுகளைக் கட்டுவது ஓர் எளிய பணியாக இருந்திருக்காது. தங்களை அணுகி, உதவுகிறவர்களை அவர்கள் எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்.''

தான் வேட்பாளராக அறிவிக்கப் பட்டது பற்றிப் பேசிய மேத்தா, இதற்காகத் தான் திட்டமிட வில்லை என்றார். மே மாதத்தில், தன்னுடைய துரதிருஷ்டவசமான உடல்நலமின்மை காரணமாக இந்தப் பொறுப்பிலிருந்து PRID சுசீல் குப்தா விலகிக்கொண்டார்.

ஜூன் மாதத்தில், மேத்தா தன்னுடைய பெயரை முன்வைக்கத் தீர்மானித்தார்.

''அப்போது என்னுடைய தந்தை மிகவும் உடல்நலமின்றி ICU-போன்ற ஒரு சூழலில் இருந்தார்; அப்போது நான் இவ்வாறு நினைத்தேன்: இப்போது நான் என்னுடைய பெயரைப் பதிவு செய்தால், அடுத்த சில ஆண்டுகளுக்கு நான் வரிசையில் காத்திருப்பேன் அவர்கள் என்னை வரிசையின் முன் பகுதிக்குத் தள்ளுவார்கள் என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை.''

அங்கு கூடியிருந்த



RIPN *மேத்தா மற்றும் ராஷி கேரள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரோட்டரி வீடுகள் கட்டியமைத்தவர்களை கௌரவிக்கின்றனர்.*



*ரோட்டரியில் 50 வருடம் நிறைவு செய்ததற்கு* PDG M *ராமசாமி ஐயரை கௌரவிக்கும்* RIPN *மேத்தா.*

ரோட்டரியினர் இன்னோர் இலக்குக்காகவும் பணியாற்ற வேண்டும் என்று மேத்தா வலியுறுத்தினார்: ரோட்டரியை உலகின் முதல் நிலைச்சேவை நிறுவனமாக ஆக்குவது.

டிசம்பர் 29 அன்று, கொல்கத்தாவில் ரூ.25 கோடி மதிப்புள்ள திட்டத்தை நாம் தொடங்குகிறோம். இதன் மூலம் 1,000 குழந்தைகளுக்காக உறைவிடப் பள்ளி அமைக்கப்படும்; அப்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா அன்று நடைபெறவுள்ளது. அதன் பிறகு, நூற்றாண்டு மாநாட்டின் போது, பிப்ரவரி 14–16ல் இன்னொரு ரூ.50 கோடித் திட்டம் தொடங்கப்படும்; இதன் மூலம், 400-படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனை அமைக்கப்படும்.

இந்த நூற்றாண்டின், ரூ.2,400 கோடி மதிப்புள்ள திட்டங்களைச் செய்வோம் என்கிற வியக்கத்தக்க வாக்குறுதியை இப்போதைய DGக்கள் அளித்துள்ளார்கள். இந்த அளவு சேவைத் திட்டங்களை ரோட்டரி உலகில் வேறு எங்கு நாம் காண இயலும்? என்று கேட்ட மேத்தா, இந்தூர் இன்ஸ்டிட்யூட்டில் இணையத்தளம் தொடங்கப்படும் என்றார். ஒவ்வொரு சங்கத் தலைவரும் தன்னுடைய சங்கம் செய்து வரும் திட்டங்களின் மதிப்பை அங்கு பதிவு செய்யலாம்.

இதன் பொருள், மிக விரைவில் நாம் இந்தத் தரவுகளைத் திரட்டுவோம், தொகுப்போம். உலக அளவில் இப்பணியைச் செய்யப்போகும் ஒரே நாடு, இந்தியா தான். நாம் எத்தனை மருத்துவ மனைகள் அல்லது பள்ளிகளைக் கட்டி, இயக்கி வருகிறோம் என்று RI தலைவர்களுக்குத் தெரியவில்லை. நாம் எத்தனை அமர்விடங்களை உருவாக்கியிருக்கிறோம், எத்தனை நூலகங்களை உண்டாக்கியிருக்கிறோம் என்றெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை இதை நாம் மாற்றப்போகிறோம்.''

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# இந்தூரில் ரோட்டோர உணவு விருந்து

ரஷீதா பகத்

ரோட்டரி இதழுக்காக, ரோட்டரியின் பிராந்தியச் சந்திப்பு நிகழ்வுகளைப்பற்றி எழுதும்போது கவனம்முழுவதும் வேலையில் மட்டுமே இருக்கவேண்டும். அந்தச் சந்திப்பு நிகழும் நகரம் எவ்வளவு அருமையானதாக இருந்தாலும் சரி, அதைப் பலவிதங்களில் உண்மையாகக் காணவோ, அனுபவிக்கவோ இயலாது. ஒருவேளை, அந்நகரை அனுபவிக்கத் தான் வேண்டும் என்று நினைத்தால், பின்னிரவு நேரத்தில் ஊரைச் சுற்றிவரவேண்டும். அது என்னால் இயலாது!

ஆகவே, பிராந்தியச் சந்திப்பு இந்தூரில் நிகழும் என்று RI இயக்குநர் பரத் பான்ட்யா அறிவித்தபோது எங்கள் மனத்தில் முதலில் தோன்றிய விஷயம், அந்த ஊரில் கிடைக்கிற, நாவில் எச்சிலூறச்செய்கிற ரோட்டோர உணவுகள்தாம். அங்குள்ள சராஃபா பஜார் ரோட்டோர உணவுகளுக்கு மிகவும் புகழ்பெற்றது. இதன் பொருள், நிகழ்வுக்குச் சென்றதும் கிடைக்கிற முதல் மற்றும் ஒரே






ஓய்வு நேர மாலையை நாங்கள் பயன்படுத்திக்கொண்டாகவேண்டும். ஒரு மாலை நேரத்தில், என்னுடைய சக ஊழியர் முத்துவுடன் இந்தூர் விமான நிலையத்தில் வந்து இறங்கினேன். முத்து உணவில் பெரும் ஆர்வம் கொண்டவர் என்று சொல்ல இயலாது. அவருக்குத் தயிர்சாதமும், தொட்டுக் கொள்ள ஏதாவது காயும் இருந்தால் போதும், ஓர் ஆண்டு முழுக்க அதையே மகிழ்ச்சியாகச் சாப்பிட்டுச் சமாளித்துவிடுவார்.

ஆகவே, என்னைப்போன்ற உறுதியான ரோட்டோர உணவு விரும்பிகளை நான் தேடினேன். என்னுடைய சக ஊழியரான ஜெய்ஸ்ரீ மற்றும் PDG ஷ்யாமாஸ்ரீ சென் ஆகியோருடன் சராஃபா சாலைக்கு விரைந்தேன். முத்துவும் எங்களுடன் வந்தார் ஆனால், அவருடைய ஆர்வம் உண்பதில் இல்லை, புகைப்படம் எடுப்பதிலும், நாங்கள் அங்குமிங்கும் சென்று உண்பதைப் பார்ப்பதிலும் தான்!




இரவு 9மணிக்குமேல் தான் இந்தூரின் ரோட்டோர உணவுக் கடைகள் மிகச்சிறப்பாக இருக்கும் என்று பலர் எங்களுக்குச் சொல்லி யிருந்தார்கள். ஆகவே, சரியாக 9மணிக்குப் பிறகு நாங்கள் சராஃபா பஜாருக்குச் சென்று சேர்ந்தோம்.

அந்தத் தெரு, பகல் நேரத்தில் நகைக்கடைத் தெருவாகவும், இரவு நேரத்தில் தின்பண்டத் தெருவாகவும் செயல்படுகிறது. இப்போது அங்கு என்னவெல்லாம் கிடைக்கிறது என்று நாங்கள் கவனிக்க ஆரம்பித்தோம்.

இந்தத் தெருவில் நாம் முதன் முதலாகக் கவனிக்கக்கூடிய விஷயம், பெரிய, கவர்ந்திழுக்கிற வட்டத் தட்டுகளில் மிகவும் சுண்டியிழுக்கிற இனிப்புப் பண்டங்கள், குலாப் ஜாமூனில் தொடங்கி ரப்ரி/ஃபிர்னி, ஜலேபி, இன்னும் பல.

இதில் ஒரு சுவையான தகவல், இந்தூரில்தான் நான் ஜலேபிக்கும் இமார்த்திக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைத் தெரிந்துகொண்டேன்.





சூடான மால்புவா.

கடையிலேயே தேங்காய் க்ரஷ் கிடைத்தது. ஆனால், இந்தப் பெயரோடு பண்டத்தை ஒப்பிட்டால் சற்று ஏமாற்றம்தான் மிஞ்சும்: தேங்காய் க்ரஷ் என்பது உண்மையில் இளநீரும் வழுக்கைத் தேங்காயும் கலந்த கலவை தான். இதைச் சாப்பிடும் போது நம் மனம் தென்னிந்திய இனிப்பாகிய இளநீர்ப் பாயசத்துக்கு ஏங்கும்.

இதெல்லாம் போதாது என்று நாங்கள் அடுத்த கடைக்குச் சென்றோம்; அங்கிருந்த ஜலேபி வாலா எங்களுக்காகச் சுடச்சுட ஜலேபிகளைப் பொரித்துத்தருவதாகச் சொன்னார். நாங்கள் மகிழ்ச்சியுடன் சம்மதித்தோம்; அந்த அழகான, குளிர்ச்சியான முன்பனி மாலையில் சுடச்சுட இனிப்புகளை உண்டு மகிழ்ந்தோம்.

இப்படி நாங்கள் உண்டவற்றுள் அதை நான் கற்றுக்கொண்ட இடம், ஒரு காலையுணவு மேசை, அதைக் கற்றுக்கொடுத்தவர், PDG ராஜு சுப்ரமணியன்!

அடுத்து, பலவிதமான அல்வாக்கள் கேரட் அல்வா தொடங்கிப் பாசிப்பருப்பு அல்வாவரை, இவற்றுடன் சுடச்சுட மால்புவா! சராஃபாவை அனுபவிக்க ஒரு வயிறு போதாது, நம்புங்கள்!

நாங்கள் முதலில் உண்ட உணவுப்பண்டம், சராஃபாவில் அதிகம் பரிந்துரைக்கப்படுகிற கராடு. இது கருணைக்கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் பண்டம், இதைப் பொரித்துச் சட்படா மசாலாத் தூள் சேர்த்துக் காரசாரமாகத் தருகிறார்கள். அது சுமாராகதான் இருந்தது; என்னுடைய சுவை அரும்புகளை அது தூண்டிவிட்டதாகச் சொல்ல இயலாது.

ஆனால், ஆலு சுருள்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன; உருளைக்கிழங்குகளை மெலிதாகத் துண்டாக்கி ஒரு சுருள்வடிவில் அமைக்கிறார்கள்; அதில் சீஸ், சாட் தூளைத் தூவிப் பொரித்துச் சுவை மிகுந்த, மென்மையான பொன்னிறத்தில் தருகிறார்கள். மொறு மொறுப்பும் மென்மையும் மிகச்சரியாகக் கலந்த பண்டம் அது; காரசாரமாகவும் இருந்தது.

நல்லவேளையாக, அடுத்த



பெரும்பாலானவற்றை முத்து மென்மையாக மறுத்துவிட்டார். அவருக்கு அதிகம் பழகியிருந்த இளநீரைமட்டும் நிறைய குடித்தார், மகிழ்ச்சியாகப் புகைப்படங்களை எடுத்துக்கொண்டிருந்தார்.

மறுபக்கம் நாங்களோ இன்னும் சுவையான உணவுகளைத் தேடினோம். அப்போது எங்களுக்குக் கிடைத்த கார்ன் கிஸ் என்ற உணவுப்பொருள் சுமாராக இருந்தது.

அதன்பிறகு, நாங்கள் ஒரு பானி-பூரிக் கடையைப் பார்த்தோம். கிடைக்கிறவற்றைப்போல் பலவிதமான 'பானிகள்' இல்லை, ஆனால், பானி-பூரி சுவையாக இருந்தது, நாங்கள் எங்களால் இயன்றவரை வாங்கி உண்டோம். இவ்வளவு சாப்பிட்ட பிறகும், நாங்கள் வெறும் ரூ.500 தான் செலவழித் திருந்தோம், தேங்காய் க்ரஷ்க்காகச் செலவிட்ட ரூ.250 சொச்சம் தனிக்கணக்கு.




இப்போது, எங்கள் வயிறு முழுமையாக நிரம்பியிருந்தது. ஆகவே, பலவிதமான பாவ்-பாஜிகள், மோமோக்கள், சாட்கள் மற்றும் சுவைமிகுந்த பலப்பல பண்டங்களை விற்றுக்கொண்டிருந்தவர்களை எங்களால் பொறாமையுடன் பார்க்கதான் இயன்றது.


நிறைவாக, நாங்கள் தில்லி குல்ஃபிக் கடைக்கு வந்தோம். இதற்குள், நேரம் நள்ளிரவாகி யிருந்தது. ஆகவே, நாங்கள் நால்வரும் ஒருமனதாகத் தீர்மானித் தோம், "இந்தக் குளிர்கால இரவுக்கு ஏற்ற முக்கியமான பண்டம், சுவை மிகுந்த குல்ஃபிதான்!"

இரண்டு மாம்பழக் குல்ஃபி, இரண்டு சீதாப்பழக் குல்ஃபி வாங்கிக்கொண்டோம். அத்தனையும் எங்கள் நாவுகளில் கரைந்தன.

மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் கிட்டத்தட்ட குரலெடுத்துப் பாடியபடி நாங்கள் நடந்தோம். ஜால்-மோரியை ரசி த்து அனுபவித்துக்கொண்டிருந்த நேபாளத்தைச் சேர்ந்த DG கிரன்லால் ஷ்ரெஷ்டாவைச் சந்தித்தோம்.

விரைவில், பலவிதமான பான்களை விற்றுக்கொண்டிருந்த கடைகளைப் பார்த்தோம். இங்கு கிடைக்கும் ஸ்மோக் பான் புகழ்பெற்றது. இது நம் நாக்கில் நெருப்பைப் பற்றவைக்கக்கூடியது; மிகவும் துணிவுவாய்ந்தவர்கள்தான் அதை முயல்வார்கள் கிட்டத்தட்ட அதே அளவு கவர்ச்சியான வேறு பல பான்களும் இருந்தன: செர்ரி பான், ஸ்ட்ராபெர்ரி பான், சாக்லெட் பான், மாம்பழப் பான், பட்டர்ஸ்காட்ச் பான், லிட்சி பான் அநேகமாக எல்லாப் பழங்களைக் கொண்ட பான்களும் அங்கிருந்தன.

ஆனால், நாங்கள் எந்தப்



*சுவையான குலாப் ஜாமுன்.*

பானையும் வாங்கவில்லை. இந்தூரின் சராஃபாவுக்குத் திரும்பி வருவதற்கு ஒரு காரணம் வேண்டாமா?

கவனித்துப்பார்த்தால், அநேகமாக எல்லாக் கடைகளிலும் PayTM QR குறியீட்டை ஸ்கான் செய்து பணம் செலுத்தும் வசதி இருந்தது. இதனால், பணம் செலுத்துவது மிகவும் எளிதாகிவிட்டது.

சில விற்பனையாளர்கள் 15 ஆண்டுகளாக இங்கு கடை நடத்திவருகிறார்கள். எடுத்துக் காட்டாக, எங்களுக்குக் கார்ன் கிஸ் வழங்கிய சுஷீலா.

இவர்களில் பெரும்பாலானோர் கடை உரிமையாளர்களுக்கு ரூ.8,000 முதல் ரூ.10,000 வரை வாடகையாகத் தருகிறார்கள். தொழில் நன்றாக நடக்கிறது என்கிறார்கள். அதேசமயம் "தினமும் எவ்வளவு சம்பாதிப்பீர்கள்?" என்று கேட்டால் நேரடியாகப் பதில் சொல்வதில்லை, பெரிதாகச் சிரிக்கிறார்கள்.

உணவு மிகச்சிறப்பாக இருந்தது ஒருபுறமிருக்க, அதைவிடச் சிறப்பான ஒரு விஷயத்தையும் சராஃபாவில் கவனித்தோம்:




*உருளை சுருலை கையில் வைத்திருக்கும் PDG ஷ்யாமாஸ்ரீ சென்.*



*மெரு-மொரு ஜெலேபி*

ஒவ்வொரு மாலையிலும் ஆயிரக் கணக்கானோர் வந்து போகிற இந்தத் தெரு, ஓரளவு தூய்மையாகவே உள்ளது.

விரலால் எடுத்து உண்கிற உணவுகளைச் சாப்பிடு கிறவர்கள், விரல்களைத் துடைக்கவேண்டும் அல்லது கழுவவேண்டும். ஆனால், பெரும்பாலான கடைகள் காகிதக் கைக்குட்டைகளை வழங்குவதில்லை. இதற்கு ஜலேபிவாலா மகேஷ் அதற்கு இவ்வாறு விளக்கம் தந்தார்: மேடம், பேப்பர் நாப்கின் தருவது ஒரு பிரச்னையே இல்லை; ஆனால், இங்கு வருகிறவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலாப் பயணிகள்; அவர்கள் சும்மா கையைத் துடைத்துவிட்டு நாப்கின்களைத் தெருவில் வீசி எறிந்துவிடுகிறார்கள், அதற்காக நகராட்சி எங்களுக்கு அபராதம் போடும். அதுதான் பிரச்னை.''

கடந்த சில ஆண்டுகளாகவே, இந்தியாவின் மிகத் தூய்மையான நகரங்களில் ஒன்றாகச் சாதனை படைத்துவருகிறது இந்தூர், பல தூய்மைப் பட்டியல்களில் முதலிடத்தைப் பிடித்துவருகிறது, அதற்கான காரணம் இங்கு புரிகிறது.

அதிகாலை 2 மணியளவில் இந்தச் சந்தை மூடப்பட்டபிறகு, 15 நிமிடங்களுக்குள் மாநகராட்சி தூய்மைப்பணியாளர்கள் வந்து விடுவார்களாம், அடுத்தநாள் காலையில் கடைக்காரர்கள் தங்களுடைய கடைகளுக்கு வரும் போது, தூய்மையாகப் பளிச்சிடும் கடைத்தெருவைக் காண்பார்களாம்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் V முத்துகுமரன்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்



# போலியோவின் கடைசி மைலை ஒன்றாகக் கடப்போம்

அக்டோபரில் வியன்னாவில் ஒரு வியப்பளிக்கும் செயல் நடைபெற்றது. வரலாற்றில் முதன்முறையாக, 26.2 மைல்கள் நீளமுள்ள மாரத்தானை இரண்டு மணிநேரத்துக்குள் ஓடிமுடித்தார் கென்யாவைச் சேர்ந்த எலியுட் கிப்சோகெ என்ற ஓட்டப்பந்தய வீரர்.


பல ஆண்டுகளாக, இது சாத்தியமில்லாத விஷயம் என்று வல்லுனர்கள் நினைத்தார்கள். இதைச் சாதிக்கும் திறன் மனித உடலுக்கு இல்லை என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் கிப்சோகெ இந்தச் சவாலில் வெற்றிபெற்றார். காரணம், அவருடன் ஒரு மிகச்சிறந்த குழு பணியாற்றியது. வழிமுழுவதும் ஒவ்வொரு நிலையிலும் பலர் விரைவோட்டக்காரர்கள் அவருடன் ஓடினார்கள்; அவருக்குத் தேவையான உணவும் நீர்மங்களும் வழங்கப்படுவதைப் பலர் உறுதிசெய்தார்கள். சில மைல்களுக்கு ஒருமுறை, அவருடைய வேகத்தில் ஓடக்கூடிய புதிய ஓட்டக் காரர்கள் உள்ளே அனுப்பப்பட்டார்கள்; அவர் தன்னுடைய இலக்கை எட்ட இவர்கள் உதவினார்கள்.

கிப்சோகெயைப்போல், ரோட்டரிக்கும் ஒரு மிகச்சிறந்த ஆதரவுக் குழு உள்ளது. இளம்பிள்ளைவாதத்தை உலகிலிருந்து முற்றிலுமாக நீக்கும் நம்முடைய மாரத்தான் பயணத்தின் கடைசி மைலை நாம் நெருங்கும் இந்த நேரத்தில், இந்தக் குழு நமக்கு உதவும். இந்தப் பயணம்முழுவதும், இந்த முயற்சியின் வேகத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்குப் பல மிகச்சிறந்த ரோட்டரியினர் உதவியுள்ளார்கள். தங்களுடைய நேரத்தை, ஆற்றலை நன்கொடையாக வழங்கி, நம்மை நம்முடைய இலக்குக்கு அருகில் கொண்டுவந்துள்ளார்கள்.

இந்த நேரத்தில் நாம் நம்முடைய கவனத்தை இழந்துவிடக் கூடாது, பந்தயம் ஏற்கெனவே நிறைவடைந்துவிட்டது என்று எண்ணக்கூடாது. கடைசி 2 மைல்களில் விரைவோட்டக்காரர்கள் எல்லாரும் வீட்டுக்குச் சென்றிருந்தால், எலியுட் கிப்சோ கெவுக்கு என்ன ஆகியிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய இயலுமா? அவர் தன்னுடைய இலக்கை எட்டாமல் இருந்திருக்கக்கூடும்.

ஒரு கடினமான வேலையைக் கடைசிவரை செய்வதற்கு ஒரு சிறப்பு ஆளுமை தேவை. இந்த நேரத்தில்தான் நாம் ஒருவருக்கொருவர் மிகவும் தேவைப்படுகிறோம். முதல் காலடிகளை எடுத்துவைக்கத் தேவைப்பட்டதுபோன்ற அதே அளவு துணிச்சல் அந்த நிறைவுக் காலடிகளை எடுத்துவைப்பதற்கும் தேவை.

ரோட்டரியன்களே, நாம் வரலாறு படைப்போம், இறுதிக் கோடு கைக்கெட்டும் தூரத்தில்!



**கேரி C K ஹுவாங்்**
TRF அறங்காவலர் தலைவர்



# வாருங்கள், வாங்கி மகிழுங்கள்

ஹாங்க் சார்டின்



ரோட்டரி பன்னாட்டு மாநாடு, 6–10 ஜூன்-க்காக ஹோனலூலு வருகிறவர்கள் நினைவுப்பரிசுகளை எண்ணிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஹவாயி-யின் கலைஞர்களும் கைவினைப்பொருள் உருவாக்குநர்களும் உங்களுக்கு உதவுவார்கள்.

ஹவாயி மாநாட்டு மையத்திலிருந்து இரண்டே தொகுதிகள் தள்ளியிருக்கும் தி அலா மோனா மையம் (மேலே), தனித்துவமான ஹவாயி நுட்பத்தைக் கொண்ட ஒரு திறந்தவெளி விற்பனை நிலையமாகும். நாள்தோறும் மதியம் 1 மணிக்கு நடைபெறவிருக்கும் ஹூலா காட்சிகள், இந்த நடனத்தின் பண்பாட்டு மற்றும் நவீன வடிவங்களைக் காட்டுகின்றன. கோச் மற்றும் குக்கி போன்ற சங்கிலிச் சில்லறை விற்பனையாளர்களோடு, மௌவி டைவர்ஸ் ஜுவல்லரியில் பவள நகை, 'அவுனா க்வில்ட்'ஸில் கையால் செய்யப்பட்ட ஆடைகள் போன்ற அழகிய, உள்ளூரில் செய்யப்பட்ட பொருட்களையும் நீங்கள் காண்பீர்கள்.

நீங்கள் இன்னும் கலகலப்பான வாங்கும் அனுபவத்தையும், பேரம் பேசுவதையும் விரும்பினால், அலோஹா மைதானம் பரிமாறல் சந்திப்பு சந்தைப்பகுதிக்கு நேரம் ஒதுக்குங்கள். இங்கு 400க்கும் மேற்பட்ட உள்ளூர் விற்பனை யாளர்கள் கையால் செய்யப்பட்ட பொருட்கள், கலைப்படைப்புகள் உள்ளிட்ட தங்களுடைய பொருட்களைக் காட்சிப்படுத்துகிறார்கள். பரிமாறல் சந்திப்பு சந்தைப்பகுதி புதன், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருக்கும்.

இங்கு கிடைக்கும் உள்ளூர்த் தின்பண்டங்களைத் தவறவிடாதீர்கள்: வெப்பமண்டலச் சூரியனில் நல்ல விலைக்குப் பொருட்களை வாங்க முனையும்போது உங்களைக் குளிர்வாக்கிக்கொள்ள மிகச் சிறந்த வழி, சீவப்பட்ட பனிக்கட்டிதான் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

**ஹோனலூலுவில் 2020 ரோட்டரி மாநாட்டின் நுழைவுக்கட்டணத்தை சேமிக்க, 31 மார்ச்சுக்குள்** riconvention.orgல் **பதிவுசெய்யுங்கள்.**

Rotary PEOPLE OF ACTION

# WinS இந்தியா முழுவதும் மகிழ்ச்சி பள்ளிகளை உருவாக்க உதவும்

V முத்துக்குமரன்




*இன்னர் வீல்* (D 323) *தலைவர் நளினி ஒளிவன்னன்,* PDG *ரமேஷ் அகர்வால்,* PRID P T *பிரபாகர்,* PDG *நடராஜன் நாகோஜி* DG G *சந்திரமோகன், மாவட்ட* WinS *தலைவர்* P *ஜெயநாதன், ரோட்டரி* WinS *செயற்தூதர் ஹனீஃபா ஜாராவுடன்.*

2025ற்குள் 100,000 WinS திட்டங்களை கொண்டு வர RIPE ஹோல்கர் நாக் மற்றும் RIPN சேகர் மேத்தா இருவரும் இலக்கு நிர்ணயித்ததுள்ளனர். TRF நூற்றாண்டினை சிறப்பிக்கும் விதமாக 2017 இல் துவங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இதுவரை 40,000 பள்ளிகளுக்கு குடிநீர், சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான வசதிகளை அளித்துள்ளது

"நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10,000 பள்ளிகளுக்கு இந்த வசதியை செய்து தருவதால் எங்களால் இந்த புதிய இலக்கை எளிதில் அடைய முடியும். இந்திய பள்ளிகளில் கை கழுவுதல் நடைமுறையில் இல்லாததால் குழந்தைகளில் சுமார் 44 சதவீதத்தினருக்கு நோயுற்ற தன்மை ஏற்படுகிறது. உலகளவில், 4.8 கோடி குழந்தைகள் குன்றிய வளர்ச்சியால் பாதிக்கப்படுகின்றனர், அவர்களில் 33 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். சென்னையில் RID 3232 கிளப்புகளின் WinS டார்கெட் சாலன்ஜ் செமினாரில் பேசுகையில் அவர் வெட்டவெளியில் மலம் கழிக்கும் 40 கோடி மக்களின் மூன்றில் ஒரு பங்கு அதாவது 13 கோடி மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

யுனிசெஃப் மற்றும் ஒரு சிறப்பு தன்னார்வ தொண்டு நிறுவனமான வேர்ல்ட் விஷன், ரோட்டரி கிளப்புகளுடன் இணைந்து ஹேண்ட்வாஷ் நிலையங்களை நிறுவி, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே மனப்பான்மை மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன.

## WinS பிராண்ட் தூதர்

கருத்தரங்கின் சிறப்பம்சம் ஹனிபா ஜாரா என்ற 13ம் வகுப்பு மாணவியை WinS பிராண்ட் தூதுவராக, குளோபல் வின்ஸ் சேர் அங்கீகரித்தது ஆகும். ஜாரா கடந்த ஆண்டு தனது வீட்டில் கழிப்பறை கட்டாததற்காக உள்ளூர் காவல் நிலையத்தில் தன் தந்தை மீது வழக்கு பதிவு செய்தபோது, அவர் பிரபலமானார்.

இச்சம்பவம் சமூக ஊடகங்களில் வைரலாகி, ஒரே நாளில், ஆம்பூர் நகராட்சி அவரது வீட்டில் ஒரு கழிப் பறையை கட்டியது. மேலும், 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் வீடுகளில் உள்ளாட்சி அமைப்பால் கட்டப்பட்ட கழிப்பறைகளைப் பெற்றன, இதற்கு ஜாராவிற்கே நன்றி. வேலூர் மாவட்டத்திற்கான தூய்மையான இந்திய தூதராக ஜாரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நட்சத்திர அங்கீகாரங்கள்

TRF பைலட்டான டார்கெட் சாலன்ஜ் ஜூன் 2020ல் முடிவுற்றால், அது உலகம் முழுவதும் செயல்படுத்தப் படும் என்று RID 3012 PDG மற்றும் WinS குழு உறுப்பினர் ரமேஷ் அகர்வால் கூற, இதனிடையில் RIPN சேகர் மேத்தா WinSஐ அடுத்தக் கட்டத்திற்கு அதாவது அடிப்படை கல்வி மற்றும் படிப்பறிவுக்கு நிகராக கொண்டு வரும் முயற்சியில் உள்ளார்.

ரோட்டரியின் முதல் திட்டம் 1907ல் சிகாகோவில் கழிப்பறை நிறுவுதல் மற்றும் RID 3232ல் செய்யப்பட்ட சமீபத்திய திட்டம் தஞ்சாவூரில் (தெற்கு தமிழ்நாடு) மூன்று கழிப்பறைத் தொகுதிகளை அமைத்தது என்று DG G சந்திரமோகன் தெரிவித்தார். கோயம்புத்தூர் அருகே உள்ள ஒரு அரசுப் பள்ளியில், அரசு அதிகாரிகள் பரிசோதிக்கும் வரை கழிப்பறைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டன. பிறகு அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட கழிப்பறைகளை ஒரு சமையலறையாக மாற்ற மீண்டும் மாணவர்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். "குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களின் மனநிலையை மாற்றுவது எவ்வளவு கடினம் என்பதையே இது காட்டுகிறது'' என்று அவர் கூறினார்.

ஒவ்வொரு பள்ளியிலும் இரண்டு கழிப்பறைகள் மற்றும் ஹேண்ட்வாஷ் நிலையம் அமைப்பதற்காக 21 கிளப்புகளுக்கு ரூ.15 லட்சம் மதிப்புள்ள மாவட்ட மானிய ஒதுக்கீடு கடிதங்களை அவர் வழங்கினார். அதிகமான பள்ளிகளுக்குச் செல்ல சமமான தொகையை திரட்டுமாறு பிரபாகர் கிளப்புகளை வலியுறுத்தினார்.




*பள்ளி மாணவர்களின் கை கழுவும் பயிற்சி.*

### MHM சிக்கல்கள்

Inner Wheel clubகளை துவக்கி பள்ளிகளில் MHM பற்றி வகுப்புகள் எடுக்கப்படுவது பற்றி மேற்பார்வை செய்து வரும் Dr மீனாட்சி பாரத், RID 3190, பெண்கள் மனத்தில் மாதவிடாய் குறித்து ஒரு விதமான மரியாதை உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார். மேலும், ரோட்டேரியன்களிடம் துணி பாட்கள் மற்றும் மாதவிடாய் காலத்தில் பயன்படுத்த மாதவிடாய் கப்களையும் தங்கள் வீட்டு பெண்களுக்கு அறிமுகப்படுத்தி அதன் மூலம் மாதவிடாயை பாதுகாப்பாகவும், சுகாதாரத்திற்கு ஏற்ற வகையிலும் கையாளுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வலியுறுத்தினார்.

RID 323 இன்னர் வீல் தலைவர் நளினி ஒளிவண்ணன், MHMஐ அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல ரோட்டரி கிளப்புகளுடன் கூட்டு சேர இன்னர் வீல் தயாராக உள்ளது என்றார்.

மாவட்ட WinS ஒருங்கிணைப்பாளர் PDG நடராஜன் நாகோஜி மற்றும் வேர்ல்ட் விஷன் இந்தியா நிபுணர் ரெஜினா எர்ன்ஸ்ட் பேச்சாளர்களாக இருந்தனர்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

## புதிய RIDN ஆக A S வெங்கடேஷ்



RID 3232 PDG A S வெங்கடேஷ், 2021–23ம் ஆண்டிற்கான மண்டலம் 5 மற்றும் 6க்கான RI இயக்குநராக பணியாற்ற தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஹவாயின் ஹொனலுலுவில் நடைபெறும் 2020 RI மாநாட்டில் அவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

வெங்கி என்று பிரபலமான வெங்கடேஷ், RC சென்னை மாம்பலத்தில் உறுப்பினராக உள்ளார் மற்றும் 2007–08 ஆம் ஆண்டில் மாவட்ட கவர்னராக பணியாற்றினார். 2017ம் ஆண்டு இண்டர்நேனஷனல் அசெம்பிளியில் உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்க RIயினால் லீட் ஃபெலிலிடேட்டராக நியமிக்கப்பட்டார், இந்த பதவியில் பணியாற்றிய முதல் இந்தியர் இவரே.■

## RID 3181க்கான அங்கீகாரம்




RID 3181ற்கு சமீபத்தில் தனது 'மறுகட்டமைப்பு கோடகு' திட்டத்தின் மூலம் 2018 வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வீடுகளை வழங்கியதற்காக 'லீடர்ஷிப் பில்டர்' விருது வழங்கப் பட்டது.

திட்ட தலைவர் மற்றும் PDG Dr K ரவி அப்பாஜி, ஹ்யூமேனிட்டி இந்தியாவின் ஹேபிடாட் போர்டின் சேர்பர்சனாக இருக்கும் ராஜஸ்ரீ பிர்லாவிடமிருந்து மும்பையில் விருது பெற்றார்.■



**RC சிதம்பரம் சென்ட்ரல்** — RID 2981
பேருந்து நிலையத்தில் 1,000 பயனாளிகளுக்கு டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்காக கசாயம் வழங்க மிஸ்ரிமால் மகாவீர் சந்த் அறக்கட்டளையுடன் சங்கம் கைகோர்த்தது. டெங்குக் காய்ச்சல் தடுப்பு பிரச்சாரம் சங்கத்தின் வழக்கமான செயல்பாடுகளில் ஒன்றாகும்.

**RC சேலம் சவுத்** — RID 2982
அமுத சுரபி திட்டத்தின் கீழ், ஒரு திருநங்கை நடத்தும் தாய் மடி அறக்கட்டளைக்கு 500 கிலோ அரிசியை சங்கம் நன்கொடையாக வழங்கியது. ஒவ்வொரு மாதமும் 100க்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைகின்றனர்.






**RC ரேவாரி மெயின்** — RID 3011
அரசு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஸ்வெட்டர்கள் மற்றும் புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு ஓவியப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

**RC மதுரை நார்த்** — RID 3000
மன இறுக்கமுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு சிகிச்சை கருவிகள் அரசு ராஜாஜி மருத்துவமனையின் குழந்தைகள் மருத்துவ பிரிவுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. DG Dr A சமீர் பாஷா கருவிகளை மருத்துவமனை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.



# சங்க சேவைகள்

**RC ஸ்மார்ட் சிட்டி சந்த்ரபூர் — RID 3030**
நாக்பூர் சாலையில் ஒரு பேருந்து நிலையம் சங்கம் கட்டியது. DG ராஜேந்திர பாம்ரே இதனை துவக்கி வைத்தார்.



**RC இந்தூர் மேக்தூத் — RID 3040**
உலக நீரிழிவு நோய் தினத்தில் சங்கம் ஓர் மருத்துவ முகாம் நடத்தியது. இதில் 75 நோயாளிகள் பயனடைந்தனர்.







**RC செனோரஸ் ஜாம்நகர் — RID 3060**
உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு ஒரு பரிசோதனை முகாம் நடைபெற்றது, இதில் சுமார் 100 பேருக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு பரிசோதிக்கப்பட்டது. லகோட்டா ஏரி மைதானத்தில் ஜாம்நகர் மகாநகர் பாலிகாவுடன் இணைந்து இந்த முகாம் நடைபெற்றது.



**RC அமிர்தசரஸ் வடக்கு — RID 3070**
நகரின் மொகாம்புரா வட்டாரத்திலுள்ள பிம்லா நந்தா ரோட்டரி சமூக மைய மாணவர்களுக்கு ஸ்வெட்டர்கள் மற்றும் சாக்ஸ் வழங்கப்பட்டன. குளிர்கால மாதங்களில் இந்த ஆடைகள் தங்களை கதகதப்பாக வைத்திருக்கும்.

**RC ஆல்வார் — RID 3053**
நடைபாதை வாசிகள் குளிர்காலத்தில் கதகதப்பாக இருக்க அவர்களுக்கு கதகதப்பான ஆடைகள், சால்வைகள், ஸ்வெட்டர்கள் மற்றும் போர்வைகளை ரோட்டரி உறுப்பினர்கள் வழங்கினர்.

### RC பான்வெல் எலைட் — RID 3131

பென் தாலுகாவில் சிந்தலாச்சி வாடி பழங்குடி கிராமங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள 25 மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கப்பட்டது.



### RC மும்பை கண்டிவ்லி வெஸ்ட் — RID 3141

தியானேஷ்வர் பள்ளியில் புதுப்பிக்கப்பட்ட மூன்று வகுப்பறைகளை PDG பிரபுல் சர்மா திறந்து வைத்தார். ரூ.2.75 லட்சம் மதிப்புள்ள திட்டமானது 200க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயனளிக்கும்.



### RC பண்டரிபுரம் — RID 3150

சங்கம் ஏற்பாடு செய்த பிளாஸ்டிக் ஒழிப்பு இயக்கத்தில் DG P சிவன்நாராயண ராவ் பங்கேற்றார். துணிப் பைகள் மக்களுக்கு வழங்கப்பட்டன மற்றும் சுற்றுச்சூழலுக்கு பிளாஸ்டிக் ஏற்படுத்தும் தீங்கு பற்றி சங்க உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு கற்றுக்கொடுத்தனர்.



### RC மங்களூரு சென்ட்ரல் — RID 3181

கனரா உயர்நிலைப்பள்ளியில் மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 10 இல்லங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ரோட்டரி அனாதை இல்ல ஒலிம்பிக் நடத்தப்பட்டது. அந்த நாளில் அனாதைகளுக்கான வேடிக்கை நிறைந்த விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




### RC திருப்பதி — RID 3190

நோயாளிகளின் குடும்பத்தார்கள் வசதியாக உட்கார SVRR அரசு மருத்துவமனைக்கு சுமார் 100 ஸ்டீல் ஸ்டூல்களை கிளப் நன்கொடையாக வழங்கியது. DG சமீர் ஹரியானி நிகழ்ச்சியில் பங்கேற்றார்.



# சங்க சேவைகள்

### RC ராமநாதபுரம் ராயல்ஸ் — RID 3212

வின்ஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்டத்தின் வனியாங்குலம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.2 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட கழிப்பறையை PDG டாக்டர் சின்னதுரை அப்துல்லா திறந்து வைத்தார். இணைப்புக் குழாய்களுடன் கைகழுவும் நிலையம் மற்றும் 5,000 லிட்டர் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டன.



### RC மெட்ராஸ் சென்ட்ரல் — RID 3232

அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 25 லட்சம் செலவில் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளுடன் மகிழ்ச்சியான பள்ளி திட்டம் நிறைவேற்றப் பட்டது. 4,000 மாணவர்களுக்கு பயனளிக்கும் புதிய வசதிகளை அரசு அதிகாரிகள் முன்னிலையில் DG G சந்திரமோகன் திறந்து வைத்தார்.






### RC துர்காபூர் — RID 3240

ஒரு வாரம் நீடித்த முகாமில், 150க்கும் மேற்பட்ட செயற்கை கால்கள் மற்றும் காலிபர்கள் தேவையானவர் களுக்கு வழங்கப்பட்டன. பயனாளிகளின் உதவியாளர் கள் உட்பட சுமார் 750 பேருக்கு சங்கம் இலவசமாக உணவளித்தது. கொல்கத்தாவின் மகாவீர் சேவா சடனின் ஆதரவோடு இந்த திட்டம் நடைபெற்றது.



### RC தாமோ — RID 3261

உள்ளூர் மருத்துவமனையில் கண் மருத்துவ முகாம் நடை பெற்றது, இதில் இரத்தத்தில் சர்க்கரை அளவு காரணமாக சுமார் 140 நோயாளிகள் பரிசோதனை செய்யப்பட்டு, பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. முகாமில் முப்பத்தைந்து நோயாளிகளுக்கு இலவசமாக கண்ணாடி வழங்கப்பட்டது மற்றும் தேவைப்பட்டவர் களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.



### RC பத்ரக் — RID 3262

ஏழ்மையான, திறமைமிக்க மாணவர்கள் மற்றும் தங்கள் சேவை செயல்பாடுகளுக்கு நிதி தேவைப்படும் அமைப்புக்கு சங்கத்தின் விருதுகள் குழுவானது உதவித்தொகை வழங்கி வருகிறது. குழுவானது ரூ.50 லட்சம் மூலதனத்தில் வசதி வாய்ப்பற்ற நோயாளிகளுக்கு நிதி உதவிகளையும் வழங்குகிறது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

## Rotary News Subscription Remittances

**You can pay the Rotary News / Rotary Samachar subscription online**

**Our Bank details:**

Bank : HDFC Bank SB Account

Branch : Montieth Road Egmore, Chennai

A/c Name : Rotary News Trust

A/c No. : 50100213133460

IFSC Code : HDFC0003820

**E mail us following details:**

Name of Club

President/Secretary's name

Amount/Date of transfer/UTR Number

For physical payment by cheque or cash in bank, write **Club Name only** without prefixing "Rotary club of". Eg. Rotary Club of Delhi Central should be written: Delhi Central.

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,216,372 |
| Clubs | : | 35,825 |
| Districts | : | 525 |
| Rotaractors | : | 167,530 |
| Clubs | : | 10,108 |
| Interactors | : | 245,755 |
| Clubs | : | 10,685 |
| RCC | : | 10,815 |

As on Dec 12, 2019

*Please note Interact clubs that have not reported Interact Adviser in the past two Rotary years, are placed in "Suspended" status effective Oct 1, 2019.


## Membership Summary

As on Dec 2, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | *Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 113 | 4,903 | 246 | 44 | 26 | 220 |
| 2982 | 67 | 3,199 | 164 | 78 | 55 | 55 |
| 3000 | 126 | 5,625 | 548 | 185 | 133 | 210 |
| 3011 | 88 | 3,745 | 939 | 47 | 54 | 25 |
| 3012 | 94 | 3,746 | 944 | 51 | 46 | 59 |
| 3020 | 71 | 4,216 | 235 | 53 | 15 | 350 |
| 3030 | 91 | 4,976 | 661 | 95 | 99 | 286 |
| 3040 | 86 | 2,055 | 236 | 35 | 44 | 144 |
| 3053 | 62 | 2,799 | 486 | 16 | 37 | 99 |
| 3054 | 119 | 5,861 | 1,014 | 76 | 116 | 475 |
| 3060 | 96 | 4,380 | 614 | 53 | 42 | 142 |
| 3070 | 106 | 3,186 | 448 | 45 | 19 | 58 |
| 3080 | 85 | 3,552 | 341 | 83 | 51 | 112 |
| 3090 | 78 | 1,983 | 56 | 36 | 4 | 122 |
| 3100 | 80 | 2,016 | 125 | 12 | 12 | 146 |
| 3110 | 116 | 3,839 | 368 | 27 | 7 | 105 |
| 3120 | 78 | 3,399 | 448 | 38 | 14 | 53 |
| 3131 | 135 | 5,575 | 1,241 | 101 | 126 | 108 |
| 3132 | 84 | 3,539 | 384 | 34 | 55 | 158 |
| 3141 | 103 | 5,785 | 1,375 | 112 | 94 | 88 |
| 3142 | 92 | 3,347 | 696 | 77 | 46 | 64 |
| 3150 | 93 | 3,685 | 388 | 56 | 74 | 116 |
| 3160 | 68 | 2,448 | 180 | 27 | 3 | 83 |
| 3170 | 128 | 5,765 | 709 | 66 | 139 | 165 |
| 3181 | 81 | 3,694 | 369 | 59 | 164 | 115 |
| 3182 | 80 | 3,137 | 258 | 40 | 39 | 97 |
| 3190 | 126 | 5,074 | 713 | 130 | 86 | 59 |
| 3201 | 145 | 5,611 | 435 | 101 | 45 | 50 |
| 3202 | 126 | 5,142 | 312 | 75 | 66 | 47 |
| 3211 | 141 | 4,586 | 334 | 8 | 15 | 131 |
| 3212 | 100 | 4,134 | 328 | 100 | 64 | 145 |
| 3231 | 90 | 4,043 | 498 | 49 | 58 | 355 |
| 3232 | 126 | 5,296 | 907 | 125 | 108 | 91 |
| 3240 | 89 | 3,151 | 423 | 49 | 362 | 190 |
| 3250 | 101 | 3,961 | 700 | 59 | 34 | 181 |
| 3261 | 71 | 2,665 | 416 | 14 | 15 | 43 |
| 3262 | 97 | 3,491 | 432 | 44 | 27 | 77 |
| 3291 | 150 | 3,822 | 781 | 84 | 69 | 614 |
| **India Total** | **3,782** | **151,431** | **19,752** | **2,384** | **2,463** | **5,638** |
| 3220 | 69 | 2,033 | 292 | 80 | 79 | 73 |
| 3271 | 88 | 1,433 | 256 | 60 | 8 | 18 |
| 3272 | 147 | 1,920 | 315 | 51 | 7 | 43 |
| 3281 | 212 | 5,926 | 925 | 220 | 33 | 194 |
| 3282 | 166 | 5,252 | 677 | 139 | 28 | 45 |
| 3292 | 121 | 4,826 | 748 | 126 | 84 | 115 |
| **S Asia Total** | **4,585** | **172,821** | **22,965** | **3,060** | **2,702** | **6,126** |

*Source: RI South Asia Office*

ADVT.




**RIPN Shekhar Mehta - Rashi Mehta**
**First Lady Sangeeta Katru - DG Kishor Katru**
**RID 3110**

# *Happy New Year 2020*

ADVT.

# THE GREATEST FESTIVAL OF ROTARY IN INDIA !

Rotary India Centennial Summit 2020

**14-16 February 2020 I Kolkata**

AT VISWABANGLA CONVENTION CENTRE, KOLKATA

**GREAT AMBIENCE**

**ELOQUENT SPEAKERS**

**EXCELLENT FELLOWSHIP & SUMPTUOUS FOOD COURT**


**OUTSTANDING ENTERTAINMENTS**


VISWABANGLA CONVENTION CENTRE, KOLKATA

Nobel Prize Winners from Kolkata


Ronald Ross


C.V Raman


Rabindranath Tagore


Mother Teresa


Amartya Sen


Abhijith Banerjee


**COME TOGETHER FOR THE MOST SPECTACULAR ROTARY EVENT AS NEVER BEFORE IN INDIA**

**THE WORLD IS MOVING TO THE CULTURAL CAPITAL OF INDIA- KOLKATA**

**LET US CELEBRATE TOGETHER AT THE BIRTH PLACE OF ROTARY IN INDIA**

**A RARE OPPORTUNITY TO MEET AND GREET WORLD LEADERS IN ROTARY**


Mark Maloney (RI President)


Shekhar Mehta (RI President Nominee)


PRIP K.R Ravindran (TRF Trustee Chair 20-21)


PRIP Raja Saboo


PRIP Kalyan Banerjee


Kamal Sanghvi (RI Director, Convenor- RICS)


Dr Bharat Panndya (RI Director, Co- Convenor- RICS)


Gulam A Vahanvaty (TRF Trustee)

**100 YEARS OF ROTARY IN INDIA !**

**100 YEARS OF SERVICE TO MANKIND!**

**Register now !**

*Log on to www.rics2020.org*


PDG Dr. John Daniel
Chairman Commercial Booths & Coordinator Regn. Promotion Kerala and Tamil nadu

*Don't miss the golden opportunity to book your stall at the commercial booth space. Close to the house of friendship, Lounge and Bar.*
*Few Stalls left...*
*Cost per stall : 1 Lakh*
*Complementary advertisement worth Rs. 50000 for each stall in Centennial Souvenir*
*Contact: +91 9249559999, +91 9447022478.*



**Places of Attraction**


Santhinikethan


Howrah Bridge


Victoria Memorial


Birla Mandir


Indian Museum

# அடுத்த வருட மாவட்ட தலைவர்கள்




*RI தலைவர் மார்க் மலோனி, கேய், RID பரத் பாண்ட்யா, மாதவி, RID கமல் சங்வி, சோனல், அறங்காவலர் குலாம் வஹன்வதி ஆகியோர் புதிய மாவட்ட தலைவர்களுடன்.*

*புகைப்படம்: ரஷிதா பகத்*

Regn. No. – TN/CCN/677/2019–2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Rotary News Tamil published on 1st of every month

Log on to **www.rics2020.org** for online registration

Rotary India Centennial Summit 2020

14-16 February 2020 | Kolkata

# Don't miss the opportunity

## 5,000 Rotarians from 40 Countries

### REASONS TO ATTEND



- One of the largest events of Rotary in World.
- Be part of the Presidential Dinner with Mark Maloney & President Nominee Lunch with Shekhar Mehta. An unique opportunity to hear them and dine with them up close.
- Past RI Presidents - Raja Saboo, Kalyan Banerjee, Gary Huang, K. R. Ravindran and John Germ would be there and so would be 5,000 Rotarians from across 40 countries.
- Hear some top-notch speakers in the field of service share their life stories and their trials and tribulations.
- Enjoy the warmth of Kolkata, the City of Joy, the land of Netaji, Tagore & Mother Teresa, a city of literature and art, the place where it all started.

"Rotary started in India, in the city of Kolkata on 1st January, 1920 when Rotary Club of Calcutta, one of the longest continuing Rotary Club in Asia with 100 years of uninterrupted service was chartered in what is today RI District 3291.That's one century of Rotarians improving lives and communities across the nation.

That's definitely something worth celebrating!

The Rotary India Centennial Summit 2020 will mark the celebration of last one century of Rotary service in India. It will be the perfect platform to share and discuss the achievements and impressive success stories with the world and also plan for the future."

Purnendu Roychowdhury
President
Rotary Club of Calcutta

Ajay Agarwal
District Governor
RID 3291

**Register today!**
**www.rics2020.org**

**INDIVIDUAL REGISTRATION**
(Rotary & Inner Wheel)
Till 31-01-2020 **₹ 5,100/-**

**SPOUSE REGISTRATION**
(Rotary & Inner Wheel)
Till 31-01-2020 **₹ 5,100/-**

**SPECIAL PRICE FOR ROTARACTORS ₹ 1,500/-**

## Panel of Advisors


Panduranga Setty
Past RI Director


Ashok Mahajan
Past RI Director


Yash Pal Das
Past RI Director


P T Prabhakar
Past RI Director


Manoj Desai
Past RI Director


C Basker
Past RI Director